உதயன்

ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 21 திங்கட்கிழமை (08.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 347

# கைதிகள் - பொலிஸார் நேற்று வெலிக்கடைச் சிறையில் மோதல்

## 43 பொலிஸார், 5 காவலர்கள் காயமடைந்து வைத்தியசாலையில்

கொழும்பு, நவம்பர் 08

வெலிக்கடைச் சிறைச்சாலைக் கைதிகளுக்கும் பொலிஸாருக்குமிடையில் நேற்றுக் காலை ஏற்பட்ட மோதலில் 43 பொலிஸாரும் ஐந்து சிறைக்காவலர்களும் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இம் மோதல் வெலிக்கடைச் சிறைச்சாலையை ஒரு யுத்த களமாக மாற்றியதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறைச்சாலையில் தண்டனை பெற்ற குற்றவாளிகள் வைக்கப்பட்டிருக்கும் (செப்பல்) பிரிவில் நேற்றுக் காலை அதிரடியாக சோதனை நடத்தும் முயற்சியில் 50 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டனர். அதிரடிச் சோதனைக்கு முன்னர் சிறைக் கைதிகள் அவர்கள் தங்கியிருக்கும் பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

தண்டனை பெற்ற கைதிகள் தங்கவைக்கப்பட்டுள்ள பிரிவில் போதைப்பொருள்கள் மற்றும் சட்டவிரோதமாகக் கையடக்கத் தொலைபேசிகள் பாவிக்கப்படுவதைத் தடுக்கவே இந்த அதிரடிச் சோதனை நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளியேற்றப்பட்ட கைதிகள் அனைவரும் ஒன்றிணைந்து பொலிஸாரை இலக்கு வைத்து ஒரேநேரத்தில் தாக்குதலை ஆரம்பித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. கையில் கிடைத்தவற்றைத் தூக்கி எறிந்து பொலிஸார் (24ஆம் பக்கம் பார்க்க)

## 'மனிக்பாம்' மக்களில் 514 பேர் நேற்றுக் கதிர்காமர் முகாமுக்கு

### மனம் நொந்து சென்றனர் அங்கே

வவுனியா, நவ.8

வவுனியா ''மனிக்பாம்'' முகாம் வலயம் 4 இல் இருந்து 219 குடும்பங்களைச் சேர்ந்த 514 பேர் நேற்று கதிர்காமர் முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர்

அப்பிர தேச கிராம சேவையாளரின் ஏற்பட்டில் அவர்கள் பஸ்கள் மூலம் கதிர்காமர் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் வலுக்கட்டாயமாகப் படையினரால் முகாம் மக்கள் பஸ்களில் மக்களில் ஒருபகுதியினர் ஏற்றிச் செல்லப்பட்டிருந்தனர். ஆனால் நேற்று படையினரின் பிரசன்னம் எதுவும் இன்றி மக்கள் தாமாகவே சென்றனர்.

மக்களை இடம் மாற்றும் இந்தப் பணி (24ஆம் பக்கம் பார்க்க)

யுத்தத்தில் கொல்லப்பட்ட, காணாமற்போனவர்களுக்கு

## மரணச்சான்றிதழ் வழங்கும் சட்ட மூலம் நாளை சபையில்

கொழும்பு, நவ.08

யுத்தம் மற்றும் பயங்கரவாதச் சம்பவங்கள் காரணமாகக் கொல்லப்பட்டோர் மற்றும் காணாமற் போனோரது மரணச் சான்றிதழ்களை வழங்க வழிவகுக்கும் மரணத்தைப் பதிவு செய்யும் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமூலம் நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மரணத்தைப் பதிவு செய்யும் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்ட மூலம் யுத்தத்தால் அல்லது பயங்கரவாதச் சம்பவங்கள் காரணமாக கொல்லப்பட்டு மற்றும் காணாமற்போய் ஒரு வருடம் கடந்த பின்னர் உறவினர்கள் மரணச் சான்றிதழ்களுக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்ட மற்றும் காணாமற் போன புலிகள் இயக்கத் தலைவர்கள் மற்றும் போராளிகளின் பெற்றோர் அல்லது உறவினர்களும் (24ஆம் பக்கம் பார்க்க)

## கடந்து விட்டது 'ஜல்' காலநிலை சீராகும்

கொழும்பு, நவ. 8

வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருந்த தாழமுக்கம் தற்போது இந்தியாவைக் கடந்துள்ளதால் காலநிலை சீராகும் என்று வளிமண்டல வியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த 6 ஆம் திகதி வடக்கு, கிழக்குப் பகுதிகளில் 'ஜல்' புயல் தாக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது இந்தக் காற்றழுத்தம் வங்களா விரிகுடாவுக்கு மேற்காக நகர்ந்து செல்வதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது. (ஒ-10)

## கிழக்கில் கொந்தளித்தது கடல் 450 குடும்பங்கள் இடம்பெயர்வு

கொழும்பு, நவ.08

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பினால் 450 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. மீனவர்கள் பலர் தமது தொழிலையும் இழந்துள்ளனர்.

மூதூர்- கொட்டியாரக் குடாவில் நேற்றுக் காலை ஏற்பட்ட கடல் கொந்தளிப்பினால் தக்வா நகர் மற்றும் ஹபீக் நகர் கிராமங்களைச் சேர்ந்த 450 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்தன.

இடம் பெயர்ந்த குடும்பங்கள் மூதூர் உமர் பாரூக் வித்தியாலயம் மற்றும் தாருல் ஜின்னா வித்தியாலயம் என்பவற்றில் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் இரவு கடல் கொந்தளிப்பு ஏற்பட்டதால் மீனவர்கள் பலர் தமது தொழிலை இழந்துள்ளனர்.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, பாண்டிருப்பு, மருதமுனை, பெரியநீலாவணை போன்ற (24ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

**கொழும்பு மற்றொரு 'லாஸ் வெகர்'**
அமெரிக்காவின் 'லாஸ் வெகர்'நகரம்போல் கொழும்பு
பக்கம் 3

**வலிகளைப் பேசமுனைதல்**
கட்டுரை அலசுகிறது
பக்கம் 13

**சாவகச்சேரியில் 50 கட்டடங்கள் இடிப்பு**
வீதி அகலிப்பின் போது சாவகச்சேரியில் 50 கட்டடங்கள் இடிக்கப்படும்.
பக்கம் 06

**கிளாரியைத் துரத்தும் பூகம்பம்**
கிளாரியின் வெளிநாட்டுப் பயணங்களின் போது பூபம்பங்களில் சிக்குகிறார்.
பக்கம் 20

## நீதிமன்றக் கட்டடம் ஜனாதிபதி திறந்துவைப்பு

கொழும்பு, நவ. 08

தங்காலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தங்காலை நீதிமன்றக் கட்டடத் தொகுதியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை திறந்துவைத்தார்.

அம்பாந்தோட்டை மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 35 கோடி 80 லட்சம் ரூபா செலவில் (24ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் ஆலயச் சூழலில் மாலைவேளை கந்த சஷ்டியை முன்னிட்டு வீதித் தடைகள்

### மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு மேயர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.8

நல்லூர் ஆலயச் சூழலில் உள்ள வீதிகளில் எதிர்வரும் வியாழக்கிழமை வரை உற்சவ காலத்தைப் போன்ற வீதித் தடைகள் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் போடப் பட்டு வருவதாக யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது:-

தற்போது நல்லைக் கந்தன் ஆலயத்தில் கந்த சஷ்டி திருவிழா ஆரம்பமாகியுள்ளதால் திருவிழா நடைபெறும்(24ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச்சுடர்**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான தமிழ் I, II, II, வினாத்தாள்கள்.

## குவைத்திலிருந்து மேலும் 113 பேர் இலங்கை வருகை

கொழும்பு, நவ.08

குவைத் நாட்டில் பணிபுரியச் சென்று பல இன்னல்களை அனுபவித்த மேலும் 113 இலங்கையர்கள் நேற்று நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதில் 8 ஆண்களும், 105 பெண்களும் அடங்குகின்றனர் என (24ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் மன்னார் மாவட்டத்திலும் இடம்பெறவேண்டும்

### ஆயர் இராயப்பு ஜோசப் அவசரக் கடிதம் அனுப்பினார்

கொழும்பு, நவ. 08

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் விசாரணைகள் மன்னார் மாவட்டத்திலும் இடம்பெற வேண்டும் - என்று மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஆணைக்குழுவுக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் நாட்டின் பல பாகங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு உள்ளிட்ட பல பகுதிகளில் ஆணைக்குழுவினால் நடத்தப்பட்டிருக்கும் விசாரணைகளில் பொதுமக்கள் சாட்சியங்களை அளித்துள்ளனர்.

அத்துடன், இதுதவிர வவுனியா, (24ஆம் பக்கம் பார்க்க)

## கணினி மயப்படுத்தப்பட்ட அ'அட்டைகள் விரைவில்

கொழும்பு, நவ. 08

நாட்டின் சகல பிரஜைகளுக்கும் கணினி மயப்படுத்தப்பட்ட நவீன தேசிய அடையாள அட்டைகள் விரைவில் விநியோகம் செய்யப்பட உள்ளன - என்று ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளர் ஜகத் விஜேவீர தெரிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டை (24ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தின் உண்மைநிலையை வெளிப்படுத்தவே சுதந்திரத்துக்கான பெண்கள் அமைப்பு விஜயம் செய்துள்ளது

## அதன் தேசிய அமைப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், நவ.8

''வடக்கின் வசந்தம்'' என்ற பெயரில் யாழ். மாவட்டத்தில் உண்மையில் நடப்பது என்ன? என்பதை தெற்கு வாழ்மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்காகவே நாம் 'சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பு' என்ற குழுவில் இணைந்து வடக்கு மாகாணத்துக்கு முதற் கட்டமாக வந்துள்ளோம் - என சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பின் தேசிய அமைப்பாளர் திருமதி சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்

நேற்றைதினம் பி.ப. 3 மணியளவில் ''திலக் லொட்ஜ்'' இல் சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பினர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது-

வன்னியில் ஏற்பட்ட போரின் விளைவாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் அதிகமானோர் பெண்களே. இவர்களது பிரச்சினைகளுக்கான தீர்வுகள் என்ன? அதை எவ்வாறு பெற்றுக்கொடுக்க முடியும்? என்பதைக் கண்டறிவதே எமது நோக்காகும்.

பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட ஆதாரங்களின் பிரகாரம் போர் காரணமாக ஒரு இலட் சத்துக்கு மேற்பட்டோர் இளம் விதவைகளாகியுள்ளனர். இது தவிர காணாமற் போனோர், பெற் றோரை இழந்த பிள்ளைகள் என் போர் போர் காரணமாக அதிக மாக உருவாகியுள்ளனர். இது சம் பந்தமாக தெற்கு ஊடகங்கள் பல வும் உண்மையற்ற தகவல்க ளையே வெளிப்படுத்துகின்றன. ஏனெனில் நாம் கடந்த இரண்டு நாள்களாக கல்மடு, விசுவமடு, ஜம்புக்குளம், தர்மபுரம், கிளிநொச்சி ஆகிய இடங்களுக்கு நேரடியாகச் சென்று சம்பந்தப் பட்டவர்களுடன் கலந்துரையாடினோம்.

நலன்புரி நிலையங்களில் இருந்து மீள்குடியேற்றம் செய்யப் பட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருள்கள் சிலருக்கு வழங்கப்படாமல் உள்ளன. வழங்கப்படும் உணவுப் பொருள்கள் கூடப் பழுதடைந்தவையாகவே இருக்கின்றன. அத்துடன் வீதிகளில் சுதந்திரமாக நடமாட முடியாதளவுக்கு பல தரப்பட்ட மனித உரிமை மீறல்கள் அங்கு இடம் பெறுகின்றன. உளரீதியாக மக்கள் பெரிதும் பாதிப்படைந்து இருப்பதையும் நேரடியாக அவதானிக்க முடிந்தது.

அத்துடன் பயிர்ச் செய்கைகளுக்குப் பயன்படுத்திய விளைநிலங்கள் கைவிடப்பட்டு வெறுந் தரைகளாக மாறியுள்ளன. சுகாதார வசதியீனம், குடி தண்ணீர் பிரச்சினை, மலசல கூட வசதியின்மை, கல், கூரைகள் அற்ற வீடுகளில் தங்கியிருப்பதனால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு வன்னி மக்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. கல்வியும் அவர்களுக்கு உரியமுறையில் கிடைப்பதில்லை.

இவற்றில் அதிகம் பாதிக்கப்பட் டவர்கள் பெண்கள்தான். எனவே இவ் வாறான பாதிக்கப்பட்ட பெண்கள் மீது புதிய பார்வை ஒன்றினை அரசிடம் ஏற்படுத்தி சம்பந்தப் பட்டவர்களுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதே எமது நோக்கமாகும்.

தற்போது முதற்கட்டமாகக் காணமல் போனவர் பற்றிய விவரங்களை திரட்டி வருகிறோம். அவர்களுக்கான தீர்வினைப் பெற்றுக் கொடுக்கவுள்ளோம் - என்றார்.

இக்கலந்துரையாடலில் சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பின் தலைவி செல்வி திமுது அட்டிகல, நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் திருமதி தனுஜா டிசில்வா, செல்வி கிருஷ்ணன் மற்றும் பாதிக்கப்பட்ட பெண்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-313-311)

## யாழ்.நகரில் நேற்றுப் புதையுண்ட லொறி

வலி.வடக்கு,நவ.8

பொலநறுவையிலிருந்து யாழ். நகருக்கு விறகு ஏற்றிவந்த லொறி ஒன்றின் சில்லுகள் புதைந்ததால் அது குடைசாயும் நிலைமை ஏற் பட்டது.



யாழ்ப்பாணம், கண்டி வீதியில் எதிரே வந்த வாகனத்துக்கு வழி விட முயன்றவேளையிலேயே இந்த லொறி புதையுண்டது. யாழ்.நகரின் பஸ்தியான் சந்திப் பகுதியிலேயே இந்த விபத்து நேற்று நடந்தது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் இதன்போது ஏற்பட விருந்த அனர்த்தம் தவிர்க்கப்பட்டது. (எ-86)

### தமிழ்த் தினப் போட்டிகள் கொழும்பில்

## தேசிய மட்ட விவாதப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரிக்கு முதலிடம்

யாழ்ப்பாணம்,நவ.8

கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரியில் நேற்று இடம் பெற்ற தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் விவாதப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி முதலிடம் பெற்றது.

தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் எழுத்தாக்க, விவாதப் போட்டிகள் இடம் பெற்றன.

இந்தப் போட்டிகளில் விவாதப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி வெற்றி பெற்றது. நீண்ட காலத்தின் பின் இந்த வெற்றி கிடைத்துள்ளது.

க.உமாசங்கர், சு.சாரங்கன், அ.உமாகரன் ஆகியோர் இந்தப் போட்டியில் பங்குபற்றினர். இவர்களுக்குப் பொறுப்பாக ஆசிரியர்களான ஆ.நவநீதகிருஷ்னண், வா.சிவராசா ஆகியோர் சென்றுள்ளனர்.

விவாதப் போட்டியில் 2 ஆம் இடத்தை ஊவா மாகாண பூனா கலை ம.வி. பெற்றது.

தேசிய மட்டப் போட்டிகளில் குழு நிலை, தனிநபர் போட்டிகள் எதிர்வரும் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம் பெறவுள்ளன. (ஒ-ஐ)

## துணைத் தூதர்கள் நியமனம்

யாழ்ப்பாணம்,நவ.8

யாழ்ப்பாணத்தில் இம்மாதம் திறக்கப்பட உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் உதவித் தூதுவராக தமிழ் நாட்டைச் சேர்ந்த வி.மகாலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவினால் இம்மாத இறுதியில் யாழ்ப்பாணத்திலும், அம்பாந் தோட்டையிலும் இந்தியத் துணைத் தூதரகங்கள் திறக்கப்பட உள்ளன.

அம்பாந்தோட்டையில் அமையவுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் உதவித் தூதுவராக கர்நாடகத்தைச் சேர்ந்த மோகன் குமாரன் நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## வலிகாமம் வலய அலுவலகத்தின் மாடிக்கட்டடப் பணிகள் ஆரம்பம்

சுன்னாகம்,நவ.8

மருதனார்மடத்தில் அமைந்துள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தின் மாடிக் கட்டட அமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது கீழ்த் தளத்தில் வலயக் கல்வி அலுவலகம் இயங்கி வருகிறது. மாடிக் கட்டடம் கட்டி முடிக்கப்படாத நிலையில் இருந்தது.

தற்போது இக்கட்டடம் புனரமைக்கப்படுவதுடன் இரண்டாம் மாடியும் அமைக்கப்படவுள்ளது.

இக்கட்டடங்களில் முதலாம் மாடியில் வடமாகாண கல்வித் திணைக்களமும், இரண்டாம் மாடியில் வடமாகாண கல்வி பண்பாட்ட லுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சும் இயங்கவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது திருகோணமலையில் கிழக்கு மாகாணசபைக்குச் சொந்தமான இடத்தில் வடமாகாண கல்வித் திணைக்களமும், அமைச்சு அலுவலகமும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-38)

## கிழக்கில் புயல் அபாயம் நீங்கினாலும் கடல் கொந்தளிப்பால் மீனவர் பாதிப்பு

மட்டக்களப்பு,நவ.8

கிழக்கில் புயல் அபாயம் நீங்கியுள்ளபோதும், கடுமையான கடல் கொந்தளிப்பு நிலைமை காணப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

கிழக்கு கடற்பரப்பில் நிலை கொண்டிருந்த தாளமுக்கம் யாழ்ப்பாணத்தைக்கடந்து 200 கிலோமீற்றருக்கு அப்பால் தென்னிந்தியாவை நோக்கி சென்றுள்ளதால் கிழக்கில் புயல் அச்சுறுத்தல் முற்றாக நீங்கியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட வானிலை அவதான நிலைய பொறுப்பதிகாரி எஸ்.சூரியகுமார் தெரிவித்தார்.

இருந்த போதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடுமையாக காற்று வீசி வருகிறது. கடல் கொந்தளிப்புடன் கடல் பேரிரைச்சலுடன் காணப்படுகின்றது. மீனவர்கள் தொடர்ந்தும் கடலுக்குச் செல்வதை தவிர்த்து வருகின்றனர்.

கடல் நீர் கரையோரப் பிரதேசங்களை நோக்கி உட்புகுவதை அவதானிக்க முடிகின்றது. நேற்று மாலை பாண்டிருப்பு, மருதமுனை, துறை நீலாவணை பகுதிகளில் கடல் நீர் உட்புகுந்தமையினால் மீன்பிடிப் படகுகள் பல சேதமடைந்தன.

கடல் தொடர்ந்தும் பேரிரைச்சலுடன் காணப்படுகின்றது. இதனால் மீனவர்கள் தொடர்ந்தும் தொழிலுக்குச் செல்லாததால் பாதிக்கப் பட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் சுமார் 23 ஆயிரம் குடும்பங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-21)

## சுனாமி பீதியால் உறைந்துபோயிருந்த முல்லைத்தீவு கரையோரப் பகுதி மக்கள்

### 'ஜல்' அறிவிப்பால் நித்திரையின்றி அவர்கள் தவிப்பு

முல்லைத்தீவு,நவ.8

வடக்கை 'ஜல்' புயல் தாக்கும் என்றும் அறிவிக்கப்பட்டதால் முல்லைத்தீவு கரையோர மக்கள் சுனாமி ஏற்படக்கூடும் என்ற அச்சத்தில் உறைந்திருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 6ஆம் திகதி தொடக்கம் 'ஜல்' புயல் தொடர்பான எச்சரிக்கை வளிமண்டலவியல் திணைக்களத்தால் விடுக்கப்பட்டு வந்ததால் பொதுவாகவே வடக்கு, கிழக்கின் கரையோரப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எச்சரிக்கையுடன் இருந்தனர்.

கடும் காற்று, மழை வீசும் என எதிர்பார்த்திருந்த அவர்கள் மந்தமான காலநிலை நீடித்ததால் 'சுனாமி' அச்சம் தொற்றிக் கொண்டது.

சில தினங்களாக இரவுவேளைகளில் நித்திரையின்றி முல்லைத் தீவு கரையோரப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்கள் விழித்திருந்துள்ளனர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு இது போன்ற காலநிலை நிலவிய போதே சுனாமி ஏற்பட்டு ஆயிரக் கணக்கான மக்களின் உயிர்களைக் காவுகொண்டது.

இந்தப் பயங்கரத்தால் இது வரை மீளாத நிலையில் மீண்டும் ஒரு சுனாமி ஏற்பட்டுவிடுமோ என்ற பேரச்சத்தில் இந்த மக்கள் இருந்தனர் என்று தெரிவிக்கப் பட்டது. (ஒ-10)

## நடமாடும் சேவை நிலையத்தை நிறுவுமாறு கொடிகாமம் கால்நடை வளர்ப்போர் கோரிக்கை

கொடிகாமம்,நவ.8

கொடிகாமம் பிரதேசத்தில் மிருக வைத்தியர் அலுவலகத்தின் நடமாடும் சேவை நிலையம் ஒன்றை நிறுவுமாறு பிரதேச கால்நடை வளர்ப்பாளர்கள் கோரியுள்ளனர்.

கொடிகாமம், வரணி, மிருசுவில், விடத்தற்பளை, கச்சாய் பிரதேச மக்கள் சாவகச்சேரியில் இயங்கும் மிருக வைத்தியர் அலுவலகத்துக்கு தமது கால்நடைகளைச் சிகிச்சைக்காகக் கொண்டு செல்கின்றனர். எனினும் அங்கு செல்வதில் பல சிரமங்களை அவர்கள் எதிர்நோக்குகின்றனர்.

கூடியதூரம், கால்நடைகளுக்கு திடீரென ஏற்படும் நோய்களுக்கு சிகிச்சையளித்தல் போன்ற விடயங்களில் தாம் இடர்ப்படுவதாக கால் நடை வளர்ப்போர் தெரிவிக்கின்றனர்.

எனவே வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாள்களுக்காவது நடமாடும் மிருக வைத்தியர் சேவை நிலையத்தை கொடிகாமம் பிரதேசத்தில் பொருத்தமான ஒரு இடத்தில் நிறுவி உதவுமாறு தென்மராட்சி கிழக்கு பிரதேச கால்நடை வளர்ப்போர் வேண்டியுள்ளனர். (எ-122)

## தரம் 9 மாணவர்களுக்கு மாகாண மட்டப் பரீட்சை

தரம் 9இல் கல்வி பயிலும் மாணவர்களுக்காக நடத்தப்படும் மாகாண மட்டப் பரீட்சைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளன. தமிழ் மொழி, ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், வரலாறு ஆகிய பாடங்களுக்கு இப்பரீட்சை நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்குத் தோற்றுவோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இதேவேளை க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பிரதான பாடங்களுக்கான மூன்றாந் தவணைப் பரீட்சையும் வட மாகாண கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ளன. இப்பரீட்சையும் எதிர்வரும் 18ஆந் திகதி ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-38)

## பரிசளிப்பு விழா

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலய அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் ஸ்தாபகர் மூத்தவி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும், சிறப்பு விருந்தினராக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் ப.சீவரத்தினமும்,கௌரவ விருந்தினராக முன்னாள் அதிபர் திருமதி லோ. இரகுபதியும் கலந்து கொள்வர். நிறுவுநர் நினைவுப் பேருரையை கீரிமலை நகுலேஸ் வர மகா வித்தியாலய அதிபர் சு.ஸ்ரீகுமரன் நிகழ்த்துவார். (ஒ-38)

## ஜனாதிபதி மஹிந்தவின் பிறந்தநாளுக்காக ஒரு லட்சம் மரங்கள் நடுகிறார் பிள்ளையான்

மட்டக்களப்பு,நவ.8

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிஏற்பு வைபவத்தை யொட்டியும், ஜனாதிபதியின் பிறந்த நாளை முன்னிட்டும் கிழக்கு மாகாணத்தில் ஒரு இலட்சம் மரங்கள் நடப்படவுள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.



மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இம்மரங்கள் நடப்படவுள்ளன.

மாகாண ஆளுநர், முதலமைச்சர், மாகாண அமைச்சர்கள், மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் ஆகியோரின் பங்களிப் புடன் இம்மர நடுகை வைபவங் கள் இடம் பெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதுதொடர்பாக மட்டக்களப்பு முதலமைச்சர் அலுவலகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு இடம் பெற்றது. எதிர்வரும் 15ஆம் திகதி இம்மரம் நடுகை கிழக்குமாகாணம் முழுவதும் இடம்பெறவுள்ளதாக முதலமைச்சர் அங்கு தெரிவித்தார். (ஒ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைகளுக்கு உட்பட்ட 7,000 கி.மீ. வீதிகளைப் புனரமைக்க ரூ. 7,000 கோடி நிதி

கொழும்பு,நவ.08

மாகாணசபைகளின் நிர்வாகத்தின் கீழ் உள்ள சுமார் 7,000 கிலோமீற்றர் நீள மான வீதிகளை எதிர்வரும் 3 வருடங் களுக்குள் புனரமைப்பதற்கு அரசு நட வடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக 7,000 கோடி ரூபா ஒதுக்கப் படவுள்ளது என அமைச்சர் பஸில் ராஜ பக்ஷ மொனராகலையில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத் தில் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களின் பாதைகள் இத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள் ளன. ஒரு கிலோ மீற்றர் நீளமான பாதைக்கு காபட் இடுவதற்கு ஒரு கோடி 20 லட்சம் ரூபாவரை செலவாகும். இதன்பிரகாரம் ஆயிரம் கிலோ மீற்றர் பாதைக்கு காபட் இடுவதற்காக ஒரு மாகாணசபைக்கு 10,000 மில்லியன் ரூபாவுக்கு மேல் செலவிடப்படும் - இப்படி பஸில் தெரி வித்தார்.

மொனராகலையில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத் தில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, ஊவா மாகாண முதலமைச்சர் சசீந்தர ராஜபக்ஷ, மொனராகலை மாவட்டச் செயலாளர் யூ.கே. எஸ். மிகுந்துகுல சூரிய உள்ளிட்ட பலர் கலந்து கொண் டனர். (சி)

## வெலிக்கடைச் சிறைச்சாலையில் 13 'செல்போன்கள்' மீட்பு

வெலிக்கடை சிறைச்சாலையில் கடந்த வார இறுதியில் இரவுவேளையில் சிறைச் சாலை அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சோதனையின்போது கைதிகளிடமிருந்து சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான 13 கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப் பட்டுள்ளன. ஆயுட்கால சிறைத்தண் டனை விதிக்கப்பட்ட கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும்'செப்பல்' மண்டபத்தி லேயே இத்தொலைபேசிகள் கைப்பற் றப்பட்டன.

இவற்றுள் ஒரு தொலைபேசி 35,000 ரூபாவுக்கு மேல் பெறுமதி வாய்ந்த நவீ னரகமானது. ஏனையவை ஒவ்வொன்றும் 15,000 ரூபாவுக்கு மேல் பெறுமதி கொண் டவை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி விரைவில் இலங்கை விஜயம்

கொழும்பு, நவ. 08

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆஸிப் அலி சர்தாரி விரைவில் இலங்கைக்கான தமது கன்னி விஜயத்தை மேற்கொள்ளவுள் ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வரும் அவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பாதுகாப்பு மற் றும் வர்த்தக ஒத்துழைப்புத் தொடர்பான பேச்சுகளை மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் நவம்பர் 19ஆம் திகதி ஜனா திபதி மஹிந்த தனது இரண்டாவது பத விப் பிரமாணத்தை எடுத்துக்கொள்ள வுள்ளார். இந்நிலையில் இலங்கைக்கு வரும் முதலாவது வெளிநாட்டுத் தலை வர் பாகிஸ்தான் ஜனாதிபதி என்பது குறிப் பிடத்தக்கது.

ஜனாதிபதி சர்தாரியுடன் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஷா மஹ்முத் குரைஷி மற்றும் அந்நாட்டு வர்த்தகப் பிர முகர்களும் விஜயம் செய்யவுள்ளனர்.

பாகிஸ்தான் ஜனாதிபதியின் விஜயம் குறித்த திகதி மற்றும் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக இரு நாடுகளுக்கிடையில் இராஜதந்திர மட்டத்திலான பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன என வெளி விவகார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

# தலவாக்கலை தமிழ் ம.வி.க்கு நேற்று இந்தியத் தூதுவர் மினிபஸ் அன்பளிப்பு



தொழிலாளர் தேசிய சங் கத்தின் தலைவரும் நுவரெ லியா மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான திகாம்பரத்தின் வேண்டு கோளுக்கேற்ப இந்தியத் தூதரகத்தினால் தலவாக் கலை தமிழ் மகா வித்தி யாலய மாணவர்களின் நலன் கருதி மினிபஸ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பஸ்ஸை உத்தி யோகப்பூர்வமாக பாட சாலைக்குக் கையளிக்கும் நிகழ்வு நேற்று ஞாயிற் றுக்கிழமை தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் இந்திய தூதுவர் அசோக்.கே. காந்தா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ ப.திகாம்பரம் தொழிலாளர் தேசிய சங் கத்தின் பிரதித்தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான எம்.உதயகுமார், இலங்கைக்கான இந் தியத் தூதரகத்தின் அரசியற்பரிவு முதன் மைச்செயலாளர் ஸ்ரீவஸ்தா ஆகியோர் மாலை அணிவிக் கப்பட்டு அழைத்து வரப்பட்டனர்.

அதன் பின்பு பஸ்ஸை பாடசாலை அதிபர் கிருஷ்ணசாமியிடம் இந்தியத் தூதுவர் கே. காந்தா வழங்கினார்.

# கொழும்பு மற்றொரு 'லாஸ் வெகர்ஸ்'

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.08

அமெரிக்காவின் லாஸ் வெகாஸ் களி யாட்ட நகரைப்போல் கொழும்பு நக ரைக் களியாட்ட நகரமாக்க அரசு முயற்சி செய்கிறது என ஜே.வி.பி. குற்றம்சாட் டியது.

கொழும்பிலிருந்து மக்களை விரட்டி யடிப்பதற்கு எதிரான மக்கள் கூட்டமைப் பின் செய்தியாளர் மாநாடு நேற்று கொழும்பு மருதானை சி.எஸ்.ஆர். மண் டபத்தில் இடம்பெற்றது. ஜே.வி.பி. கொழும்பு மாவட்ட எம்.பி.சுனில் ஹந் துன்நெத்தி அங்கு தகவல் தருகையி லேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:- கொழும்பு நகரிலிருந்து சேரிவாழ் மக் களை வெளியேற்றும் நடவடிக்கை களை அரசு தற்போது மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது. இப்பகுதிகளில் உல் லாச விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் கெஸினோ போன்ற சூதாட்டங் களை நடத்துவதற்கு அனுமதி வழங்கும் வகையில் சட்ட திருத்தங்கள் மேற்கொள் ளப்படவுள்ளன.

கொழும்பில் சிவப்பு விளக்குப் பகுதி களை உருவாக்கி விபசாரத்தை சட்ட ரீதி யாக்கவும் அரசு நடவடிக்கை மேற்கொண் டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு எதி ராக ஜே.வி.பி. வீதிகளில் இறங்கிப் போராடும் - எனவும் ஹந்துன்நெத்தி தெரி வித்தார். (சி)

# பல லட்சம் ரூபா தங்க நகைகள் பலாங்கொடையில் கொள்ளை!

## ஆயுததாரிகளின் கைவரிசையில் ஒருவர் காயம்

கொழும்பு, நவ. 08

பலாங்கொடை நகரிலுள்ள தங்க ஆப ரண விற்பனை நிலையம் ஒன்றில் இனந் தெரியாத ஆயுததாரிகளால் நேற்று பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் ஆயுதமுனையில் கொள்ளை யிடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப் படுகிறது.

இந்தச் சம்பவம் நேற்றுமாலை 6.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்று பலாங்கொடைப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

குறித்த விற்பனை நிலையத்துக்குத் துப்பாக்கி சகிதம் மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் அங்குள்ளவர்களை ஆயுதமுனையில் அச்சுறுத்திவிட்டு, பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆப ரணங்களைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

ஆயுததாரிகளில் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் விற்பனை நிலையத்தில் இருந்த ஒருவர் காய மடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படு கிறது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பலாங்கொடைப் பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இடம்பெயர்ந்தவர்கள் அனைவரும் விரைவில் மீள்குயேற்றப்படுவர்

## அமைச்சர் பஸில் தெரிவிப்பு

கொழும்பு, நவ.08

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந் துள்ள மக்கள் அனைவரும் வெகுவிரை வில் மீண்டும் தத்தமது பிரதேசங்களில் மீள்குடியமர்த்தப்படுவார்கள் - என பொரு ளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யுனிசெப் அமைப்பினால் 3 கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் இலங் கைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன. இது தொடர்பாக அலுவலகத்தில் இடம் பெற்ற வைபவமொன்றில் உரையாற்று கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் ரிஷாட் பதியுதீன், இரா ணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜென ரல் ஜகத் ஜயசூரிய மற்றும் யுனிசெப் அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்ட சிலர் இந்த நிகழ்வில் கலந்துகொண் டனர்.

மிகக் குறைந்தளவு மக்களே மீள்குடியம ர எஞ்சியிருக்கின்றனர். விரைவில் அவர்களும் மீள்குடியமர்த்தப்படுவார் கள். மிகக்குறுகிய காலத்திற்குள் மக்களை மீள்குடியமர்த்திய நாடு என்ற உலக சாதனையை நிகழ்த்தி இலங்கை பெருமை யடைய முடியும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இராணுவ டிராக்டர் மோதி குடும்பஸ்தர் உயிரிழப்பு

கொழும்பு,நவ. 08

கொழும்பு- கண்டி பிரதான வீதியில் ஒரே திசையில் பயணித்துக்கொண்டி ருந்த இராணுவ டிராக்டர், தனியார் சொகுசுபஸ், மோட்டார் சைக்கிள் ஆகி யவை மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம் பவ இடத்திலேயே மரணமானார். கடந்த வியாழக்கிழமை இரவு 8 மணியளவில் வேவல்தெனிய சந்தியின் அருகில் இவ் விபத்து நடந்துள்ளது.

மினுவாங்கொட பிரதேச கிராமம் ஒன் றைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு மரணமாகியுள்ளார். இவர் ஜா- எலயில் உள்ள சீன நிறுவனமொன்றில் தண் ணீர் பவுசர் சாரதியாகப் பணியாற்றி யவர். (சி)

# முத்தையன்கட்டு வாவிக்கு அருகில் புதையல் தோண்டிய இராணுவ அதிகாரிகள்

## கூண்டோடு சிக்கினர் காவல்துறையிடம்

கொழும்பு, நவ. 8

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான், முத் தையன்கட்டு பிரதேசங்களில் புதையல் தோண்டிய இராணுவ லெப்டினன்ட் உள்ளிட்ட ஏழு பேரை காவல்துறை யினர் கைது செய்துள்ளனர்.

முத்தையன்கட்டு வாவிக்கு அருகில் அமைந்துள்ள வரலாற்று சிறப்பு மிக்கப் பிரதேசத்தில் இந்தப் புதையல் திருட்டு முயற்சி இடம்பெற்றுள்ளது.

குறித்த பிரதேசத்தில் டெம்பட்ட விஹாரை ஒன்று காணப்பட்டதாக சிங் கள மக்கள் சுட்டிக்காட்டியுள்ளது. புதையல் திருடும் நோக்கில் பதினான்கு அடி ஆழத்திற்கு குழி தோண்டிக் கொண் டிருந்த வேளையில் காவல்துறையினர் இராணுவ அதிகாரிகளைக் கைது செய் துள்ளனர்.

மாந்திரீகர் மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்த வேளையில் காவல்துறை யினர் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை மடக்கிப் பிடித்துள்ளனர்.

லெப்டினன்ட் துணை லெப்டினன்ட் மற்றும் சயன் ஆகிய பதவிகளை வகிக் கும் உயர் இராணுவ அதிகாரிகளும் இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர் கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர்களை மிரட்டுகிறார் கருணாநிதி

## ஜெயலலிதா ஆவேசக் குற்றச்சாட்டு

சென்னை, நவ. 08

முதல்வர் கருணாநிதி ஊடக வியலாளர்களை மிரட்டுகிறார். அவர் வெளியிடும் அறிக்கை, ஆளும் கட்சியின் அவலங்களை, அராஜகங்களைச் சுட்டிக் காட்டும் பத்திரிகைகளுக்கு மிரட்டல் விடுவதுபோல் அமைந்துள்ளது. இது பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் செயல் - என்று அ.தி.மு.கவின் பொதுச் செயலர் ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சிறப்பாக பராமரிக்கப்படுகின்றன என முதல்வர் கருணாநிதி பெருமைப்படுவது நகைப்புக்குரியதாக உள்ளது. அத்துடன், நடுநிலைப் பத்திரிகையாளர்களை மிரட்டும் வகையில் உள்ளது. பொதுவாக, அண்டை மாநிலங்களை ஒப்பிட்டு புள்ளி விவரங்களை அளிக்கும் கருணாநிதி, இம்முறை மும்பை, டில்லி, கொல்கத்தா போன்ற நகரங்களுடன் ஒப்பிட்டு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இதன் மூலம் அரசின் பதவிக்காலம் முடிவதற்குள், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், இலங்கை போன்ற அண்டை நாடுகளுடன் ஒப்பிடும் நிலை ஏற்படும் என்பதை அவர் சூசகமாக உணர்த்தியிருக் கிறார். தமிழகத்தில் இதுவரை இல்லாத ஒன்றாக பெற்றோரே குழந்தைகளைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்கின்ற அளவிற்கு சட்டம் - ஒழுங்கு சீரழிந்து இருக்கின்றது.

ஆள் கடத்தலில் ஈடுபட்ட என்.கே.கே.பி.ராஜாவை, அதிகார துஷ்பிரயோகம் மூலம் அந்த வழக்கிலிருந்து விடுவித்து அவருக்கு மீண்டும் மாவட்டச் செயலர் பதவி கொடுத்ததிலிருந்தே கடத் தலை கருணாநிதி ஊக்குவிக் கிறார்; சட்டம் - ஒழுங்கு முற்றிலும் சீரழிந்து விட்டன என்பதை மக்கள் எளிதில் புரிந்து கொள்வர்.

இச்சூழலில், சட்டம் - ஒழுங்கு பிரமாதம் என பத்திரிகைகள் செய்தி வெளியிட வேண்டும் என கருணாநிதி எதிர்பார்ப்பது எந்த விதத்தில் நியாயம்? ஒருவேளை, தன் மக்கள் பாதுகாப்பாக இருக்கின்றனர் என்ற அடிப்படையில் பத்திரிகைகள் செய்தி வெளியிட வேண்டும் என கருணாநிதி நினைக் கிறார் போலும்.

கருணாநிதி வெளியிடும் அறிக்கை, ஆளும் கட்சியின் அவலங்களை, அராஜகங்களைச் சுட்டிக் காட்டும் பத்திரிகைகளுக்கு மிரட்டல் விடுவது போல் அமைந்துள்ளது. இது பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் செயல்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிரந்த எழுத்துருக்களில் தமிழ்: கருணாநிதி ஆட்சேபக் கடிதம்



சென்னை, நவ. 08

கிரந்த எழுத்துக்களை யுனிகோட் வடிவத்தில் மாற்றுவதற்கான பரிந் துரையில் ஐந்து தமிழ் எழுத்துக்களும் சேர்க்கப்பட்டிருப்பது பற்றி மத்திய அமைச்சர் ர்ாஜாவுக்கு தமிழக முதல்வர் கருணாநிதி ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டி ருப்பவை வருமாறு-


இந்தியப் பாரம்பரிய எழுத்துக்களான சமஸ்கிருதம் மற்றும் கிரந்தத்தின் எழுத்துருக்களை உருவாக்க, யுனிகோட் கூட்டமைப் புக்கு மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பத் துறை பரிந்துரை செய்துள்ளது என தமிழக அரசின் கவனத்துக்கு வந்துள்ளது. இந்தப் பரிந்துரை, உலகம் முழுவதும் உள்ள தமிழ் சமுதாயத்திடையே கவலையை ஏற்படுத்தி உள்ளது.

பரிந்துரையைச் சமர்ப்பிப்பதற்கு முன், தமிழறிஞர்களிடையே தேவையான அளவு கலந்தாலோசிக்கப்படவில்லை என அவர்கள் குறிப்பிடுகின்றனர். குறிப்பாக, கிரந்த எழுத்துருக்களில் ஐந்து தமிழ் எழுத்துக்கள் சேர்க்கப்பட்டிருப்பது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதன் எதிரொலியாக, தமிழக நிதியமைச்சர் அன்பழகன், உயர்கல்வி அமைச்சர் பொன்முடி மற்றும் மூத்த அமைச்சர்கள், முன்னாள் துணைவேந்தர் வா.செ.குழந்தைசாமி, கவிஞர் வைரமுத்து, கனிமொழி எம்.பி., சிங்கப்பூரைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்பத் துறை வல்லுநர் அரவிந்தன் உள்ளிட்டோர் அடங்கிய ஆலோசனைக் கூட்டத்தை கடந்த 4ஆம் தகிதி நடத்தினேன்.

இந்தக் கூட்டத்தில், அந்தப் பரிந்துரையை இறுதி செய்வதற்கு முன் பரந்துபட்ட ஆலோசனை மேற்கொள்ளப்பட வேண்டும் என ஒருமித்தகருத்து எழுந்தது. இதுதொடர்பான ஆலோசனை நடத்தி, பரிந்துரையை அளிக்க தமிழக அரசு ஓர் உயர்மட்டக் குழுவை அமைக்க உள்ளது. மத்திய அரசு அளித்துள்ள பரிந்துரை யுனிகோட் கூட்டமைப்புக்குச் சென்றுவிட்ட நிலையில், அந்தப் பரிந்துரையின் மீது முடிவெடுப்பதை ஒத்திவைக்கும்படி கூட்டமைக்கு மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சரான நீங்கள் அறிவுறுத்த வேண்டும். இதுதொடர்பான முன்னேற்றங்களை எனக்குத் தெரிவித்தால் மகிழ்வேன். - இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்பாடு...



வணக்கம்: இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்துவரும் அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமாவும் அவரது துணைவியார் மிச்சேல் ஒபாமாவும் மும்பையில் உள்ள பாடசாலைச் சிறுமிகளுக்கு வாழ்த்துத் தெரிவிக்கின்றனர்.

# ஈழத் தமிழ் அகதி மீது தாக்குதல் தூத்துக்குடி முகாமில் சம்பவம்

தூத்துக்குடி, நவ. 08

தூத்துக்குடி ஈழத் தமிழ் அகதிகள் முகாமுக்குள் புகுந்த வெறிகும்பல் ஒன்று ஈழ அகதி ஒருவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையைச் சேர்ந்தவர் நந்தகுமார் (வயது - 42). இவர், குடும்பத்தினருடன் தூத்துக்குடி மாவட்டம் குளத்துவாய்பட்டி அகதிகள் முகாமில் வசித்துவருகிறார்.

கடந்த வெள்ளியன்று மதியம் முகாமிற்கு வந்த வெளிநபர்கள் சிலர், நந்தகுமாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு அவரை தாக்கினர். அதில், காயமடைந்த நந்தகுமார், கோவில்பட்டி அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

முன்விரோதத்தில் சம்பவம் நடந்திருக்கலாம் எனத் தெரிகிறது.

இந்தச் சம்பவம் குறித்து எட்டயபுரம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இந்தியச் செய்திகள்

# தமிழகக் கடலோரத்தில் ரோந்து

இராமநாதபுரம், நவ. 08

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் வருகையை முன்னிட்டு தமிழகக் கடலோரப் பகுதிகளில் முப்படையினரும் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளனர். படகில் தனிநபர் வருகையும் கண்காணிக்கப்படுகிறது. அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா நேற்றுமுன்தினம் மும்பை வந்தார். இவரது வருகையை முன்னிட்டு, தமிழகக் கடல் மார்க்கமாக தீவிரவாதிகள் ஊடுருவக் கூடும் என்ற சந்தேகத்தில் பாதுகாப்புப் பிரிவினர் கடலோரங்களில் ரோந்துப் பணியைப் பலப்படுத்தியுள்ளனர்.

இராமநாதபுரம் மரைன் பொலிஸ் டி.எஸ்.பி. தியாகராஜன் கூறுகையில் -

ஒபாமா வருகையை முன்னிட்டு எட்டு படகுகளில் 24 மணி நேர ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளோம். கடலில் மீனவர்கள் யாரேனும் சந்தேகமான நபர்களைக் கண்டால் 1093 என்ற எண்ணுக்கு தகவல் வழங்குமாறு அறிவுறுத்தியுள்ளோம். கடற்கரைக் கிராமங்களில் புதிய நபர்கள் நடமாடுகிறார்களா என சோதனை மேற்கொள் கிறோம் - என்று கூறினார்.

இதேபோல் கடலோர காவற்படை, இந்தியக் கடற்படையினரும் கடல் மார்க்கமாக ரோந்துப் பணியைத் துரிதப்படுத்தி தீவுகளையும் கண்காணித்து வருகின்றனர்.

# ஒபாமா தங்கிய ஹோட்டல் அருகே துப்பாக்கி வெடித்ததால் பரபரப்பு!

மும்பை, நவ. 08

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மும்பையில் சனிக்கிழமை இரவு தங்கியிருந்த தாஜ் ஹோட்டலுக்கு வெளியே துப்பாக்கிக் குண்டுச் சத்தம் கேட்டதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

தீவிரவாத அச்சுறுத்தல் காரணமாக ஒபாமா தங்கியிருந்த ஹோட்டலில் பலத்த பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது. ஹோட்டலின் பாதுகாப்பு வலயத்துக்குள் திடீரெனத் துப்பாக்கிக் குண்டுச் சத்தம் கேட்டதால் அந்தப் பகுதிக்குப் பொலிஸார் விரைந்தனர்.

ஹோட்டல் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த சௌத்ரி என்ற பொலிஸ்காரர் பணி முடிந்து வீடு திரும்பிய போது பிஸ்டலின் விசையைத் தவறுதலாக அழுத்தியதால் குண்டு பாய்ந்தது தெரியவந்தது.

இதில் அவரது காலில் காயம் ஏற்பட்டது. உடனடியாக அவர் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டார்

இது தற்செயலாக நிகழ்ந்த விபத்து என்று மும்பைப் பொலிஸ் கமிஷனர் சஞ்சீவ் தயாள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

2008 நவம்பரில் தாஜ் ஹோட்டல் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 166 பேர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பாக். குறித்து ஒபாமா மௌனம்; எதிர்க்கட்சிகள் அதிருப்தி

டில்லி, நவ. 08

இந்தியா வந்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, மும்பையில் தனது முதல் பேச்சில் பாகிஸ்தான் பெயரை குறிப்பிடாதமை அதிருப்தி அளிக்கிறது - என்று பாரதிய ஜனதாக் கட்சி கூறியுள்ளது.

இதுதொடர்பாக அக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ராஜீவ் பிரதாப் ரூடி செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

இந்தியாவில் மிகப் பெரிய பயங்கரவாதத் தாக்குதல் நடந்த தாஜ் ஹோட்டலில் தனது சுற்றுப்பயணத்தில் ஒபாமா முதலில் பேசியுள்ளார். அந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தானில்தான் திட்டமிடப்பட்டது என்பதற்கான ஆதாரம் அமெரிக்காவிடமும் உள்ளது.

ஆனால், பாகிஸ்தானைக் கண்டித்து ஒபாமா ஒரு வார்த்தையும் கூறாதது அதிருப்தி அளிக்கிறது. அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், ஒபாமாவுடன் வராததே, அவர் வர்த்தக நோக்குடன் மட்டும்தான் இந்தியாவுக்கு வந்துள்ளார் என்பதைப் புலப்படுத்துகிறது - இப்படி அவர் கூறினார்.

ஒபாமாவின் பேச்சு குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலர் டி.ராஜா கூறுகையில் -

ஒபாமாவின் பேச்சு வியப்பளிக்கவில்லை. தான் தாக்கப்படும்போது ஒரு நிலையையும், மற்றவர்கள் தாக்கப்படும்போது வேறொரு நிலையையும் எடுப்பதே அமெரிக்காவின் வாடிக்கை.

பாகிஸ்தான் குறித்து தனது பேச்சில் ஒபாமா குறிப்பிடாதது அமெரிக்கா இரட்டை நிலையைக் கடைப்பிடிப்பதைத் தொடர்வதையே எடுத்துக்காட்டுகிறது. இதை நமது அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் - என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## கிரிக்கெட் வீரர் முரளியின் மனிதநேயம்

இலங்கையின் பிரபல முன்னணி கிரிக்கெட் வீரரும் அத்துறையில் உலகப் புகழ் பெற்றவருமான முத்தையா முரளிதரன் விளையாட்டுத்துறையில் இருந்து ஓய்வு பெறவுள்ளார். அதனையொட்டி வடக்கில் முன்பள்ளிகளும் அடங்கிய 300 வீடுகளைக் கொண்ட கிராமம் ஒன்றை அமைக்கப்போவதாக அறிவித்திருக்கிறார்.

தமது கடைசி சர்வதேசப் போட்டியில் பங்குபற்றுவதற்காக அவுஸ்திரேலியா சென்றிருந்த வேளை, முரளிதரன் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார்.

வடக்கு மக்களுக்காக தாம் அமைக்கவிருக்கும் புதிய கிராமத் திட்டத்திற்காக, ஜனாதிபதி ஐம்பது ஏக்கர் காணியை வழங்கியிருப்பதாக கிரிக்கெட் ஜாம்பவான் முரளி கூறியுள்ளார்.

இலங்கை அணியில் தற்போதுள்ளவர்களில் அனுபவத்திலும், வயதிலும் மூத்தவர் முரளி. 2011 உலகக் கிண்ணப் போட்டிகளுடன் சர்தேசப் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறவுள்ளார். தமிழராக இருந்த காரணத்தினாலேயே பல உலக சாதனைகளைப் படைத்தபோதிலும் அவருக்கு இலங்கை அணியின் தலைமைப் பதவி கிட்டவில்லை.

பாகிஸ்தானின் இம்ரான்கான் புற்றுநோய் வைத்தியசாலையும், வசீம் அக்ரம் நீரிழிவு வைத்தியசாலையும், அவுஸ்திரேலியாவின் மெக்ராத் புற்றுநோயாளர் நிதியம் ஒன்றையும் தத்தமது கிரிக்கெட் விளையாட்டு ஓய்வுக்குப் பின்னர் ஆரம்பித்தனர்.

அதே வகையில் தனது கிரிக்கெட் வாழ்வுக்குப் பின்னர் முரளியும் சமூக சேவையில் ஈடுபடவுள்ளமையையே இந்தப் புதிய கிராமத்தின் உருவாக்கத்தில் இறங்கியமை காட்டுகின்றது.

கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனின் தமது தமிழ்ச் சகோதரர்களுக்கு உதவும் இந்த மனிதநேயம், மனிதாபிமானம், நல்லெண்ணம் வரவேற்கத்தக்கது. அதற்காக வடக்கு மக்கள் சார்பில் அவரைப் பாராட்டுகின்றோம்; நன்றி கூறுகிறோம்.

அவர் இதற்கு முன்னரும், பல மனிதநேய உதவிகளைச் செய்திருக்கிறார். ஆழிப்பேரலையால் அழிவுகள் உண்டான போது தென்னிலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, பாடசாலை, கிரிக்கெட் மைதானம் அடங்கிய ஆயிரம் வீட்டுத் தொகுதியை 2005 ஆம் ஆண்டில் அமைத்து வழங்கியிருந்தார்.

1977ஆம் ஆண்டில் இடம்பெற்ற இனக் கலவரத்தின் போது தங்கள் வீடும், தந்தையாரின் பிஸ்கற் தொழிற்சாலையும் எரித்து நிர்மூலமாக்கப்பட்டதை முரளிதரன் அவுஸ்திரேலிய பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியின் போது தெரிவித்திருக்கிறார்.

வன்செயலில் ஈடுபட்டவர்கள் தங்கள் குடும்பத்தைக் கொன்றொழிக்க வந்த வேளை, சிங்கள மக்களே தங்களைக் காப்பாற்றிய சம்பவத்தையும் முரளி நினைவுகூர்ந்தார். அவர்களின் காருண்யத்தை எப்போதும் மறக்க முடியாது என்றும் கூறியுள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவுவதற்கு முரளிதரன் முன்வந்திருப்பது இந்த வேளையில் பெரும் உதவியாக அமையும். போர் முடிந்து ஆறு மாதங்களின் பின்னர் வன்னியில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்கள், கடந்த ஒரு வருடம் கழிந்தும் உரிய வீட்டு வசதி - குடியிருப்பு வசதி - இல்லாமல், காணிகளில் தறப்பாள் கொட்டில்களில், எதிர்வரும் கடும் மாரி காலத்தில் - மூன்று மாதகாலத்திலும் - அல்லோல கல்லோலப்படப் போகின்றார்கள். பெருவெள்ளம், விஷ ஜந்துக்கள் என்பவற்றுக்கு மத்தியில் போதிய உணவுப் பொருள்கள், சுத்தமான குடிதண்ணீர், மருந்து வகைகள் கிடைக்காமல் இப்போதே அல்லாடும் மக்கள் பெருமழைக் காலத்தில் என்ன செய்வார்கள் என்று மனம்பதறுகிறது.

இந்த நிலையை நீக்குவதற்கு, அரசு அவசர, அவசிய முன்னேற்பாடுகளை செய்ததாக இதுவரை தகவல் இல்லை. போர் முடிந்த பின்னர் முகாம்களுக்கு இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்த ஆரம்பித்து அனேகமாக இந்த மாதத்துடன் ஒருவருடம் ஆகிறது. ஆனால் அந்த மக்களுக்கான அடிப்படை வசதிகள் சராசரி அளவேனும் செய்யப்படவில்லை என்பதே களநிலவரம்.

இடம்பெயர்ந்தோரின் அடிப்படை வசதிகளை வேகமாகவும் விசுவாசத்துடன் செய்வதற்கு முதலிடம், முன்னுரிமை தராமல் வெறும் பிரசார நோக்கத்துடன் நிகழ்வுகள் நடத்தப்பட்டதே கண்ட அனுபவம்.

ஆகவே, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கிராமம் ஒன்றையே வசதிகளுடன் அமைத்துக்கொடுக்க முன்வந்திருக்கும் கிரிக்கெட் வீரர் முரளிதரன், அரசாங்கத்தையும் சேர்த்து இப் பணியை முன்னெடுக்காது தனது சொந்தத்தில் இப் பணிக்கு முன்னுரிமையைக் கொடுத்து அடுத்த வருடம் மாரி தொடங்குவதற்குப் பல மாதங்களுக்கு முன்னரே மனிதநேய, இன நேசத்திட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.

ஏனெனில் -

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியா கட்டிக்கொடுக்கவுள்ள ஐம்பது ஆயிரம் வீட்டுத்திட்டம் இப்போதைய மாரிகாலம் முடிந்து தானும் ஆரம்பிக்கப்படுமா என்பது சந்தேகத்திற்குரியதாக உள்ளது. மேலும் பல இழுத்தடிப்புக்கள் நடைபெறும் என எதிர்பார்க்கலாம். இத்தகைய பின்புலத்தில் 2011 ஆம் ஆண்டில் மாரி காலத்துக்கு முன்னர் அது பூர்த்தியாகும் என்று தானும் நம்புவதற்கில்லை.

# கிராமங்களின் அடிமட்ட மக்களுடன் ஐ.தே.க.தலைவர்கள் ஒன்று கூடல்

*நேற்று 07.11.2010 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமரிசனத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி இது.*

நாட்டின் மிகப் பழைய அரசியல் கட்சியான ஐ.தே.கட்சியின் நோக்கங்கள் இப்போது மாறியிருப்பதுபோல் தெரிகின்றது. அவைகளை புதிய உலகம் ஒன்றை நோக்கிக் கொண்டு செல்வதை விடுத்து அதன் தலைவர்கள் பொது மனிதனின் சொந்த உலகத்தை நோக்கிச் செல்லத் தொடங்கியிருக்கிறார்கள்.

இந்தப்புதிய முயற்சியில் கிராமமட்டத்தில் அங்குள்ள மக்களின் மனங்களையும் இதயங்களையும் வென்றெடுப்பதற்காகத் தமது சொந்த வாழ்க்கை முறைகளை மாற்றிக் கொண்டு வருகிறார்கள். இதில் ஐ.தே.கவுக்கு ஆபத்து மறைந்திருக்கிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நிர்வாகத்துக்கு எதிரான ஒரு காத்திரமான எதிர் சக்தியாக வளரும் அதன் நோக்கம் எவ்வாறானாலும் இந்தப் பழம் பெரும் கட்சி அதன் அடித்தள ஆதார நிலைகளில் பிரிவினைகளையும் பிளவுகளையும் எதிர்நோக்குவதாக உள்ளது. இதற்கான காரணங்கள் பல இருக்கின்றன.

### கிராமிய சஞ்சாரம்

முதலில் இந்தக் கிராமிய சஞ்சாரம் செயற்பாட்டை எடுத்துக் கொள்வோம். கடந்த வாரம் சனிக்கிழமை அது ஆரம்பித்தது. அதன் உதவித் தலைவர் கரு ஜயசூரிய மேலும் 14 ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து ஹொரணையில் உள்ள சில ஆலயங்களுக்குச் சென்றிருந்தார். ஆங்காங்கே வெவ்வேறு சிறு சிறு கூட்டங்களை அவர்கள் நடத்தினார்கள். அவை சில சமயம் நள்ளிரவு வரை நீடித்தன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்காக சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து செயற்பட்டனர். மற்றவர்கள் பாய்களை விரித்து அமர்ந்து கொள்ளும் கூட்டங்களை நடத்தலாயினர். அவைகளில் இசை நிகழ்ச்சிகள் குறிப்பாக பயிலா பாட்டுகள் மற்றும் பழங்கால சிங்களப் பாடல்கள் இடம்பெற்றன.

கண் சிகிச்சைமுகாம் ஒன்றும் நடத்தப்பட்டது. பின்னர் பகல் போசனம். ஹொரண லமா உயனவில் அவர்கள் பகல் உணவைத் தாமரை இலைகளில் உண்டார்கள். முள்ளுக்கரண்டி இல்லாமலும் கிராமிய முறையில் தங்களால் சாப்பிட முடியும் என்று காட்டினார்கள். பெருமளவில் ஜயசூரிய சோற்றை ஒதுக்கிவிட்டு பல்வேறு மரக்கறிகளையே தெரிவு செய்தார். அவித்த மரவள்ளிக் கிழங்கு, ஈரவெங்காயம் போன்றவற்றை அதிகம் விரும்பி உண்டார். இரவில் அரம்பகந்த ஹோட்டலில் வழமையான இரவு உணவு நடைபெற்றது. ஜய சூரியாவைப்போலவே ஒருசிலர் தான் கட்சி ஆதரவாளர்களுடன் தங்கினார்கள். பலர் இரவில் தங்குவதற்கு கொழும்புக்குத் திரும்பி விட்டார்கள். கிராம சஞ்சாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஒரு பச்சைத் தொப்பி, கிராமப் பவனி தொடர்பாக அச்சடிக்கப்பட்ட பிரசுரங்கள் மற்றும் குறிப்பு எழுதுவதற்கான குறிப்புப் புத்தகம் போன்றவை அடங்கிய சிறு பொதி ஒன்று வழங்கப்பட்டிருந்தது. அடுத்த நாளன்று மேலும் 40 ஆலயங்களுக்கும் ஜயசூரிய விஜயம் செய்து பௌத்த குருமார் களுடன் ஆலோசனைகள் நடத்தினார்கள். மற்றவர்கள் அப்பகுதியிலுள்ள தொழிற்சங்கவாதிகளோடு உரையாடினார்கள். பின்னர் கட்சி உறுப்பினர்களைச் சேர்க்கும் பணி நடைபெற்றது. ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் 300 ஆதரவாளர்களுடன் கோனபொல வீதியில் திறந்த வெளியில் இடம் பெற்ற பகல் உணவில் கலந்து கொண்டார். அது மிகவும் சாதாரண மாக நடந்தது. பீங்கான் கோப்பைகளில் உணவு பரிமாறப்பட்டது. தாமரை இலைகள் இல்லை. அவருடைய பிரதித் தலைவர் அதே வேளையில் ஹந்தமான் கொடையில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தார்.

இந்தமுறை ஜனாதிபதித் தேர்தல் காலத்திலிருந்து ஒதுங்கியிருந்த கட்சி உறுப்பினர்கள் வீடுகளுக்கும் கட்சித் தலைவர்கள் சென்று இருந்தார்கள். அவர்களை ஒதுங்கியிருக்காமல் கட்சியில் பணியாற்றும்படி அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

கண்ணாடி வழங்கும் ஒரு நிகழ்ச்சியுடன், உறுப்பினர்கள் முன்னாள் ராணுவத் தளபதி சரத்பொன்சேகாவை விடுதலை செய்யும்படி கோரும் ஒரு அறிக்கையில் கையெழுத்திட்டனர். அன்றைய நிகழ்ச்சி அத்துடன் முடிவுற்றது. ஹொரணை ரஜமகாவிகாரையில் இந்த நோக்கில் போதி பூஜா (அரச மர பூசை) ஒன்றும் இடம்பெற்றது.

## செல்வாக்கைப் புதுப்பிக்கும் முயற்சி: முரண்பட்ட நிலையில் சஜித் பிரேமதாச

ஐ.தே.கவின் கிராம சாரிக்கா (கிராம சஞ்சாரம்)திட்டம் ஏனைய கட்சிகளின் கவனத்தைக் குறிப்பாக அரசதரப்பு ஆதரவாளர்களின் கவனத்தை அதிகம் கவர்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால்ஐ.தே.கட்சிக்குள்ளிருந்தே வெளிவந்த சில சம்பவங்கள்தான் கவனத்தை ஈர்ப்பதாக இருந்தன.

இந்த நிகழ்வுக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் கட்சியில் சீர்திருத்தங்களை வற்புறுத்தி வரும் சஜித் பிரேமதாச தமது சொந்த முறையிலான இதே வித நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

கிராம சஞ்சாரத் திட்டத்தை உருவாக்கி அதற்கான வழிகளை வகுத்துக் கொடுத்த குழுவில் சஜித் பிரேமதாசவும் ஒரு உறுப்பினராக இருந்துள்ள போதிலும் பிரேமதாச தமது சொந்த சமாந்திர நிகழ்ச்சித்திட்டம் ஒன்றைச் செயல்படுத்தலானார். முதலில் அதற்கு கிராம சர்வர்தன சாரிக்கா (கிராம அபிவிருத்தி சஞ்சாரம்) என்று பெயரிட்டிருந்தார். இதற்கு கட்சியில் இருந்து ஒரு பகுதியினர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். அதனால் பெயரை உதாகம சாரிக்கா (கிராமிய மீள் எழுச்சிப் பயணம்)என்று மாற்றினார்கள். இதனை ஐ.தே.கட்சியினர் எவராலும் ஆட்சேபிக்க முடியாமல் போய்விட்டது. சஜித்தின் தந்தையார் ரணசிங்க பிரேமதாஸவினால் மேற்கொள்ளப்பட்ட கம்உதாவ (கிராம மீள்எழுச்சி)திட்டத்தைப் போல் இதுவும் அமைந்துள்ளது. அத்திட்டமே நாடு முழுவதிலும் நகர வீடுகளைக் கட்டுவதற்கு வழி வகுத்தது.

கிராம சாரிக்காத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் சஜித் பிரேமதாசவின் உதாகம சாரிக்கா பற்றிய சுவரொட்டிகள் ஹொரணையில் பல இடங்களில் ஒட்டப்பட்டிருந்தன. அவரது தந்தையார் உருவாக்கியிருந்த மொகம மற்றும் அருணாகம ஆகிய இடங்களுக்கு இரண்டு தினங்களுக்குமுன் சஜித் பிரேமதாச விஜயம் செய்திருந்தார். அப்பகுதியின் ஐ.தே.க. அமைப்பாளர் ரவி ஜயவர்தன மற்றும் மேல்மாகாண சபை உறுப்பினர் டி.பி. அபேரட்ணவும் அவருடன் விஜயம் செய்திருந்தார்கள்.

இந்த நிகழ்வுகள் சஜித் பிரேமதாசா கிராமசாரிக்கா நிகழ்ச்சியை பகிஷ்கரிக்கப் போகிறார் என்பதையே எதிர்வு கூர்வதாகக் கருதப்பட்டது.

ஜயவர்தனவும், அபேரட்ண்வும் சஜித்தின்பயண நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டமைக்கு அவர் கட்சியின் கிராமபவனித் திட்டத்தில் கலந்து கொள்வார் என்ற நம்பிக்கையே காரணம் என்று கட்சித் தலைவர்களிடம் கூறியிருந்தார்கள். இதனால் கட்சி நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொள்வார் என்ற நம்பிக்கையை வலுப்பெறச் செய்திருந்தது. அதேசமயம் பிரேமதாசவும் தாம் கட்சியிலிருந்து வேறுபட்ட பாதையில் செல்வதாக பத்திரிகைகள் செய்திகளைத் திரித்து வெளியிட்டுள்ளன. கிராமங்களுக்குச் செல்வதென்ற கட்சியின் திட்டத்தை நான் ஆதரிக்கின்றேன். இந்த செயற்பாட்டை முன்னெடுத்த அரசியல்வாதிகளில் நானும் ஒருவன். ஞாயிறன்று நடைபெறவிருக்கும் கிராம சாரிக்கா நிகழ்வில் நானும் கலந்து கொள்வேன். கடந்த வியாழக்கிழமை நான் ஹொரணையில் என் தந்தையால் ஆரம்பிக்கப்பட்ட மூன்று மாதிரி கிராமங்களுக்குப் போயிருந்தேன். ஐ.தேகவில் புதிதாக வந்தவர்களை விட நான் ஒரு முக்கிய பங்காளி என்றவாறு கூறியிருந்தார்.

**தமிழில்: கோகுலன்**

இரண்டு நாள்களுக்கிடையில் அவர் தமது மனதைமாற்றிக் கொண்டுள்ள பத்திரிகைகள் செய்திகளைத் திரித்து விட்டதாகக் கூறியிருந்த அவர் கட்சியின் கிராம சாரிக்கா நிகழ்வில் கலந்து கொள்ளாமல் இருந்துவிட்டார்.

அவர் தமது சொந்த சமாந்திரத் திட்டமொன்றை முன்னெடுத்து வருகிறார் என்பதையே இது காட்டுவதாக அவரது கட்சியினர் இப்பொழுது குற்றஞ் சாட்டக் கூடியதாக இருக்கின்றது.

*(22 ஆம் பக்கம் பார்க்க)*

## நாளை

| | | |
|---|---|---|
| ஐப்பசி 23 | | 09.11.2010 செவ்வாய்க்கிழமை |
| திதி: | : | திருதியை மு.ப 08.27 வரை |
| நட்சத்திரம் | : | கேட்டை மு.ப. 11.31 வரை |
| சுபநேரம் | : | 10.35-12.05 வரை |
| ராகுகாலம் | : | 03.05-04.35 வரை |
| | | சதுர்த்தி விரதம் |

## அழகென்ற சொல்லுக்கு முருகன்

முருகன் என்றால் தமிழில் அழகன் அந்த
முருகையனைப் பார்த்தலே தனி அழகு அவனுடன்
கருத்துப் பரிமாறலே சுகமான அழகு அவனை
விரும்பி நினைத்தாலே அழகுடன் திருவும் வரும்

புத்தகத்தின் ஆசனாய் மிளிர்வான் அழகன்
சுத்தத்தில் சுற்றமாய் வீற்றிருப்பான் அழகனாய்
பந்தத்தின் பாசவலையில் தாயாகிடுவான் அவன்
சொந்தத்தில் காதலனாய் இதயம் கவர் கள்வனாம்

நட்புடன் நாடிடில் நண்பனாவான் உயர்
கட்புலன் ஈய்ந்தே உயர்த்திடுவான் உலகில்
வெட்டென மறப்போரையும் தன்வலைக்குள்
பட்டென அணைத்திடுவான் பாங்காகவே

காணாது ஈர்மூன்று நாட்கள் உன்புகழ்பாடிட
நாணாது நாம் உன்னருகில் இந்நாட்களில்
மீளாது உய்வுபேறவே உனைநாடி உளம்
தளராது வாழ்த்துகின்றோம் சஷ்டியிலே.

தெல்லியூர்த் தேவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமயத்துக்காக தனது சொத்துக்களையே மக்களுக்கு வழங்கியவர் சேர் பொன்.இராமநாதன்

## - பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் புகழாரம் -

யாழ்ப்பாணம், நவ. 8

எமது மக்கள் சைவசமய கோட்பாடுகளை அறிந்து வைத்திருப்பதற்காகவும் சமய வாழ்க்கையை வாழவேண்டும் என்பதற்காக தனது சொத்துக்களையே மக்களுக்கு வழங்கியவர் சேர் பொன். இராமநாதன் - இவ்வாறு கூறினார் பேராசிரியர் சி.க.சிற் றம்பலம்.

பரமேஸ்வரா கல்லூரி இயக்குநர்சபையும் காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயமும் இணைந்து நடத்திய 2011 ஆம் ஆண்டுக்கான நாள்காட்டி வெளியீட்டு விழா, யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்வுக்குத் தலைமை வகித்துப் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:-

யாழ்ப்பாணத்திற்கு சேர் பொன். இராமநாதன் வந்த நேரத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்றவராக பிரிட்டோ என்பவர் விளங்கினார். எனினும் சட்டசபைக்கான பிரதி நிதித்துவம் அவருக்குக் கிடைக்காதவாறு நாவலர் செயற்பட்டு, சேர் பொன். இராமநாதன் சட்டசபைக்குப் பிரதிநிதியாகவர உதவினார். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் வழிகாட்டியாகத் திகழ்ந்த சேர் பொன். இராமநாதன் சட்டசபையில் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற மனிதராக விளங்கினார்.



எமது இளையசந்ததியினர், இவரைப் பற்றியும், எமது சமுதாயத்திற்கு செய்த பணிகள், தொண்டுகள் குறித்தும் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்காகத்தான் இது போன்ற விழாக்கள் இடம்பெறுகின்றன.

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயம் கடந்த 7 ஆண்டுகளாக சைவ சமயத்தை வளர்ப்பதில் முன்னின்ற பெரியார் களையும் பிற்கால சந்ததியினர் தெரிந்து கொள்ளக் கூடியதாக இந்த நாள்காட்டியை வெளியிட்டு வருகின்றது. கடந்த வருடத்தில் நாவலர் பெருமானின் படங்கள் கொண்டதாக அது வெளிவந்தது.

எமது சைவத்திற்கும் கல்விக்கும் சமுகத்திற்குமாகத் தொண்டாற்றிய சேர் பொன். இராமநாதனின் படத்தைக் கொண்டதாக 2011ஆம் ஆண்டின் நாட்காட்டி அமைய வேண்டும் என்று கூறினேன். அதனை ஏற்று இந்த நாள்காட்டியை கற்பகவிநாயகர் ஆலய அறங்காவலர் சிவஞானம் வெளியிட்டுள்ளார்.

இராமநாதன் மறைந்தபோதும் இராமநாதன் கல்லூரியும், இன்று பெருவிருட்சமாக வளர்ந்துள்ள யாழ். பல்கலைக் கழகமும் அவரது பெரும்பணிகளை நினைவூட்டு கின்றன. சுயநலமும், எப்படியும் வாழலாம் என்ற சமுதாயமுமாக மாறும் இந்தக் கால கட்டத்தில் இத்தகைய நாள்காட்டி வெளியிடப்படுவது பொருத்தமானதாக வருங்காலச் சிறார்களை வழிப்படுத்தவும் இந்தப் பணி உதவும் - என்றார்.

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம், பரமேஸ்வராக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி கனகநமநாதன், சிவத் தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம், ஆலய நிர்வாகி சிவஞானம் ஆகியோரும் நிகழ் வில் உரையாற்றினர்.

2011ஆம் ஆண்டுக்கான நாள்காட்டியை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி மா. வேதநாதனிடமிருந்து தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் பெற்றுக்கொண்டார். இராமநாதன் கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்வும் இடம்பெற்றது. (201-7)

## யுவதி மீட்பு

தென்மராட்சி, நவ.8

கிணற்றுக் கட்டில் ஏறி நின்று மாதுளம் பழத்தை பறிக்க முயன்ற யுவதி கிணற் றில் தவறி வீழ்ந்தார்.

நுணாவிலில் இடம்பெற்ற இச்சம்பவத் தில் ஆர். தர்மகோகுலம் (வயது- 20) என் னும் யுவதி அயலவர்களால் காப்பாற்றப் பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ- 207)

## இசைக் கச்சேரி

வடமராட்சி, நவ.8

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பக்கவாத்தியங்கள் சகிதம் இசைக் கச்சேரி நடைபெறவுள்ளது.

இந்த இசைக்கச்சேரியை சென்னை அண்ணாமலை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நாகேந்திரன் கபாகரன் நிகழ்த்துவார்.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நடத்தி வரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் இக்கச்சேரி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.(201 - 236)

## மாணவி காயம்

தென்மராட்சி, நவ.8

பாடசாலைப் படியில் சறுக்கி வீழ்ந்ததில் 12 வயது மாணவிக்கு தோள் எலும்பு முறிந்தது.

கைதடி- நுணாவிலைச் சேர்ந்த தர்மலிங்கம் நிதர்சினி (வயது- 12) என்பவரே தோள் எலும்பு முறிந்த நிலையில் சாவகச் சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (எ- 207)

# ஏ- 9 வீதி அகலிப்பினால் சாவகச்சேரியில் 50 இற்கும் மேற்பட்ட கட்டடங்கள் இடிபடும் நிலை

தென்மராட்சி, நவ.8

ஏ -9 வீதி அகலிப்பின் போது சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள நான்கு வங்கி கள் உட்பட 50 இற்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்களின் கட்டடங்களை உடைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நகர்ப்பகுதியில் வீதி அகலிப்புக்கென எல்லைக் கற்கள் நடப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் வீதியின் மேற்கில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் உடைக்கப்பட வேண்டிய நிலை தோன்றியுள்ளது. இப்பகுதியிலே இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, கொமர்ஷல் வங்கி ஆகியவற்றின் கிளை கள் உள்ளன.

இதே வேளை வீதி அகலிப்பின் போது சாவகச்சேரி நகர்ப்பகுதியிலிருந்து கொடிகாமம் வரையும் ஏ - 9 வீதியின் ஒரு பகுதி யில் புகையிரத பாதை உள்ளதால் மற்றப் பகுதியிலேயே எல்லைக் கற்கள் புதைக்கப்பட்டுள்ளன. இதனால் வீதியோரத்தில் உள்ள பல குடியிருப்புக்கள், பாடசாலைகள், அரசதிணைக்களம், அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள் போன்றவை இடிக்கப் படலாமெனத் தெரிவிக்கப்பட்டது.

# தேங்கி நிற்கும் வெள்ளத்தை வழிந்தோடச் செய்ய விசேட செயலணி மாநகர சபையால் அமைப்பு

யாழ்ப்பாணம், நவ.8

வீடுகள், பாடசாலைகள், அலுவலகங்கள் என்பவற்றில் தேங்கி நிற்கும் வெள்ளத்தை வெளியேற்றுவதற்காக வீதிகளைக் குறுக்கே வெட்டுவதைப் பொதுமக்கள் தவிர்க்க வேண்டும். மாநகரசபையால் அமைக்கப் பட்ட விசேட செயலணியை பொதுமக்கள் தொடர்பு கொண்டால் உரியமுறையில் தேங்கிநிற்கும் வெள்ளத்தை வழிந்தோடச் செய்யமுடியும்.

- இவ்வாறு யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோ. பற்குணராஜா நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

மழைக்காலம் ஆரம்பமாவதற்கு முன்னதாகவே வெள்ளம் வீதிகளில், தேங்கி நிற்காது ஓடும்விதத்தில் சபைத் தொழிலாளர்கள் மூலமாக பெரும்பாலான வீதியோரங்களில் வளர்ந்திருந்த புற்கள் அகற்றப்பட்டு நிலம் மட்டுப்படுத்தப்பட்டு, சீர் செய்யப்பட்டுள்ளன.

எனினும், தாழ்வான பகுதிகளில் வெள்ளம் தேங்கிநிற்பது தவிர்க்கமுடியாததாகும். மழை வெள்ளம் விரைவாக வடிந்தோடவேண்டுமென்ற எதிர்பார்ப்பில் மக்களது வரிப்பணத்தில் புனரமைக்கப்பட்ட வீதிகளை குறுக்காக வெட்டுவதனால் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை. இது ஒருபுறமிருக்க, வீதிகளைக் குறுக்காக வெட்டுதனால் வாகனப் போக்குவரத்துக்கு இடையூறும், வாகன விபத்துக்களுக்கும் அடிப்படையாகவும் அது அமைந்துவிடும். வெட்டிய வீதிகளை மீளப் புனரமைப்பதற்கு அதிகளவு நிதி தேவைப்படுவதனால் தேவையற்ற நிதிச்சுமையை மாநகர சபை எதிர்நோக்க வேண்டியதொரு நிலைமை ஏற்படுகின்றது.

வெள்ளம் வதிவிடங்களில் தேங்கி நிற்பதைத் தவிர்த்து அது ஓடக்கூடியவாறு தடைகளை வெட்டி அகற்றுவதற்கு சபையின் வேலைப்பகுதி தொழிலாளர்களைக் கொண்ட விசேட செயலணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் தேங்கி நின்றால் 021 222 2275, 021 222 2019, 021 222 8888, 021 222 3499, 021 320 7625 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டால் விசேட செயலணியின் சேவையைப் பொதுமக்கள் பெற்று வெள்ளத்தினால் உண்டாகும் தாக்கத்தைக் குறைக்க முடியும் - என்றுள்ளது. (எ)


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணில்
15.06.1935

விண்ணில்
25.09.2010

### திருமதி சின்னத்துரை பாக்கியம்

கடந்த 25.09.2010 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (08.11.2010) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், தொலைபேசி மூலம், பல்வேறு வழிகளிலும் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும், மலர்வளையம் வைத்தும் துண்டுப்பிரசுர மூலமும் அஞ்சலி செலுத்தியோருக்கும், பல்வேறு வகை களில் உதவி புரிந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

குமுதினி இல்லம்,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


# சிறுபோகத்தில் கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த சட்டத்தில் இடமில்லை

## பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவிப்பு

சிறுபோகக் காலப்பகுதியில் கட்டாக்காலியாகத் திரிந்து பயிர்களுக்குச் சேதத்தை விளைவிக்கும் கால்நடைகளைப் பிடித்து கட்டி வைப்பதற்கான அதிகாரம் கமநல அபிவிருத்திச் சட்டத்தில் இடம்பெறவில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

இதனால் சிறுபோகத்தில் கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகளைப் பிடிப்பதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. இந்த நிலை, விவசாயிகளுக்குப் பாரிய பாதிப்பையும் உண்டு பண்ணியிருக்கிறது.

வலி. தென்மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கட்டாக்காலிக் கால்நடைகள் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே, சண்டிலிப்பாய் கமநல பெரும்பாக உத்தியோகத்தர் இதைத் தெரிவித்துள்ளார்.

சிறுபோகக் காலப்பகுதியில் விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தும் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான சட்ட ஒழுங்குகள் அமுல்படுத்தப்படாததினால், இணக்க முறையில் சட்டத்திற்கு அப்பால் விவசாயிகள் சம்மேளனத்தின் உதவியுடன் அவற்றைக் கட்டுப்படுத்தலாம் என்றும் பெரும்பாக உத்தியோகத்தர் ஆலோசனை தெரிவித்துள்ளார். (எ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திகள் மூலம் மக்களின் கஷ்டங்களைக் களைய அரச ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும்

## நல்லூர் பிரதேச செயலக திறப்பு விழாவில் அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.8

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கு என மேலும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவை மூலம் பொது மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் மக்கள் எந்தக் கஷ்டங்களையும் எதிர்கொள் ளக் கூடாது என்ற நோக்குடன் அரச உத்தியோகத்தர்கள் சேவை யாற்ற வேண்டும்- இவ்வாறு கேட்டுக்கொண்டார் அரச அதி பர் திருமதி இமெல்டா சுகுமார்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நல்லூர் பிரதேச செயலகக் கட்டடத்தைத் திறந்துவைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் அரச அதிபர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தின் வைத்தியசாலைகளின் அபிவிருத்திக்கென 6 மில்லியனுக்கும் அதிகமான நிதியும், குடிதண்ணீர் வழங்கல் திட்டத்துக்கு என 2 ஆயிரத்து 225 மில்லியனுக்கும் அதிகமான நிதியும், வீதி அபிவிருத்திக்கு என ஆயிரம் மில்லியனுக்கும் அதிகமான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் மருதங்கேணி, நெடுந்தீவு ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவு பணிமனைக்கு புதிய கட்டடங்கள் விரை வில் நிர்மாணிக்கப்படவுள்ளன. உடுவில், சண்டிலிப்பாய், காரைநகர் ஆகியவற்றுக்கான கட்டடநிர்மாண வேலைகள் முடிவடையும் நிலையில் உள்ளன-என்றார்.

நிகழ்வில் உரையாற்றிய நல்லை ஆதீன குரு முதல்வர் தெரிவித்ததாவது:

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் சமூகப் பணிகளை முன்னெடுப்பதில்லை எனக் கூறுவது பொருத்தமுடையது அல்ல. ஆலயம் சமூகப் பணிகளை மறைமுகமாக முன்னெடுத்து வருகின்றது. புதிதாகத் திறந்து வைக்கப்படும் நல்லூர் பிரதேச செயலகத்துக்குகட்டடம் அமைப்பதற்கான காணியை நல்லூர் கந்தன் ஆலய உரிமையாளர் மாப்பாணர் முதலியாரே அன்பளிப்புச் செய்துள்ளார். அதேபோல் தான் யாழ்.மாகரசபை இடவசதி இல்லாது இருந்த போது அதற் கான இடத்தையும் நல்லூர் ஆலயம் வழங்கியிருக்கின்றது. தொடர்ந்தும் பணிகள் பலவற்றை முன்னெடுக்கவுள்ளது - என்றார்.

நிகழ்வில் உரையாற்றிய பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் தெரிவித்ததாவது:

எதிர்காலம் நல்லதாக இருப்பதற்கு அரச ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பழிவாங்கல் இல்லாத பலமான சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். எமது பிரச்சினைக்கு நாமே தீர்வு கண்டுகொள்ள முயல வேண்டும். ஜனநாயக வழியிலும் ஆயுத வழியிலும் செயற்பட்ட அனுபவம் எனக்குள்ளது. இந்த இரண்டு வழிகளும் எமக்கு அழிவையே தந்தன. எனவே இவை தவிர்ந்த வேறு முறையொன்றைச் சிந்திக்க வேண்டும். அந்தவழிமுறை எம்மிடம் தற்போது உள்ளது. உள்ளதைப் பாதுகாக்க வேண்டும் அதுவே எமக்குத் தேவை. உரிமைப் போராட்டம் என்ற பெயரில் கடந்த காலத்தில் பலவற்றை இழந்திருக்கின்றோம் - என்றார்.

இந்த நிகழ்வின் போது யாழ்ப்பாணப் பிரதேச செயலர் திருமதி சுகுணாதேவி தெய்வேந்திரம், கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் த.குகநேசன், மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், மாநகர முதல்வர் திருமதி யோ. பற்குணராஜா, ஆகியோர் உரை நிகழ்த்தினர். (எ-14)

**புதிய உதயம்....**





தீர்ந்தது இடநெருக்கடி: புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நல்லூர் பிரதேச செயலக கட்டடத் திறப்பு விழாவும் 'ஊருணி' நூல் வெளியீடும் நேற்று இடம்பெற்றன.

இந்த நிகழ்வின்போது பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நாடா வெட்டிக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். 'ஊருணி' நூலின் சிறப்புப் பிரதியை நாடாளு மன்ற உறுப்பினரும் நல்லூர்ப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலை வருமான சில்வெஸ்திரி அலென்ரினிடமிருந்து யாழ். பல்கலைக்கழக புவியியல்துறைப் பேராசிரியர் குகபாலன் பெற்றுக்கொண்டார். (14)

# தேசிய கடற்றொழில் சம்மேளனத்துக்கு யாழ். மாவட்டத்திலிருந்து 17 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், நவ.8

தேசிய கடற்றொழில் மகா சம்மேளனத்துக்கான யாழ். மாவட்ட மட்ட உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இம் மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன முன்னிலையிலேயே இத் தெரிவுகள் இடம்பெறவுள்ளன. இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவென அமைச்சர் ராஜித சேனாரத்ன யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்-

இவ்வாறு யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கே.தர்மலிங்கம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேசிய கடற்றொழில் மகா சம்மேளனத்தை நிறுவுவதற்கு கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த அமைப்புக்கு கிராமிய கடற்றொழில் அமைப்பு, மாவட்ட கடற்றொழில் சம்மேளனம் ஆகியவற்றிலிருந்து உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் கிராமிய கடற்றொழில் அமைப்புகள் பலவும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறான அமைப்புகளிடமிருந்து மாவட்ட கடற்றொழில் சம்மேளனத்துக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவ்வாறு 17 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

நவீன உலகுக்குப் பொருத்தமான பொருளாதார மற்றும் சமூக ரீதியாகப் பலம் வாய்ந்த கடற்றொழில் சமூகத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடனேயே தேசிய கடற்றொழில் மகா சம்மேளனம் நிறுவப்படவிருக்கிறது.

கொழும்பில் மாளிகாவத்தை, ஜெயந்த வீரசேகர மாவத்தையிலுள்ள கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் தலைமையகத்தை அமைத்து இந்தத் தேசிய மகா சம்மேளனம் செயற்படவுள்ளது - என்றார். (எ-14)

# மானிய அடிப்படையில் மலசலகூடம்; திட்டம் நிறைவடையும் நிலையில்

நாவற்குழி, நவ.8

யாழ். மாவட்டத்தில் ஊனமுற்ற வறிய மக்களுக்கு மலசலகூடம் அமைக்கும் திட்டப் பணிகள் சாவகச்சேரி, சண்டிலிப்பாய், மருதங்கேணி, வேலணை, நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளிலும் இந்த வேலைகள் முடிவடையும் நிலையை நெருங்கி வருவதாகக் கூறப்படுகின்றது.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் தலா 5 பேருக்கு ஒருலட்சம் ரூபாவை மானியமாக வழங்கி இத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றது.

மாகாண விசேட நிதி வழங்கும் திட்டத்தின் கீழ் இவ்வருடம் இந்நிதி வழங்கப்பட்டுள் ளது.

இலங்கையில் 9 மாகாண சபைகள் இயங்கி வருகின்ற போதும் வடமாகாண சபையினால்தான் இவ்விசேட வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (எ-121)

**எட்டுப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு**

# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் சனியன்று பொலிஸ் நடமாடும் சேவை

வலி.வடக்கு,நவ.8

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட எட்டுப் பொலிஸ் நிலையங்களை ஒன்றிணைத்து நடமாடும் சேவை எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்குத் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திரா இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்த நடமாடும் சேவையில் இளவாலை, தெல்லிப்பழை, அச்சுவேலி, நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை மற்றும் காங்கேசன்துறை பலாலி பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த பொது மக்களின் தேவைகளுக்காக இந்த நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெற நடவடிக்கை எடுத்தல், தொலைந்த தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திர முறைப்பாட்டுப் பிரதிகள் வழங்குதல் -

மருத்துவ சேவைகள் மற்றும் சிறு பிணக்குகள் சம்பந்தமான முறைப்பாடுகள் ஏற்றல் உட்பட பல்வேறு சேவைகளும் இந்த நடமாடும் சேவையில் வழங்கப்படவுள்ளன.

பொதுமக்கள் குறிப்பிட்ட நடமாடும் சேவையில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் அறிவித்துள்ளார். (ஒ-86)

# 25 மில்லியன் ரூபா செலவில் கோப்பாயில் அபிவிருத்தி

யாழ்ப்பாணம், நவ.8

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 25 மில்லியன் ரூபாய் செலவில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் மாதாந்த மீளாய்வுக் கூட்டம் யாழ்.மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, தேத்தா வளவு வீதி, கோயில் வீதி, செமிர்ரரி வீதி, அத்தியடி வீதி, செம்பிக் கலட்டி வீதி, தயக்கபுலம் வீதி ஆகிய 6வீதிகளும் 20 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட உள்ளன. அத்துடன், வளலாயிலுள்ள சந்தைக் கட்டடம் 5 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-15)




# பழைய மாணவிகள் கல்லூரிக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம்,நவ.8

யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியின் புனரமைப்புப் பணிகளுக்கென கனடாவில் வதியும் மேற்படி கல்லூரியின் பழைய மாணவிகள் ரூபா 4 மில்லியன் நிதியை வழங்கியுள்ளனர். (201-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைவில்லாத அறிவைச் சுரக்கும் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்

போரின் அழிவுகளுக்கு முகங்கொடுத்தபோதும் அழிவுகளிலிருந்து மீண்டெழுந்து மாணவர்களின் அறிவுத் தேடலுக்கு வழி சமைத்து அவர்களை நாளைய தலைவர்களாக மாற்றி கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் இன்னமும் நிமிர்ந்தே நிற்கிறது.

யாழ். நகரின் கிழக்கே நீண்டு செல்லும் நெய்தல் நிலப்பகுதியில் மீன்பிடித் தொழிலுக்கும்,தும்புக் கைத்தொழிலுக்கும் சிறப்பான இடமாக கொழும்புத்துறை கிழக்கு கிராமம் விளங்குகிறது. முற்காலத்தில் கொழும்பு பயணங்களும்,வர்த்தக பரிமாற்றங்களும் இங்குள்ள துறை முகத்தினூடாக நடை பெற்று வந்தமையால் கொழும் புத்துறை என்னும் பெயர் வந்ததாகவும் வரலாறு உண்டு.

மக்கள் செறிந்து வாழும் இக் கிராமத்திலே கல்வியறிவையும், ஆன்மீக,மொழி, ஒழுக்க நெறிகளையும் போதிக்கும் அறிவுக்கூடமாக'கற்றனைத் தூறுமறிவு' என்னும் மகுட வாக்கியத்துடன் இயங்கி வருகின்றது யா/கொழும் புத்துறை துரையப்பா வித்தியாலம்.

இங்குள்ள சிறார்கள் கல்வி கற்பதற்காக வெகு தொலைவில் உள்ள பாடசா லைகளுக்குச் சென்று பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வந்ததைக் கண்ணுற்ற கிராமப் பெரியார்கள் தமது கிராமத்தில் பாடசாலையொன்றை அமைக்க விரும்பினர்.

அமரர் வி.முத்தையாவின் நன் முயற்சியால் கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளை யார் ஆலயத்திற்குச் சொந்தமான காணியில் 06.01.1964 ஆம் ஆண்டு இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. கொழும்புத்துறை கிழக்கு அ.த.க.பாடசாலை என்ற பெயருடன் அவ்வூரைச் சேர்ந்த அமரர் இரா. செல்வராசாவை அதிபராகக் கொண்டு செயற்படத் தொடங்யது.மூன்று ஆசிரியர்களுடனும் 114 மாணவர்களுடனும் இயங்கிவரும் வேளையில், அதே ஆண்டு கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் பெற்று தரம் ஒன்று முதல் 8 வரையான வகுப்புக்கள் நடத்தப்பட்டன.

> புதிதாக ஆரம்பித்து குறுகிய காலத்தில் பெரு வளர்ச்சி கண்ட இப்பாடசாலை சோதனைகளையும் இழப்புக்களையும் கூடுதலாகச் சந்தித்தது. 1995, 2000 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட போர் நடவடிக்கைகளின் போது பாடசாலைக் கட்டடங்களுக்கும், சொத்துக்களுக்கும் பேரிழப்பு ஏற்பட்டது. இடம் பெயர்ந்த பாடசாலையாக நாவற்குழி, நவாலி, கொட்டடி போன்ற பகுதிகளில் தனது கல்விச் சேவையினை வழங்கியது.

மாணவர்கள் தொகை அதிகரிப்புக் காரணமாக பாடசாலை விரிவாக்கம் செய்யப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது.மேலும் 10 பரப்புக் காணி சுவீகரிக்கப்பட்டு 30.10.1964 இல் பிரார்த்தனை மண்டபத்துடன் கூடிய கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டது. காலப்போக்கில் அதிபர், ஆசிரியர்களின் முயற்சியால் பாடசாலை வளர்ச்சி யடைய 1967 இல் ஆசிரியர் தொகை 8 ஆகவும் மாணவர் தொகை 215 ஆகவும் உயர்ந்தது.



மீளெழுதல்: பலமுறை சிதைக்கப்பட்டபோதும் உயிர்த்தெழுந்து மாணவர்களுக்கு அறிவினைப் புகட்டும் பாடசாலையின் முகப்புத் தோற்றம்

1968இல் 10 பரப்புக் காணி கொள்வனவு செய் யப்பட்டு பெற்றோர், அரசாங்கத்தின் உதவியுடன் வகுப்பறைகள் அமைக்கப்பட்டன. 12.05.1972 இல் கௌரவ கல்வி அமைச் சரின் விஜயமானது பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்தது.

கல்விப் பொதுத் தராதர சா.த வகுப்பு 1973ஆம் ஆண்டு ஆரம்பித்ததோடு பாடசாலை அபிவிருத்திச் சங்க உதவியால் விஞ்ஞான ஆய்வு கூட அறையும் கட்டப்பட்டது. 1974 இல் க.பொ.த சா/த பரீட்சைக்கு மாணவர்கள் முதன் முறையாகத் தோற்றினார்கள். அவ் வாண்டிலேயே பரீட்சை நிலையமாகவும் செயற்பட தொடங்கி யது. 1976இல் மாணவர் தொகை 400 ஆக அதிகரிக்க ஆசிரியர் தொகை 19 ஆக உயர்ந்தது.

இட நெருக்கடி காரணமாக மேலும் ஒரு பாடசாலைக் கட்டடம் அமைக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் மட்டுமல்லாது விளையாட்டு, சமயப் போட்டிகளிலும் சிறந்த பெறு பேறுகளைப் பெற்றனர்.

1988இல் மாணவர் தொகை 508 ஆக அதிகரிக்க புதிய வகுப்பறைகள் அமைக்கப்பட்டன. பாடசாலை இலச்சினையும் மகுட வாக்கியமும் அமைக்கப்பட்டது.

புதிதாக ஆரம்பித்து குறுகிய காலத்தில் பெரு வளர்ச்சி கண்ட இப்பாடசாலை சோதனைகளையும் இழப்புக்களையும் கூடுதலாகச் சந்தித்தது. 1995, 2000 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட போர் நடவடிக்கைகளின் போது பாடசாலைக் கட்டடங்களுக்கும், சொத்துக்களுக்கும் பேரிழப்பு ஏற்பட்டது. இடம் பெயர்ந்த பாடசாலையாக நாவற்குழி, நவாலி, கொட்டடி போன்ற பகுதிகளில் தனது கல்விச் சேவையினை வழங்கியது.

பின்தங்கிய பகுதியில் அமைந்திருந்த இப் பாடசாலை மீளவும் தனது சொந்த இடத்திற்கு வந்த போது பாடசாலையின் சிதைவுகளையே காண முடிந்தது. பிரதான கல்வி வளங்கள் அழிவுற்று கல்விச் செயற்பாடுகள் முடங்கும் நிலை காணப்பட்டது.

கல்வித்திணைக்களம், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், யாழ்.பிரதேச செயலகம்,பொதுமக்கள், நலன்விரும்பிகளின் பங்களிப்புடன் பிரதான பகுதிகள் மீளமைக்கப்பட்டன. இருப்பினும் உயர் நிலைக்கற்றல் வசதிகளுக்கான தேவை களும்,பௌதீகவளத் தேவைகளும் ஏற்படுத்தப்பட வேண்டிய அவசியம் உணரப் படுகிறது.




நவீன கற்றல் உத்தி களை கையாளக் கூடிய செயற்பாட்டறை, தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப விருத்திக்கு மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்கான வசதிகள், விஞ்ஞான ஆய்வுகூடம், நூலகம், கட்புல செவிப்புல அலகு, மனையியல் கூடம் போன்ற கற்றல் வசதிகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

அலுவலகம்,ஆசிரியர் ஓய்வறை, விளையாட்டு முற்றம், குழாய்க் கிணறு பூர்த்தியாகாதுள்ளன. சுற்றுமதில் வேலைகள் போன்ற பௌதீக வளத் தேவைகள் பூர்த்தி செய் யப்பட வேண்டும்.

அதே வேளை நகரப்பாடசாலை மோகத் தினாலும் இடப்பெயர்ந்த அயற் கிராமங்களான மணிப்புரி, வசந்தபுரம், உதயபுரம் பகுதிகளில் மக்கள் குடியேற்றம் மந்த கதியில் இருப்பதாலும் தற்போது மாணவர் தொகை மிகவும் குறைந்துள்ளது. பாடசாலைக்குரிய அடிப்படைத் தேவைகள் மற்றும் வளங்கள் கிடைக்குமானால் மாணவர் தொகை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

பல்வேறு இழப்புக்கள், பின்னடைவுகளைச் சந்தித்த போதிலும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான உழைப்பால் பல கற்றல் சாதனைகளை எட்டியுள்ளது. க.பொ.த உயர் தரம் கற்பதற்குத் தகுதியான நிலையில் மாணவர்கள் வெளியேறிவருவதை அண்மைக் காலத்தரவுகள் புலப்படுத்துகின்றன. கடந்த 2008 இல் க.பொ.த உயர் தரத்திற்கு தகுதி பெற்றோர் வீதம் 42.86 ஆகவும் 2009இல் 43 ஆகவும் உயர்வடைந்துள்ளது.

இவை தவிர மாணவர்களது இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் திறமைகளை வெளிக் காட்டி வருகின்றனர். சமூக விஞ்ஞானப் போட்டிகளில் 2008,2009 ஆம் ஆண்டுகளில் மாவட்ட நிலையில் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் . விவசாய விஞ்ஞானத்தில் கோட்டமட்ட தெரிவுகள் பதிவாகியுள்ளன.

மாற்றமடையும் சமூக, தேசிய,சர்வதேச கள நிலமைகளுக்கேற்ப அறிவும், ஆக்கமும், ஆளுமைத்திறனும் கொண்ட சமூகத்தினை உருவாக்குதல் என்ற தூர நோக்குடன் செயற்படும் இக்கல்விச் சாலையின் தற்போதைய அதிபராக நடேசு தயாளன் தனது பொறுப்பை செவ்வனே ஆற்றி வருகிறார் உப அதிபராக திருமதி நாகராஜா கடமை புரிகிறார்.

**எஸ். யோகதாஸ்**

ஆண்டு 1 முதல் 11 வரை கற்பிக்கப்படும் இப்பாடசாலையில் 15 முழு நேர ஆசிரியர்களும் 3 பகுதி நேர ஆசிரியர்களும் கடமை புரிகின்றனர். இப் பகுதியில் நற்பிரஜைகளை உருவாக்கி வளர்ச்சியை நோக்கி வீறுநடை போட வேண்டும் என்பதே பலரது எதிர்பார்ப்புமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலிகளை அமைக்க முடியாத நிலையில் பயிரழிவைச் சந்திக்கும் ஒட்டுசுட்டான் விவசாயிகள்

முல்லைத்தீவு,நவ.8

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் விவசாயிகள் தமது நெல் வயல்களுக்கு வேலிகள் அமைக்க முடியாத நிலையில் பயிரழிவுகளைச் சந்தித்து வருகிறார்கள்.

மக்கள் மீள்குடியேற்றப்பட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கற்சிலைமடு, பண்டாரவன்னி, பேராறு, முத்து ஐயன்கட்டுக் குளம், கனகரத்தினபுரம், தட்டையன் மலை, இடதுகரை, 3 ஆம் கண்டம், கூழாமுறிப்பு, கருவேலன்கண்டல், புளியங்குளம் போன்ற பகுதிகளில் அதிகளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இந்தப் பிரதேசங்களில் கட்டாக்காலியாக அலைந்து திரியும் கால்நடைகளும் அதிகளவில் காணப்படுகின்றன. இதனால் வயல்களைச் சுற்றி வேலிகள் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

ஆனால் முள்ளுக் கம்பியின் விலை அதிகமாக உள்ளதால் இதனை வாங்க முடியாத நிலையில் இந்தப் பகுதி மக்கள் உள்ளனர். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அனைத்தையும் இழந்த இந்த மக்கள் 10 ஆயிரம் ரூபா கொடுத்து முள்ளுக்கம்பி வாங்க இயலாத நிலையில் உள்ளனர். கம்பிகள் பொருத்துவதற்கான கட்டைகள் எடுத்தாலும் கம்பி இல்லாமல் எந்தவித பயனும் இல்லை.

இதனால் தமது வேறு தொழில்களை ஒதுக்கி வைத்து விட்டு வயல்களுக்குக் காவல் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஆனாலும் கட்டாக்காலிகளான கால்நடைகள் பயிர்களுக்குச் சேதம் விளைவித்து வருகின்றன.

இதனால் இந்த ஏழை விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

கமநல சேவைத் திணைக்களமோ அல்லது வேறு பொது நிறுவனங்களோ தமக்கு உதவ முன்வரவேண்டுமென இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

## கருத்தமர்வும் விளக்கங்களும்

முல்லைத்தீவு,நவ.8

கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் சேவாலங்கா அனுசரணையுடன் சுகாதாரப் பகுதியினரால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை பற்றிய கருத்தமர்வும் மலசல கூட சுத்திகரிப்புப் பற்றிய விளக்கங்களும்,கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றன.

நிகழ்வின் முடிவில் மலசல கூட சுத்திகரிப்புப் பொருள்களும் சோப்வகைகளும் மக்களுக்கு வழங்கப்பட்டன. (க-500)

## பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது

முல்லைத்தீவு,நவ.8

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுக்கான தனியார் பயணிகள் பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேருந்து சேவை யாழ்ப்பாணத்திலிருந்து பரந்தன், புதுக்குடியிருப்பு வழியாக முல்லைத்தீவைச் சென்றடையும். கடந்த 3 ஆம் திகதி இந்தப் பேருந்து சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து காலை 6 மணிக்கும், நண்பகல் 12 மணிக்கும் இந்தப் பேருந்து சேவை இடம்பெறும். அத்துடன் முல்லைத்தீவிலிருந்து காலை 7 மணிக்கும், பிற்பகல் 2 மணிக்கும் இந்தச் சேவை இடம்பெறும். யாழ்ப்பாணத் திலிருந்து புறப்படும் பேருந்து பரந்தன், விசுவமடு ஊடாகப் புதுக்குடியிருப்பு, கேப்பாபுலவு, முள்ளியவளை சென்று முல்லைத்தீவைச் சென்றடைகின்றது. இதேபோன்றே முல்லைத் தீவில் இருந்து புறப்படும் பேருந்து இதே வழித்தடத்தில் பயணித்து யாழ்ப்பாணத்தைச் சென்றடையும்.

மேலும் இராணுவத்தினரின் வழித்துணையுடன் இந்தப் பேருந்து சேவைகள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (க-20)

## ஆதரவு வேண்டி



யுத்தம் தந்த பரிசு: யுத்தத்தினால் சேதமடைந்த வட்டக்கச்சி மாயவனூர் கணபதீஸ்வரர் சிவன் ஆலயத்தைப் புனர் நிர்மாணம் செய்வதற்கு ஏதுவாக க.கங்காதரன் தலைமையில் புதிய ஆலய பரிபாலன சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. புதிய பரிபாலன சபையினர் புனர் நிர்மாணப் பணிகளுக்குரிய நிதியுதவியை வேண்டி நிற்கின்றனர்.

## கட்டடங்கள் இன்றி முன்பள்ளிகள்

முல்லைத்தீவு,நவ.8

கற்சிலைமடு கிராம அலுவலர் பிரிவில் ஐந்து முன்பள்ளிகள் கட்டடங்களின்றி இயங்கி வருகின்றன.

அத்துடன் இப்பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பெற்றோர்களால் வழங்கப்படும் சிறுதொகைப் பணமே வேதனமாகக் கிடைத்து வந்தது. ஆனால் தற்போது இதனையும் கொடுக்க முடியாத நிலையில் பெற்றோர் உள்ளனர். இதனால் ஊதியமின்றியே ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றனர்.இவற்றை ஏதாவது தொண்டு நிறுவனங்கள் கவனத்திற் கொண்டு உதவ வேண்டுமென இப்பகுதி மக்களால் அமைக் கப்பட்டுள்ள கிராம அமைப் புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (க-500)

## பூநகரி வாடியடியில் உள்ள காணியின் எல்லையினை வரையறை செய்தல்

பூநகரி,நவ.8

பூநகரிப் பிரதேச சபைக்குச் சொந்தமானதும் முன்னர் கிராம சபைக்கு உரியதுமான வாடியடிச்சந்தியில் உள்ள காணியைப் பூநகரி பிரதேச சபைக்குச் சொந்தமானது என வரையறை செய்து சந்தைகள், பஸ் தரிப்பிடம், கடைத்தொகுதி அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வாடியடிச் சந்தியில் கிழக்கு நாகதேவன்துறை வீதி, தெற்கு கிளிநொச்சி வீதி, வடக்கு கிளாக்கர் காணி, தெற்கு தற்போது பிரதேச சபைக்கும், பிரதேச செயலகத்திற்குமான கட்டடம் அமையும் காணி இவற்றுள் அடங்கும் காணி முழுவதுமே இவ்வாறு பிரதேச சபைக்குச் சொந்தமானது என வரையறை செய்யப்பட்டுள்ளது.

எனவே இப்பகுதிக்குள் வடக்கு மற்றும் மேற்குப்புறம் எவருக்காவது தனியார் காணி இருப்பின் அதற்கான காணி உறுதி, நிலஅளவை வரைபடம் ஆகியவற்றைத் தன்னிடமோ அல்லது பிரதேச செயலாளரிடமோ சமர்ப்பிக்குமாறு பூநகரிப் பிரதேச சபைச் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் தமது தொலைபேசி இலக்கமான 0243243493 அல்லது பிரதேச செயலாளரின் தொலைபேசி இலக்கமான 024324 8250 ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

காணி உரிமைக் கோரிக்கைகள் இல்லாத பட்சத்தில் மேற்படி காணி பிரதேச சபைக்குச் சொந்தமானதென வரையறை செய்து பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

வன்னி வலம்

## பயணித்த பேருந்தில் தனது குழந்தையை மறந்து இடையில் இறங்கிய தாய்

முல்லைத்தீவு,நவ.8

மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்த பேருந்தில் தனது நான்கு வயதேயான ஆண்குழந்தையைத் தாய் ஒருவர் தவிக்கவிட்டு விட்டுத் தான் மட்டும் இடையில் இறங்கிய சம்பவம் அண்மையில் நிகழ்ந்துள்ளது.

ஒலுமடுவுக்கு அருகே நடைபெற்ற நடமாடும் குடும்பநல மருத்துவ சேவைக்காகத் தாய் ஒருவர் தனது மகனுடன் சென்றுள்ளார். ஆனால் குறிப்பிட்ட இடம் வந்தவுடன் அந்தத் தாய் தான் மட்டும் இறங்கிச் சென்றுள்ளார். தனது குழந்தையை அவர் மறந்து சென்றுள்ளமை பின்னர்தான் சக பிரயாணிகளுக்குத் தெரிய வந்தது. பிரயாணிகள் கூட்டத்தில் தனிமையில் நின்ற அந்தக் குழந்தை தவித்துக் கொண்டிருந்தது. இதை அவதானித்த பயணி ஒருவர் பேருந்துச் சாரதியிடம் விடயத்தைக் கூறினார். ஆனால் தாய் இறங்கிய இடத்திலிருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தை அப்போது பேருந்து தாண்டியிருந்தது.சாரதி உடனடியாகப் பேருந்தை நிறுத்தினார்.

நல்லவேளையாக பேருந்தில் மகனைத் தவிக்க விட்ட தாய் காலம் தாழ்த்தித் தனது தவற்றினை உணர்ந்து இளைஞர் ஒருவரைச் சைக்கிளில் அனுப்பி வைத்தார். அவர் நிறுத்திய பேருந்து வண்டியிலிருந்து அந்தக் குழந்தையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

தனது குழந்தையையே மறக்கும் அளவுக்கு தாய் மாறியமைக்கு போரின் கொடுமையே காரணம். (க-20)

## சுயதொழில் உதவிகள்

நாவற்குழி,நவ.8

மன்னார் மாவட்டத்தில் இவ்வருடம் ஒக்ரோபர் மாத இறுதிவரையில் 126 வறியவர்கள் சுயதொழில் உதவித் தொகைகளைப் பெற்றுள்ளனர்.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் இந்த உதவித் தொகைகளை வழங்கியுள்ளது. பொதுசன மாதாந்த உதவித் தொகை பெறுவோர், அங்கவீனமுற்றோர் ஆகியோர் இந்த உதவிகளைப் பெற்றுள்ளனர். மீன் வியாபாரம், கருவாடு தயார் செய்தல், தையல், பெட்டிக்கடை, கால்நடை வளர்ப்புப் போன்றவற்றுக்காக இந்த உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. (க-121)

## தும்பு உற்பத்திப் பொருள் நிலையம்

நாவற்குழி,நவ.8

மன்னார் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் அச்சன்குளம் கிராமத்தில் சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதியில் தும்பு உற்பத்திப் பொருள் நிலையமொன்று இயங்கி வருகின்றது.

அச்சன்குளம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் இத் தொழிற்சாலையின் நிர்வாகத்தைக் கவனித்து வருகின்றது.

கிராமத்திலுள்ள பெண்கள் சிலர் இத் தொழிற்சாலையில் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். தும்புத்தடி, விளக்குமாறு போன்ற பொது மக்களின் அன்றாடப் பாவனைப் பொருள்களை இங்கு உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றனர்.

பிரதேச செயலக சமூக சேவைகள் அதிகாரியும், மாவட்ட சமூக சேவைகள் அதிகாரியும் இத் தொழிற்சாலையை மேற்பார்வை செய்து ஊக்குவித்து வருகின்றனர். (க-121)

## வவுனியா மாவட்டத்தில் தொற்று நோய்களுக்குச் சமனாக மக்களைப் பாதிக்கும் தொற்றாத நோய்கள்

வவுனியா,நவ.8

வவுனியா மாவட்டத்தில் தொற்று நோய்களுக்குச் சமனாகத் தொற்றாத நோய்களும் மக்களைத் தாக்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் தொற்று நோய்களான நெருப்புக் காய்ச்சல், வயிற்றுளைவு, காசநோய் என்பன மக்களிடையே பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தி வந்தன. இவற்றிற்குப் பெரிய அளவில் தடுப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டதால் இவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்தது. தற்போது இவற்றிற்குச் சமனாக நீரிழிவு, உயர் குருதியமுக்கம், மார்பகப் புற்றுநோய், வாய்ப்புற்று நோய், ஏனைய புற்றுநோய்கள், ஆஸ்த்துமா, சிறுநீரகப் பாதிப்புக்கள் என்பன மக்களிடையே காணப்படுகின்றன.

இவற்றைக் குறைப்பதற்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட தொற்றா நோய்கள் தடுப்பு வைத்திய அதிகாரியான மருந்துவர் எஸ்.சுரேந்திரன் தெரிவித்தார்.

இந்தத் தொற்றாத நோய்கள் உணவுப் பழக்க வழக்கங்கள் மற்றும் ஏனைய அன்றாட நடைமுறைகள் காரணமாகவே அதிகளவில் ஏற்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதுபற்றிய விழிப்புணர்வைக் கிராமிய மட்டத்தில் ஏற்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பாகவும், இந்த நோய்கள் ஏற்படாது தடுப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றியும் தாம் அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-501)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் - 71
திகதி - 06.11.2010

ஜாதிக சம்பத Jathika Sampatha

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து **X** அதிர்ஷ்ட இலக்கம் **01** வெற்றி இலக்கம் **0 2 1 3 4**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இல. | இலக்கங்கள் | ரூ. | பரிசு |
|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | X | 01 | 0 2 1 3 4 | 21,721,855.00 | - |
| 1 பரிசு | | 01 | 0 2 1 3 4 | 2,000,000.00 | - |
| 2 பரிசு | | | 0 2 1 3 4 | 100,000.00 | 02 |
| 3 பரிசு | | | 2 1 3 4 | 10,000.00 | 24 |
| 4 பரிசு | | | 1 3 4 | 1,000.00 | 235 |
| 5 பரிசு | | | 3 4 | 50.00 | 2363 |
| 6 பரிசு | | | 4 | 20.00 | 23342 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இல. | இலக்கங்கள் | ரூ. | பரிசு |
|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 0 2 1 3 | 1,000.00 | 23 |
| 8 பரிசு | | | 0 2 1 | 100.00 | 240 |
| 9 பரிசு | | | 0 2 | 50.00 | 2410 |
| 10 பரிசு | X | | | 20.00 | 9632 |
| 11 பரிசு | X | 01 | | 100.00 | 1078 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,727,930.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.22,133,752.00

## யா/இமையாணன் அ.த.க.பாடசாலை
## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தமிழ்மாறன் ஆர்த்திகன்
*151 புள்ளிகள்*



கிருபாகரன் ஜசிந்தன்
*142 புள்ளிகள்*

2010ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் இரண்டு மாணவர்கள் சித்தியடைந்ததோடு தோற்றிய 33 மாணவர்களில் 12 மாணவர்கள் 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளையும் பெற்றுள்ளனர். இம் மாணவர்களது வெற்றிக்கு வழிவகுத்த அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஊழியர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(105621)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.தி.கணபதிப்பிள்ளை
*(இளைப்பாறிய கோட்டக்கல்வி அதிகாரி)*

**சேவை விபரம்**

முதல் நியமனம் 01.09.1971 - 09.01.1973

| | |
|---|---|
| | கறுக்காய்தீவு ம.வி. உதவி ஆசிரியர் |
| 10.01.1974 - 31.12.1975 | ஆசிரிய பயிற்சி கலாசாலை ஆசிரியர் பயிலுநர் |
| 01.01.1975 - 27.04.1978 | கறுக்காய்தீவு ம.வி பயிற்றப்பட்ட உதவி ஆசிரியர் |
| 28.04.1978 - 30.04.1979 | பூநகரி ம.வி. - உதவி ஆசிரியர் |
| 01.05.1979 - 29.10.1984 | கறுக்காய் தீவு ம.வி. - உப அதிபர் |
| 30.10.1984 - 25.05.1991 | வேரவில் இந்து ம.வி - அதிபர் |
| 26.05.1991 - 25.06.1997 | கறுக்காய் தீவு ம.வி. - அதிபர் |
| 26.06.1997 - 17.07.2001 | நல்லூர் ம.வி - அதிபர் |
| 18.07.2001 - 31.08.2002 | பூநகரி ம.வி. - அதிபர் |
| 01.09.2002 - 19.11.2009 | பூநகரிக் கல்விக் கோட்டம் *(கோட்டக் கல்விப் பணிப்பாளர்)* |
| 20.11.2009 - 16.02.2010 | பூநகரிக் கல்விக் கோட்டம் *(சேவைக்காலத்தில் எடுக்காத விடுமுறைகளைப் பயன்படுத்தி கோட்டக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றியமை)* |

தி.கணபதிப்பிள்ளை அவர்கள் பூநகரி நல்லூர் ம.வியில் அதி பராக இருந்தபோது ப.அரியரத்தினம் அவர்கள் வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்த வேளை 12.09.1999இல் உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அப்போது பயின்ற 20 மாணவர்களும் உயர்தரப் பரீட்சை யில் சித்தியடைந்ததுடன் 2A, 2B சித்திபெற்று ஒரு மாணவி பல்கலைக் கழகத்துக்கும் தெரிவானார். வேரவில் ம.வியில் அதிபராக இருந்த காலத்தில் பல மாணவர்கள் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றதுடன் அரச சேவையில் அவர்கள் உள்ளீர்க்கப்படவும் வழியாக அமைந்தது. இவ்வாறு சிறப்பான பல சேவைகளையாற்றிய தி.கணபதிப்பிள்ளை அவர்கள் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ்கவென இந் நன்நாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*
அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள்,
பூநகரிக் கோட்டம். (105634)

# தனது தனிப்பட்ட செல்வாக்கை வளர்த்துக்கொள்ள சஜித் முயற்சி

## ஐ.தே.க.வில் முற்றுகிறது முரண்பாடு

கொழும்பு,நவ.8

ஐ.தே.கட்சியின் தலைவர்களான ரணில் விக்கிரமசிங்க, கருஜயசூரிய போன்றவர்கள் கிராமசாரிக்கா (கிராம சஞ்சாரம்) என்ற திட்டத்தின்கீழ் கிராமங்களில் சாதாரணமக்கள் மத்தியில் கட்சியின் செல்வாக்கை வளர்க்க முற்பட்டிருக்கிறார்கள். எனினும் இந்த வேலைத் திட்டத்தில் கலந்து கொள்ளாமல் தனிப்பட்ட முறையில் சஜித் பிரேமதாச இதே போன்ற - சமாந்தரமானதொரு - நிகழ்ச்சித் திட்டத்தை மேற்கொண்டு வருவதாக ஐ.தே.க.வினர் மத்தியில் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று தகவல் வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

ஐ.தே.க. தலைவர்கள் ஹொரணைப் பகுதியில் கிராம சஞ்சாரம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கும் அதே சமயம் சஜித் பிரேமதாச அப்பிரதேசத்திலுள்ள பௌத்த விகாரைகளுக்கு 50 ஆயிரம் ரூபா வீதம் நன்கொடை வழங்கும் நிகழ்வில் ஈடுபட்டு வருகின்றார்.

இவ்வாறு பணம் வழங்கப்பட்டபோது ஐ.தே.க. ஆதரவாளரான விகாராதிபதி ஒருவர் அந்தப் பணத்தை வாங்க மறுத்துவிட்டதாகத் தெரிகின்றது. கட்சியில் இருக்கும் கருத்து முரண்பாடுகளைப் பிரேமதாச முதலில் தீர்த்துக் கொண்டு ஐக்கியப்பட வேண்டும் என அவர் கூறியதாகவும் தெரியவருகிறது.

இருந்தபோதிலும் தமது நன்கொடைகள் மூலம் பௌத்த ஆலயங்களின் பீடாதிபதிகளின் நன்மதிப்பைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியில் பிரேமதாச தொடர்ந்தும் ஈடுபட்டு வருகிறார்.

கட்சியின் தலைமையகத்துக்கான மின்சாரக் கட்டணத்தையும் தொலைபேசிக் கட்டணத்தையும் செலுத்த முடியாத நிலையில் கட்சி இருக்கும்போது சஜித் இவ்வாறு நன்கொடைகளை வழங்க முனைந்திருப்பது அக்கட்சியில் உள்ள அவரது எதிராளிகள் மத்தியில் சிரிப்பை வரவழைத்துள்ளது.

இதற்கிடையில் பிரேமதாசவின் நடவடிக்கைகள் கட்சியில் விரிசல் நிலை ஆழமாக வேரூன்றத் தொடங்கியிருப்பதை ஆரம்ப நிலை உறுப்பினர்கள் மத்தியிலும் எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது என்று கருதப்படுகின்றது.

சஜித் தமது ஆதிக்கத்தை கட்சிக்குள் அழுத்தி நிலைநாட்ட முற்பட்டுவருகிறார். தமது தந்தையாரின் செல்வாக்கைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயல்கிறார் என்று விமர்சகர்கள் பலரும் தெரிவிக்கின்றனர். (ப)

ஆடுவோமே.....



துளிர்க்கும் வசந்தம்!

பிரிட்டிஷ் பிஸ்னஸ் பாடசாலை முன்பள்ளி மாணவர்களின் முத்தமிழ் விழா அண்மையில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சிறுவர்களின் பல்வேறு சபை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (எ-121)

## தேவை

இரும்பு வியாபாரத்தில் அனுபவமுள்ள அல்லது வேலை பழக விரும்புபவர்கள் உடன் தேவை. வயது - 20இற்கும் 35இற்கும் இடைப்பட்டவர்கள். சுதானி றேடர்ஸ், 286,பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாட்டீன் லேனில் 2பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 0452612 (105654)


ஃபுபே செட்
வீட்டுக்கும் மற்றும் ஹோட்டலுக்கு



ரூபா 3950/- விலிருந்து
டைடஸ் ஸ்டோர்ஸ்
புறக்கோட்டை,லிபர்டி பிளாஸா
2439422


## ஆசிரியர்கள் தேவை

பிரபல்யமான வெளியீட்டு நிறுவனத்திற்கு G.C.E.O/L, A/L (New Sylabus) உரிய மாதிரி வினாத்தாள்கள், அலகுரீதியான மீட்டல் பயிற்சிகள் என்பனவற்றினைத் தயாரிக்கக் கூடிய திறமை படைத்த பட்டதாரிகள், பயிற்றப்பட்ட அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் மாவட்ட ரீதியாகத் தேவை.
யாழ்ப்பாணம்- வவுனியா- மன்னார்,வன்னி-
உங்கள் முயற்சிக்கு உரிய வெகுமதி வழங்கப்படும். உங்கள் தொலைபேசி இலக்கம் அடங்கிய சுயவிவரக்கோவையை பின் வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.
SARANYA PUBLICATION
126/16 1/6 V.T.M.Court,
Colombo-13, T.P.: 0773613285 (105661)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தம்பிராசா சுந்தரகாந்தா (மல்லி)

தோற்றம்
*22★11★1934*

மறைவு
*31★10★2008*

திதி: திருதியை 08.11.2010

நாலாறு மாதங்கள் இமைப் பொழுதில் கடந்ததம்மா!
தீராது எம் கவலை தேம்புகின்றோம் உமை நினைத்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சி நிற்கும்

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (105701)

அன்புக் கணவர்
சி.தம்பிராசா.

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2171 திகதி 06-11-2010

ஆங்கில எழுத்திற்கும் **R**

வெற்றி எண்கள் **03 28 54 57**

போனஸ் இல: **31**

ஜக்பொட் பரிசு ரூ. 21,096,025/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 176231 | 20/- | 3,524,620/- |
| 2 இல | 12545 | 100/- | 1,254,500/- |
| 3 இல | 260 | 1,000/- | 260,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7213 | 40/- | 288,520/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 492 | 1,000/- | 492,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 17 | 10,000/- | 170,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 21,096,025/- | - |
| 1 இல + போனஸ் இல | 8359 | 100/- | 835,900/- |
| 2 இல + போனஸ் இல | 363 | 500/- | 181,500/- |
| 3 இல + போனஸ் இல | 03 | 100,000/- | 300,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 354 | 200/- | 70,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 26 | 1,500/- | 39,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,416,840/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 205875 | | 10,016,840/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றியீட்டிய 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கண்டி | 302500107-1-12 |
| மொணராகலை | 302498469-9-13 |
| கொழும்பு | 302501556-9-20 |
| மட்டக்களப்பு | 302512082-8-14 |
| பொலன்னறுவை | 302501869-5-10 |
| புத்தளம் | 302497819-7-40 |
| அம்பாறை | 302503368-7-16 |
| பதுளை | 302501724-2-44 |
| கொழும்பு | 302503105-6-43 |
| மாத்தறை | 302498824-0-00 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 21,576,525/-

ஜயா நிற டிக்கட்டுகள் 2010 நவம்பர் 10 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்டம்; இவ்வாரம் நாடாளுமன்றில் விவாதம்

கொழும்பு, நவ.8

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு இந்தவாரம் எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சிறுபான்மைக் கட்சிகளின் எதிர்பார்ப்புகளைப் பொருட்படுத்தாமல் உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் 11 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்கள் தொடர்பான விசாரணைகள் முடிந்த பின்னர் இந்தவாரம் உயர்நீதிமன்றம் தமது கருத்தை சபாநாயகருக்கு அறிவிக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவுள்ளதாக அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் சிறிய கட்சிகளையும் சிறுபான்மையின மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளையும் இல்லாமல் செய்துவிடும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இருகட்சி ஆட்சிமுறையை வலுப்படுத்தும் இந்தத் திருத்தச் சட்டமூலத்துக்கு சிறுபான்மையினக் கட்சிகள் பலவும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

இதையடுத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகளுடன் இது தொடர்பாக பேச்சு நடத்தப்போவதாக அரசாங்கம் கூறியிருந்தது.

ஆனால் இதுவரை எந்தக் கட்சியுடனும் பேச்சுக்கள் நடத்தப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுபான்மையினக் கட்சிகளின் எதிர்பார்ப்புக்களைக் கண்டுகொள்ளாமல் திருத்தங்கள் எதுவும் செய்யாமலேயே இந்தத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றும் விடயத்தில் அரசாங்கம் உறுதியாக உள்ளது எனக் கூறப்படுகின்றது. (204)

## இரவில் பெருகும் வீதி விபத்துகள்

யாழ்ப்பாணம், நவ.8

குடாநாட்டில் வீதிகளில் மின் விளக்குகள் பொருத்தப்படாததினால் இரவில் அதிகளவு வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன எனக் கூறப்படுகின்றது.

யாழ்நகரிலும் அதனை அண்டிய புறநகர்ப் பகுதிகளிலும் கடந்த வாரத்தில் மட்டும் பத்துக்கும் மேற்பட்ட வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்துக்கள் ஸ்ரான்லி வீதி, நாவலர் வீதி, முனீஸ்வரன் வீதி, பிரதான வீதி, கோயில் வீதி, பண்ணை வீதி போன்ற இடங்களிலேயே அதிகளவில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (204-26)

## வவுனியாவில் லொறி மீது சூடு!

வவுனியா, நவ.8

வவுனியாவில் சோதனைச் சாவடி ஒன்றில் இராணுவத்தினர் லொறி ஒன்றை மறித்தபோது உத்தரவை மீறிச் சென்றதால் அதன்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

வவுனியா இரட்டைப் பெரியகுளம் சோதனைச் சாவடியில் வைத்து லொறியை நிறுத்துமாறு இராணுவத்தினர் சைகை செய்தபோதிலும் அது நிறுத்தப்படவில்லை.

இரண்டாவது சோதனைச் சாவடியிலும் அதே போன்று இராணுவத்தின் சைகையை உதாசீனம் செய்து லொறி சென்றபோதே, இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி லொறியின் உதவியாளர் காயமடைந்தார். அவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சாரதி பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார்.

இந்த லொறியில் கஞ்சா கடத்திச் செல்லப்பட்டதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

உள்ளம் உருகி.....



வேண்டுதல்: இலங்கை வங்கியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற வாணி விழாவில், வங்கியின்தலைவர் டாக்டர் காமினி விக்கிரமசிங்க கலந்துகொண்டார்.

## கடலுக்குச் செல்லாத கரையோர மீனவர்கள்

'ஜல்' புயல் யாழ்.குடாநாட்டைத் தாக்கலாம் என்ற அச்சத்தால் கரையோரப் பகுதி மீனவர்கள் நேற்று முன்தினம் கடற்றொழிலுக்குச் செல்லவில்லை.

எனினும் நேற்றுக் காலையில் மீனவர்கள் சிலர் கரையை அண்டிய பகுதிகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டனர்.

அதேசமயம் இந்த 'ஜல்' புயல் குடாநாட்டை தாக்கலாம் என்றும் இதனால் மீனவர்கள் எவரும் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லவேண்டாம் என்றும் கரையோரப் பகுதிகளில் நேற்று முன்தினம் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. (எ-26)

## பஸிலை ஆயுதங்களுடன் எவரும் இனி நெருங்கிச் செல்ல அனுமதியில்லை

கொழும்பு, நவ.8

ஜனாதிபதியின் சகோதரரும் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷவை எவரும் ஆயுதங்கள் சகிதம் இனிமேல் நெருங்கி வரமுடியாது.

இது தொடர்பான அறிவுறுத்தல் அமைச்சின் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது ஜனாதிபதிக்கு மட்டுமே இவ்வாறான ஒரு பாதுகாப்பு நடைமுறை உள்ளது. அதேபோன்று நடைமுறை அமைச்சர் பஸிலுக்கும் கொண்டுவரப்பட்டுள்ளது.

இவ்வாறு இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில்-

தற்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதி அமைச்சர் முரளிதரன் (கருணா) மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் சி.சந்திரகாந்தன் ஆகியோரே தற்பாதுகாப்புக்காக எவ்வேளையும் கைத்துப்பாக்கிகளை வைத்திருக்கின்றனர்.

அவர்களும்கூட இனி பஸிலைச் சந்திக்கச் செல்லும்போது கைத்துப்பாக்கியைக் கைவசம் வைத்திருக்க முடியாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## புதிய குடிவரவுச் சட்டத்தை அமுலாக்குகிறது கனடா அரசு

கொழும்பு, நவ.8

தாய்லாந்தில் வைத்து அண்மையில் 61 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டமையைத் தொடர்ந்து, கனடா தனது புதிய குடிவரவுச் சட்டத்தை அமுலாக்கும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பில் கனடா அரசாங்கம் விரைந்து செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாககனேடிய குடிவரவுத்துறைஅமைச்சர் ஜேசன் கென்னி தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் மேற்கொள்ளப்பட்ட 3 கட்ட சோதனை நடவடிக்கைகளில் இதுவரையில் 200 பேருக்கும் அதிகமான இலங்கை அகதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் போன்று மேலும் பலர் கனடா நோக்கி வருவதற்கு தயாராக இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் தாய்லாந்து அரசாங்கம், அவர்களைக் கைது செய்வதற்கு முனைப்புக் காட்டி வருகின்ற நிலையில் தாய்லாந்தில் இருந்து விரைவாக வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்ல இலங்கையர்கள் முயல்வதாக புலனாய்வுத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் அவர்களைத் தடுப்பதற்காக, கனடாவின் குடிவரவுச் சட்டத்தை துரிதமாக இறுக்கப்படுத்தும் முயற்சிகள் அவசியப்படுவதாக கனேடியகுடிவரவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (204)

## விஞ்ஞான தின நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.8

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் விஞ்ஞான தினம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு விஞ்ஞான மன்றத் தலைவர் கே.கஜன் தலைமையில்நடைபெறவுள்ளது.


இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியற்றுறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி பி.ரவிராஜன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் கலந்துகொள்வார்.

விஞ்ஞான மன்றத்தினால் வெளியிடப்படும் சஞ்சிகையை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் வி.எஸ்.குணசீலன் வெளியிட்டு வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி வாசுகி ரவிராஜன் வழங்கவுள்ளார். (204-35)

வழி பிறந்தது....



அபிவிருத்தியின் ஆரம்பம்: கைதடி-கோப்பாய் வீதியில் நிர்மாணிக்கப்பட்டு மிக அண்மையில் பாவனைக்குத் திறந்து விடப்பட்ட பாலத்தைப் படத்தில் காணலாம். (த-121)

## தடுப்புக் காவலிலுள்ள கைதிகளின் விவரம் கோருகிறார் மனோகணேசன்

கொழும்பு, நவ.8

கொழும்பு, நீர்கொழும்பு, கண்டி, பதுளை, அநுராதபுரம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உள்ளிட்ட சிறைச்சாலைகளிலும் மற்றும் பூஸா தடுப்புமுகாமிலும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் குடும்பத்தவர்களைத் தொடர்புகொள்ளுமாறு-

மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டாளரும், ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவருமான மனோ கணேசன் அழைப்பு விடுத்துள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களது முழுப்பெயர், அடையாள அட்டை இலக்கம், கைது செய்யப்பட்ட திகதி, தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை அல்லது முகாம், குடும்ப அங்கத்தவரது தொடர்பு விலாசம் மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகிய விவரங்களை மக்கள் கண்காணிப்புக்குழு தபால் பெட்டி இலக்கம் 803, கொழும்பு அல்லது இல.72 பாங்ஷால் வீதி, கொழும்பு-11 என்ற விலாசத்திற்கு அல்லது dpf@ sltnet.lk என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக் கும்படி மக்கள் கண் காணிப் புக்குழு விடுத்துள்ளசெய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.8

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் விஞ்ஞான மன்றத்தின் ஏற்பாட்டில் 'நனோ தொழில் நுட்பம்' என்னும் தலைப்பில் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜே.அகிலவாசன் நிகழ்த்தவுள்ளார். (204)

## பயணிகள் அவதி

யாழ்.முற்றவெளிப் பகுதியில் உள்ள தனியார் பஸ்தரிப்பு நிலையச் சுற்றாடல் கடும் மழையால் சேறும் சகதியுமாக மாறியுள்ளது.

ஏற்கனவே போதிய வசதிகள் இன்றிக் காணப்படும் இந்த பஸ்தரிப்புச் சுற்றாடலில் நிற்கும் இந்தச் சகதி காரணமாகப் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். (ப-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:**
சந்திரனை வழிபட்டு சங்கடங்களை குறைக்க வேண்டும். எங்காவது வெளியில் புறப்படும் நேரத்தில் யாராவது வந்து தங்களின் பிரச்சினைகளை பேசி தொந்தரவு கொடுக்கலாம். பிள்ளைகளிடம் கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். சிலர் கேட்காமலேயே உதவிகளைச் செய்வீர்கள். நம்பிக்கையை இழக்கச் செய்யும் நிகழ்ச்சிகள் நடக்கலாம்.



**இடபம்:**
அனைவரிடம் அன்பாக நடக்கும் நாள். பிரியமான சிலர் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். தந்தை வழியில் உதவிகள் கிடைக்கலாம். நண்பர்கள் சிலர் உங்களுக்காக செலவு செய்யலாம். மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிப்பீர்கள். சில முக்கிய விவரங்களை பெற, வெளியூரில் இருக்கும் ஒருவருடன் பேச நேரிடலாம்.



**மிதுனம்:**
நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்கும் சூழ்நிலை உருவாகும். உங்களின் வேலை ஒன்றை நண்பர் ஒருவர் மூலம் முடித்துக் கொள்வீர்கள். பெண்கள் வழியில் சந்தோஷமான அனுபவங்களை பெறலாம். மதிப்பு, கௌரவம் பார்த்துச் சில காரியங்களைச் செய்வீர்கள். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளலாம்.



**கடகம்:**
சிறிய விடயங்களுக்காக பெரியளவில் அலட்டிக் கொள்வீர்கள். கடந்த காலத்தில் கைவிட்டுப் போனதாக நினைத்த பொருள் ஒன்றை மீட்கலாம். எதிர்கால நலன் கருதி, சில காரியங்களைச் செய்வீர்கள். தர்ம, புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும். சில வேலைகளில் ஆரம்பத்தில் தாமதம் ஏற்பட்டாலும், பின்னர் விறுவிறுப்பாக முடியும்.



**சிங்கம்:**
சில வேலைகளை வேகமாக தொடங்கி விட்டு, பாதியில் விட்டு விடலாம். சிலரிடம் வாக்குக் கொடுப்பதால் வம்பில் மாட்டிக் கொள்ளலாம். நண்பர்களுக்கு தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். சிலரின் தகுதிக்கு மீறிய செயற்பாடுகளைப் பார்த்து எரிச்சல் அடைவீர்கள். ஒவ்வாத பண்டங்களைச் சாப்பட்டு உபாதைகளுக்கு ஆளாகலாம்.



**கன்னி:**
நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். பிரியமான உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் பங்கேற்கலாம். திடீரென எடுத்த முடிவு ஒன்றால் ஆதாயம் பெறும் சூழ்நிலை உருவாகும். பிள்ளைகளின் செயற்பாடுகளை நினைத்துப் பெருமை அடைவீர்கள்.



**துலாம்:**
சிறிய செலவில் முடியும் என நினைத்த காரியம் ஒன்றுக்கு பெரியளவில் செலவா கலாம். சோர்வு, சோம்பல் அதிகரிக்கும். குடும்பப் பெரியவர்களின் தேவைகளை நிறை வேற்றி வைக்கலாம். மருத்துவ செலவுகளைத் தவிர்க்க உடல் நலத்தில் கவனம் அவசியம். வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். ஒருவர் கேட்ட உதவியை செய்ய மனம் இல்லாமல் கையை விரிப்பீர்கள்.



**விருச்சிகம்:**
ஊக்கம், உற்சாகம் குடிகொள்ளும். கணவன், மனைவி இடையே அன்னியோன்யம் கூடும். வரவுகளை எதிர்பார்த்து தாராளமாக செலவு செய்வீர்கள். மாமன், மைத்துனர்கள் உங்களின் சொல்லுக்கு மரியாதை கொடுப்பர். பயணங்கள் பலன் தருவதாக அமையும். ஆபத்தான பொருள்களை கவனமாக கையாள வேண்டும். பிடிவாதமாக நடப்பீர்கள்.



**தனுசு:**
சிறிய வேலை ஒன்றுக்கு பல முறை அலையலாம். குடும்ப உறுப்பினர்கள் செய்ய வேண்டிய சில வேலைகளை நீங்களே செய்யலாம். நீண்ட நாள்களாக தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த ஒருவரை இன்று நேரில் சந்திக்கலாம். முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். உங்களுக்குப் பிடித்த ஒன்று குடும்பத்தினருக்கு பிடிக்காமல் போகலாம்.



**மகரம்:**
உங்களின் ஆலோசனையைக் கேட்டு உறவினர்கள் நடக்கலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். நடக்குமோ, நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று நல்ல விதமாக நடக்கலாம். பெண்கள் வழியில், மனைவி வழியில் பிரச்சினைகள் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். சுபச்செலவு ஏற்படும்.



**கும்பம்:**
எந்த வேலையையும் நாளைக்கு எனத் தள்ளி வைக்காமல், இன்றே செய்து முடிப்பீர்கள். தவறு என தெரிந் தும், சுயநலன் கருதி சில காரியங்களைச் செய்வீர்கள். உங்களின் ஊக்கம், உற்சாகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். வீடு, மனை வாங்க, சீரமைக்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் காணலாம். தம்பயரிடையே பாசம் கூடும்.



**மீனம்:** முன்னர் நீங்கள் குறை சொல்லிய ஒருவரிடமே இப்போது உதவிகள் கேட்கலாம். தாய்வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். வீண் பழிகளை தவிர்க்க பொறுமை, நிதானமாக செயற்பட வேண்டும். அனுபவங்களை ஆதாயமாக்க முற்படுவீர்கள். சிறிய செலவுக்கு யோசித்த நீங்கள் ஒரு காரியத்திற்கு பெரியளவில் செலவு செய்யலாம்.



வட்டு.மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி, சங்கானை அ.மி.த.க. பாடசாலை அதிபர் செல்வி சு.கனகலிங்கம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கில இலக்கியத்துறை உதவி விரிவுரையாளர் ம.திருவரங்கன் ஆகியோரை கல்லூரி அதிபர் மற்றும் மாணவிகள் வரவேற்பதை காணலாம். *(படம்:-சங்கானைச் செய்தியாளர்)*

## வீதியைத் திருத்துமாறு மக்கள் கோரிக்கை

நாவற்குழி,நவ.8

கூளாறுபிட்டி வீதி அண்மையில்பெய்த மழையால் மோசமாகச் சேதமடைந்துள்ளது.

இந்த வீதிக்குப் போடப்பட்ட மண் கரைந்துள்ளதால் கற்கள் கத்திபோல பல இடங்களில் நீட்டிக் கொண்டிருக்கின்றன.

சைக்கிள், மோட்டார் சைக்கிள் ரயர்களையும், பாதசாரிகளின் பாதங்களையும் இவை பதம் பார்த்து வருகின்றன.

நாவற்குழி -கேரதீவு- மன்னார் வீதி பொதுமக்களின் பாவனைக்குத் திறந்துவிடப்படும் போது இந்த வீதி கண்டி வீதிக்கு குறுகிய இணைப்பு வீதியாக இருக்கும்.

சாவகச்சேரி பிரதேச சபையினர் குறித்த வீதிக்குத் தார் போட்டுச் செப்பனிட்டுத் தர வேண்டுமென இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-121)

## மன்னிப்பு



சண்டையை ஆரம்பிப்பது எளிது. அதை நிறுத்துவதுதான் கஷ்டம். இரண்டுபேர் சண்டைபோட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அதை நிறுத்த வேண்டுமென்றால் அந்த இருவரில் யாராவது ஒருவர் விட்டுக் கொடுக்க வேண்டும்... அப்போதுதான் சண்டை முடிவுக்கு வரும்.

யேசு கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவன் பீட்டர். அவன் ஒருசமயம் தன்னுடைய சகோதரனுடன் சண்டைபோட்டுக் கொண்டிருந்தான். அவன் யேசுநாதரிடம் சென்று ''என்னுடைய சகோதரனை நான் எத்தனை தடவை மன்னிக்க வேண்டும்? ஏற்கனவே 7 தடவை மன்னித்திருக்கிறேன்'' என்றான்.

அதற்கு யேசுபிரான் ''உன்னுடைய சகோதரனை நீ எத்தனை தடவை மன்னிக்க வேண்டும் என்பதற்கு அளவு எதுவும் கிடையாது. எப்போதெல்லாம் உன்னுடைய சகோதரன் கோபமடையச் செய்கிறானோ அப்போதெல்லாம் நீ அவனை மன்னிக்க வேண்டும்!''

இப்பதில் பீட்டருக்கு தெளிவு ஏற்படவில்லை. அப்போது யேசு ஓர் கதை கூறினார்.

ஓர் ஊரிலே ராஜா இருந்தார். அவர் கணக்கு வழக்குகளைச் சரிபார்த்துக் கொண்டிருந்த வேளை அவருக்கு ஒரு விஷயம் தெரிய வந்தது.

சேவகன் ஒருவன் பத்தாயிரம் பொற்காசுகள் அரண்மனைக்குச் செலுத்த வேண்டியிருந்தது. எப்போதோ அவன் அதைக் கடனாக வாங்கி இருக்கிறான். திருப்பிக் கொடுக்கவில்லை. சேவகனைக் கூப்பிட்டு ''இதோ பாரப்பா... கடனைத் திரும்பக்கொடுத்துவிடு, இல்லாவிட்டால் உன்னையும், மகனையும்,குழந்தையையும் உன்னிடம் இருக்கும் பொருள்களையும் விற்று... அரசாங்கக் கடனைத் தீர்த்துக் கொள்'' என்றார்.

அந்த சேவகன் அரசனின் காலில் விழுந்து ''என் மீது கருணை காட்டுங்கள் அரசே!'' என்று கூறினான்.

'' சரி! எழுந்திரு மன்னிக்கிறேன்!... நீ எதையும் திருப்பிச் செலுத்த வேண்டாம்! போய்வா!'' என்று அரசர் கூறினார்.

அந்த சேவகன் இன்னொருவனிடம் கடன் வேண்டியிருந்தான். ''என்னிடம் வாங்கிய கடனைத் திரும்பக் கொடு'' என்று அவனும் கேட்க ஆரம்பித்துவிட்டான். ''என்னை இப்போது விட்டுவிடு இன்னும் சில நாள்களில் தருகிறேன்'' என்று கூறினான் அந்தச் சேவகன்.

ஆனால் அவன் அதைக் கேட்கவில்லை. நீதிமன்றுக்குப் போய்விட்டான்! நீதிபதி இது தொடர்பாக விசாரித்தார். சிறைத்தண்டனை விதித்தார். சேவகர்கள் உடனே இந்த விடயத்தை அரசிடம் தெரிவித்தார்கள்,

உடனே ராஜா... ''தன்னிடம் கடன் வாங்கிய ஆசாமியை அழைத்து வருமாறு சொன்னான்.

''இதோபாரப்பா... உன்னிடம் கடன்பட்டவனை மன்னிப்பதற்கு நீ தயாராக இல்லை... அதனால் நானும் உன்னை மன்னிக்க தயாராக இல்லை! நீயும் கடனைத் தரும்வரை சிறையில் இரு'' என்று சொல்லி விட்டார்.

இதுதான் யேசு பீட்டரிடம் சொன்ன கதை.

ஒரு தவறு செய்து விடுகிறோம். நாம் செய்தது தவறு. அதுபோன்ற தவறு செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் ஆண்டவனிடம் மன்னிப்புக் கேட்கும் தகுதி நமக்குண்டு என்று அர்த்தம்.

நாம் இன்னொருவரை மன்னிக்கத் தயாராக இல்லாத போது நம்மை மட்டும் இன்னொருவர் மன்னிக்க வேண்டும் என்று நினைப்பது எந்த விதத்தில் நியாயம்.

**கோ.சுவாமிநாதன்.**

## உண்மையான பிரசாதம் எது?

ஒருவயதான மகாராஜா தனது மகனுக்கு முடிசூடி பட்டம் கட்ட வேண்டும் என்று முடிவு செய்தார்.வில், வாள்,போர், நீதி சாஸ்திரப் பயிற்சிகள் என்பவற்றை அளித்தார்.

இவையெல்லாம் முடிந்தவுடன் தான் ராஜா ஆகிவிடுவேன் என்று இளவரசனுக்குச் சந்தோசம்.

இளவரசனைக் காட்டில் இருக்கும் ராஜ குருவிடம் போய்க் கடைசிக் கட்டப் பயிற்சி பெற்று வரும்படி அனுப்பினார் அரசர். தனக்குத் தெரியாத எந்தப் புதிய விஷயத்தைக் காட்டில் இருக்கும் கிழவன் கற்றுத் தரப் போகிறான் என்று இளவரசனுக்குக் கோபம்.

அரசரின் உத்தரவுப்படி காட்டுக்குப் போனான். அங்கு குரு தவத்தில் இருந்தார். பொறுமையாக நிற்க முடியாமல் தொண்டையைக் கனைத்தார் இளவரசன்.

குருவுக்குக் கோபம் வந்தது. ''எதற்கு எனது தவத்தைக் கலைத்தாய்'' என்று கேட்டார் குரு.

தன்னை அரசர் சீடனாக அனுப்பியதைச் சொன்னான் இளவரசன். விளக்குமாற்றால் ஆச்சிரமத்தில் ஒருகுப்பை இல்லாமல் பெருக்குமாறு உத்தரவு இட்டார் குரு.

''அரசகுமாரன் வீடு கூட்டுவதா?'' மன வருத்தத்தோடு.அலட்சியமாகத் தரையைப் பெருக்கி விட்டு நிமிர்ந்தான் இளவரன்.

தலையில் குட்டிவிட்டு இப்படியா பெருக்குவது என கண்டித்தார் குரு... பயத்தினாலே அடிவாங்காமல் சரியாகச் சொல்லிக் கொடுத்ததை கற்றுக் கொண்டான் இளவரசன்.



''அடியில் இருந்து தப்பவா கற்றுக் கொண்டாய். உன்னை விடமாட்டேன். தூங்கும் போது இந்தக் கத்தியால் குத்திக் கொலை செய்யப்போகிறேன்'' என்றார் குரு. இதன் பிறகு அவர் தவம் செய்ய ஆரம்பித்தார்.

இளவரசன் கதிகலங்கிப் போனான். எப்படி நான் தப்புவது. தவத்தில் இருக்கும் இவரைக் கொன்று விட்டால் நல்லது என்று நினைத்து வாளை நோக்கி நகர்ந்தான் இளவரசன்.

''குருவையே கொல்ல நினைத்தாயே? என்று கண் திறந்து எழுந்தார் குரு.

''நான் நினைத்ததைப் புரிந்து கொண்டு விட்டாரே. இந்த வித்தை அரசனுக்கு அவசியம்... அதனால் தான் அப்பா இவரிடம் அனுப்பி இருக்கிறார்'' என்று புரிந்து கொண்டு குருவின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டான் இளவரசன்.

அவனைத் தழுவிக் கொண்டே ''இந்த வித்தையை இப்பொழுதே உனக்குச் சொல்லித் தருகிறேன்'' என்று தொடக்கினார் குரு.

விழிப்படைந்தவர்கள் பிறர் மனதில் உண்டாகும் எண்ணங்களைச் சொல்லாமலே உணர்ந்து கொள்வார்கள்.

**சுகி.சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகளைப் பேசமுனைதல்

**இலங்கையிலுள்ள தடுப்பு முகாம்களிலுள்ளவர்களைப் பற்றி எவரும் கவலைகொள்வதாகத் தெரியவில்லை.**

**இவர்களது அடிப்படை உரிமைகள் பற்றிப் பேசுவதற்கு இலங்கையிலுள்ள எந்தவொரு மனித உரிமை அமைப்போ அன்றி சட்டவாளர்களோ இன்னமும் துணியவில்லை. இவை குறித்து Green Left Weekly என்னும் இணையத்தளத்தில் Lee Yu Kyung என்பவரால் எழுதப்பட்ட கட்டுரையின் தமிழாக்கம் இது.**

இலங்கையில் சிறுதேசியயினமான தமிழர்களுக்காகத் தனிநாடுகோரிப் போராடிவந்த தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்டவர்கள் சிறிலங்கா இராணுவத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற தடுப்புமுகாம்களின் நீண்டநாள் போர் கைதிகளாகிவிட்டார்கள்.

போரின் இறுதி நாள்களில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் படையினரால் கைதுசெய்யப்பட்டார்கள் அல்லது அவர்களிடம் சரணடைந்தார்கள்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட அல்லது சரணடைந்தவர்களில் சிலரது விதி எதுவென இதுவரை எவருக்கும் தெரியாத அதேநேரம் பலர் படையினரால் நடத்தப்படுகின்ற பல்வேறுபட்ட தடுப்பு முகாம்களிலும் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

நாட்டின் பல பாகங்களிலும் தடுப்பில் வைக்கப்பட்டிருக்கும் தங்களது அன்புக்குரியவர்களை அடிக்கடி சென்று பார்ப்பதற்குப் போதுமான பணவசதிகள் இல்லாத பல குடும்பங்கள் உள்ளன. இவற்றுள் 32 வயதுடைய பாத்திமாவும் ஒருவர்.

நாட்டினது தென்முனையில் காலி மாவட்டத்திலுள்ள பூசா முகாமில் இவரது கணவன் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

போர் உக்கிரமாகத் தொடர்ந்த நாட்டினது வடக்குப் பகுதியில் இவர் மீள்குடியேறிவிட்ட நிலையில் தீவின் மறுபுறத்தே பூசா முகாமில் வாடும் தனது கணவனைப் பார்ப்பதற்காக இவர் கடந்த எட்டுமாதங்களில் ஓரிரு முறைதான் சென்றுவந்திருக்கிறார்.

''நான் ஒவ்வொரு முறை செல்லும் போதும் விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறேன். தமிழர் புனர்வாழ்வுக்கழகம் என்ற தொண்டு நிறுவனத்தில் அவர் பணியாளராக இருந்தார்'' என்கிறார் பாத்திமா.

**“சிங்கள மொழியில் அமைந்த தேசிய கீதத்துடன் தடுப்பு முகாமில் எங்களது நாள் ஆரம்பிக்கும். காலையில் நாங்களும் இதனைப் பாடவேண்டும். தடுப்பில் இருந்த எனது சுவட்டாளி ஒருவர் தேசிய கீதத்தைச் சரியாகப் பாடவில்லை. இதனால் அந்த நாள்பூராவும் முட்டுக்காலில் வெய்யிலில் இருந்து, தேசிய கீதத்தினைப் பாடவேண்டுமென அவருக்குத் தண்டனை வழங்கப்பட்டது.”**

''அவர் மாதக் கொடுப்பனவிற்குப் பணிசெய்த ஒருவர். எனது கணவர் ஒருபோதும் களமுனைக்குச் சென்றதில்லை'' என அவர் கண்ணீருடன் தொடர்ந்தார்.

போரின் இறுதிநாள்களில் தங்களது உயிரைக் கையில் பிடித்துகொண்டு தப்பிவந்த மக்களை ஓமந்தைச் சோதனைச் சாவடியில் விசாரணைக்குட்படுத்திய படையினர் 'ஒரு நாளேனும் புலிகள் அமைப்புடன் இணைந்து செயற்பட்டிருந்தால் அவர்கள் தங்களது பெயர்களைப் பதிவுசெய்யவேண்டும்' என ஒலிபெருக்கி மூலம் அறிவித்திருந்தார்கள்.

''இவ்வாறு புலிகள் அமைப்புடன் தொடர்பினை வைத்திருந்தவர்கள் தங்களது விவரங்களைப் பதிந்தவுடன் அவர்களை உடனடியாகவே குடும்பத்துடன் இணைப்போம் என்றும் குறிப்பிட்ட சிலரை மாத்திரம் ஆகக்கூடியது 3 மாதங்களுக்கு தடுத்து வைத்திருந்துவிட்டு விடுதலை செய்துவிடுவோம் என்றும் படையினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர்'' என்கிறார் 43 வயதுடைய ரஞ்சிதம்.

இந்த நிலையில்தான், வீண் வம்பு வேண்டாம் என நினைத்த ரஞ்சிதம் தனது 25 வயது மகனை இராணுவத்தினரிடம் சென்று பதியுமாறு கூறியிருக்கிறார்.

ஆனால் இவரது மகன் கைதுசெய்யப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் மகன் மீது எந்தவிதமான குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படாது தொடர்ந்தும் தடுப்பில் வைக்கப்பட்டிருக்கிறான்.

ஆனால் ஓமந்தையில் வைத்து அரச படையினர் உறுதியளித்தது போல கைதுசெய்யப்பட்டவர்கள் எவரும் மூன்று மாத காலப்பகுதிக்குள் விடுதலை செய்யப்படவில்லை என்கிறார்கள் இவர்கள்.

''ஏப்ரல் 2007 அன்று எனது மகன் புலிகளால் பிடித்துச்செல்லப்பட்டார். ஆனால் அடுத்த ஆண்டே எனது மகன் புலிகளின் பிடியிலிருந்து தப்பி வந்துவிட்டார். எனது மகனை இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக பதுங்கு குழியில் ஒளித்து வைத்திருந்தேன்'' என சோகத்தில் மூழ்கியிருக்கும் இந்தத் தாய் கூறினார்.

நாட்டினது வடக்குப் பகுதியில் பத்துக்கும் அதிகமான தடுப்பு முகாம்கள் உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆனால், இவ்வாறு எத்தனை தடுப்பு முகாம்கள் உள்ளன, எத்தனை பேர் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் மற்றும் அந்த முகாம்கள் எங்கெங்கே அமைந்திருக்கின்றன என்ற கேள்விகளுக்கான பதில்கள் நாம் யாரிடம் கேள்வியினைக் கேட்கிறோம் என்பதைப் பொறுத்து மாறுபடுகின்றது.

அரச படையினரால் தடுப்பில் வைக்கப்பட்டிருந்த 11696 பேரில் 5819 பேர் விடுவிக்கப்பட்டிருப்பதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.யு குணசேகர கூறியதாக அரச பத்திரிகையான டெய்லி நியூஸ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஆனால் எந்தவிதக் குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படாது தனியாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 800க்கும் அதிகமானவர்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இவை தடுப்பு முகாம்கள் இல்லை. முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வு முகாம்களேதான். வேண்டுமானால் நீங்கள் நேரில் வந்து உறுதிப்படுத்தலாம் எனக் கடந்த பெப்ரவரி முதல் இந்த முகாம்களுக்குப் பொறுப்பாக இருக்கும் பிரிகேடியர் சுனந்த ரணசிங்க கூறுகிறார்.



**“ஒரு நாள் இரவு தடுப்பில் இருந்த மூன்று போராளிகள் ஓடிவிட்டதாக மறுநாள் காலையில் இராணுவத்தினர் கூறினார்கள். இராணுவத்தினர் கூறியதை நம்பவேண்டிய நிலையில் நாம் இருந்தோம்.”**

''கடந்த ஓர் ஆண்டுக்கும் மேலாக புலிகளின் முன்னாள் போராளிகளும் இராணுவத்தினரும் ஒன்றாக, அந்நியோன்னியமாக இருக்கிறார்கள். இவர்களிடத்தே நட்பு வளர்ந்திருக்கிறது'' என அவர் தொடர்ந்து தெரிவித்தார்.

''சரி, இந்த முகாம்களில் முன்னாள் போராளிகள் அடித்துத் துன்புறுத்தப்படுவதாகச் செய்திகள் வெளிவருகிறதே?'' எனக் கேட்ட போது, ''நீங்கள் கேட்கும் இந்த கேள்வியினை நான் வெறுக்கிறேன். சித்திரவதை, துன்புறுத்தல் என நீங்கள் கூறும் இந்தச் சொற்களை நெடு நாள்களின் முன்னர் நாங்கள் எங்கள் அகராதியிலிருந்து எடுத்துவிட்டோம்'' என்றார் அவர்.

எது எவ்வாறிருப்பினும் தடுப்பில் இருந்தவர்கள் வேறு விதமான கதைகளைக் கூறுகிறார்கள்.

''சிங்கள மொழியில் அமைந்த தேசிய கீதத்துடன் தடுப்பு முகாமில் எங்களது நாள் ஆரம்பிக்கும். காலையில் நாங்களும் இதனைப் பாடவேண்டும். தடுப்பில் இருந்த எனது கூட்டாளி ஒருவர் தேசிய கீதத்தினைச் சரியாகப் பாடவில்லை. இதனால் அந்த நாள்பூராவும் முட்டுக்காலில் வெய்யிலில் இருந்து, தேசிய கீதத்தினைப் பாடவேண்டுமென அவருக்குத் தண்டனை வழங்கப்பட்டது'' எனத் தனது தடுப்பு முகாம் வாழ்க்கையினை விவரிக்கிறார் அண்மையில் விடுவிக்கப்பட்ட 39 வதுடைய முன்னாள் போராளி ஒருவர்.

''காலையில் தேசிய கீதம் பாடப்பட்டுக்கொண்டிருந்த போது இருமியதற்காக இன்னொருவருக்கு உதை விழுந்தது'' என அவர் தொடர்ந்தார்.

தடுப்பு முகாம்களில் அனைத்துத் தேவைகளுக்கும் சிங்கள மொழியே பயன்படுத்தப்பட்டது எனவும் தங்களில் பலருக்கு அந்த மொழி தெரியாது என்றும் கூறுகிறார் இந்த முன்னாள் போராளி.

''டிசெம்பர் மாதத்தில் ஒரு நாள் குறிப்பிட்ட ஒருவருக்கு அங்கு நின்ற படையினர் அவ்விடத்தைவிட்டு அகலுமாறு சிங்களத்தில் கூறியிருக்கிறார். அதனை விளங்கிக்கொள்ளாத அவர் எதனையும் செய்யாமல் அப்படியே இருந்தார். இதனால் தங்களை அவமதிப்பதாகக் கூறி கடுமையான அடி விழுந்தது. இதுபோன்ற பல சம்பவங்கள் இடம்பெற்றன'' என்றார் அவர்.

கடந்த ஏப்ரலில் உடல் உறுப்பிழந்தவர்களும் குழந்தைகளுடன் இருந்த பெண்களும் விடுவிக்கப்பட்டபோது தனது ஒரு காலினை இழந்த ஜெயா என்பவரும் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

தாங்கள் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் உடல் உறுப்பிழந்த 107 முன்னாள் போராளிகள் அருகிலிருந்த கட்டடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் அங்கு வந்த பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் உடல் உறுப்பிழந்த ஏழு போராளிகளைத் தனிமைப்படுத்தி எதுவெனத் தெரியாத இடமொன்றுக்குக் கூட்டிச் சென்றதாகவும் ஜெயா கூறுகிறார்.

தடுப்பிலிருந்த பல போராளிகள் பூசா சிறைக்கூடத்திற்கு மாற்றப்பட்டதாகத் தகவல்கள் வெளிவருகின்றன.

எவ்வாறிருப்பினும், அனைத்துலக செஞ்சிலுவைக்குழு போன்ற நடுவு நிலையுடன் செயற்படும் அனைத்துலக அமைப்புக்களால் பதிவுகள் மேற்கொள்ளப்படுவதற்கு அனுமதிக்கப்படாதமையினால் எத்தனைபேர் இவ்வாறு கொண்டுசெல்லப்பட்டனர், அவர்கள் தற்போது எங்குள்ளார்கள் என்ற தகவல்களைப் பெறுவது இயலாத காரியமாகவே உள்ளது.

'காணாமற்போதல்கள்' அதிகம் இடம்பெறும் இருண்ட வரலாற்றினை இலங்கை கொண்டிருக்கும் நிலையில் தடுப்பில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் உறுப்பினர்கள் பலர் காணாமற்போயிருக்கலாம் என்ற அச்சம் அதிகம் காணப்படுகிறது.

(வலிகளை நாளையும் பேசுவோம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணி விற்பனைக்கு**

யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இருந்து 100 யார் தூரத்தில் யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியின் மூன்றாவது ஒழுங்கையில் 2ஆவது காணி நான்கு பக்கங்களும் மதிலுடனும் கிணற்றுடனும் கூடிய ஒரு பரப்பும் 4 குழியுமான விஸ்தீரணம் கொண்ட காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:தொ.பே: 0776629961.


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**கந்தையா மகாலிங்கம்**
(கேசுறா)
தோற்றம்: 14.02.1951
மறைவு: 13.11.2008
திதி: துதியை

வருடங்கள் இரண்டு
கடந்தாலும்
வற்றாத நீரூற்றாய்
எம்மனதில்
என்றும் நிலையாக வாழும்
எங்கள் அப்பாவே!

முணாமலை லேன்,
சுதுமலை தெற்கு, மானிப்பாய். (105702)

மனைவி, பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 19 - 06 - 1954



விண்ணில் 20 - 10 - 2009

## அமரர் அப்பையா தர்மரட்ணம் (கார்ச்சாரதி)

திதி: திருதியை

தந்தையே! எம் தந்தையே எமக்கு
தந்தது உங்கள் பாதுகாப்பினை
கொண்டது நீங்கள் எம்மிடமிருந்து எதுவுமில்லை
சிந்தையில் நிறைந்த நீங்கள் சீரிய வழிகாட்டி
வந்ததே ஆண்டு ஒன்றில் திதி வருடமும் - உருண்டது
கந்தனின் விரத நாளில் கலங்கிய நாம்
அந்த நாள் வரும் நாளெல்லாம் திதி செய்தே
வந்தனை செய்து வணங்குவோம் அப்பாவே!
வருடம் பல வரலாம் வாழ்க்கையும் மாறலாம்
வருடி வளர்த்த பாசத்தை மறவோம் அப்பா!
மறவாமை என்ற மனக்கோயிலில் நீங்களே
உறவாடி உறைந்துள்ளீர்கள் அப்பா!

ஐயன்னா வீதி,
அம்பனை மேற்கு, சுன்னாகம். (105660)

அஞ்சலிக்கும்:
குடும்பத்தினர்.

## முதலிடம்



தென்மராட்சி, நவ.8

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவி கவினா கனகேஸ்வரன் மாகாணமட்டத் தமிழ்தினப் போட்டிகளில் மனக்கணிதம், வாய்பாடு மனனம் ஆகியவற்றில் முதலிடம் பெற்றுள்ளார். (201-207)

## பஸ்சேவை சீரடைந்தது

நாவற்குழி, நவ.8

கைதடி வடக்கு- யாழ்.பஸ்சேவை 4 வருடத்திற்குப் பின்பு இயல்பு நிலையை மீண்டும் அடைந்துள்ளது.

பாடசாலைச் சேவைகள் ஏனைய 2 சேவைகளும் மீள ஒழுங்காக நடைபெறுவதை முன்னிட்டு இப்பிரதேச மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சி மேற்கு அபிவிருத்திக் குழுவின் கோரிக்கையை அடுத்தே இந்த பஸ்சேவைகள் சீரடைந்துள்ளன. (எ-121)

## தரமுயர்வு

சமூக சேவைகள் அதிகாரிகளாக சேவையில் உறுதிப்படுத்தப்பட்டு 10 வருடங்களுக்குமேல் கடமையாற்றுபவர்களை முதலாம் வகுப்பிற்குத் தரம் உயர்த்தும் வகையில் புதிய சேவைப் பிரமாணம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

வட மாகாண உள்ளூராட்சி, சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ், சமூகசேவைகள் பணிப்பாளர் க.சிவகரன் ஆகியோரின் வேண்டுகோளுக்கு இணங்க வட மாகாண ஆளுநர் இந்தப் புதிய சேவைப் பிரமாணத்தினை வெளியிட்டுள்ளார். (எ-121)

## கைக்குண்டுகள் மீட்பு

மட்டக்களப்பு, நவ.8

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிண்ணையடிக் கிராமத்தில் போத்தலில் அடைக்கப்பட்ட நிலையில் இரண்டு கைக்குண்டுகள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் மின்சாரத் தூண் ஒன்றை அமைப்பதற்காகப் பொதுமக்கள் சிரமதான அடிப்படையில் துப்புரவாக்கிய போது இக்கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. (எ-319)

## வீதி சேதமடைந்ததால் விழுந்தெழும்பும் பயணிகள்

யாழ்ப்பாணம், நவ.8

ஊர்காவற்றுறையிலிருந்து பண்ணைக்கு இடைப்பட்ட பிரதான வீதி சேதமடைந்துள்ளதால் மோட்டார் வாகனத்தில் செல்லும் பயணிகள் ஒரு நாளைக்கு ஒருவராவது விழுந்து எழும்பும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வீதியில் குண்டும், குழியும் அதிகமான காணப்படுவதாலும், சேறும் சகதியும் அதிகமாகக் காணப்படுவதாலுமே இவ்வாறான நிலை தோன்றியுள்ளது.

இதனால் விபத்தினைத் தடுப்பதற்காக மோட்டார் வாகனத்தில் செல்லும் பயணிகள் இந்த வீதியால் இறங்கி நடக்கவேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது. (எ-325)

### படைமுகாம் மூடப்பட்டது

மீசாலையில் கடந்த பத்து வருடங்களாக இயங்கி வந்த படைமுகாம் கடந்த முதலாம் திகதி தொடக்கம் மூடப்பட்டு அங்கிருந்து படையினர் வெளியேறியுள்ளனர்.

படையினரால் பயன்படுத்தப்பட்ட வீடுகளின் திறப்புக்கள் ஊர்ப் பிரமுகரிடம் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-207)


**மஹஜன ஸம்பத / மஹஜன சம்பத / Mahajana Sampatha**

05.11.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2314

வெற்றி எழுத்து: V
வெற்றி எண்கள்: 7 7 5 2 0 4

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | V | 7 | 7 | 5 | 2 | 0 | 4 | ரூபா.15,936,482/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 7 | 7 | 5 | 2 | 0 | 4 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 7 | 5 | 2 | 0 | 4 | ரூபா. 100,000/= | பரிசுகள் 14 |
| 3 பரிசுகள் | | | | 5 | 2 | 0 | 4 | ரூபா. 10,000/= | பரிசுகள் 125 |
| 4 பரிசுகள் | | | | | 2 | 0 | 4 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1168 |
| 5 பரிசுகள் | | | | | | 0 | 4 | ரூபா. 100/= | பரிசுகள் 11796 |
| 6 பரிசுகள் | | | | | | | 4 | ரூபா. 20/= | பரிசுகள் 116717 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 7 | 7 | 5 | 2 | 0 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 12 |
| 8 பரிசுகள் | | 7 | 7 | 5 | 2 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 114 |
| 9 பரிசுகள் | | 7 | 7 | 5 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1185 |
| 10 பரிசுகள் | | 7 | 7 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 11658 |
| 11 பரிசுகள் | V | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 46523 |

சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 13,197,800.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட் சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
www.nlb.lk



# A/L 2010 மாணவர்கள்

? உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ, **(UK, Canada, Australia, India, Ukraine, Malaysia, USA, New Zealand, Singapore)** கல்வி கற்பதற்கான வாய்ப்பை எதிர்பார்க்கின்றீர்களா?

இன்றே எமது **STUDENTS DATA BANK**ல் உங்களை பதிவு செய்து கல்வி சம்பந்தமான முழுமையான விபரங்களையும் இலவசமாக பெற்றுக் கொள்ளவும்.

Name :........................................
Address :........................................
........................................
.................... Tel :....................
**Name of your School** :........................................
A/L Stream : BIO / MATHS/ COMMERCE/ ARTS (Circle)
A/L Exam Index No :........................................
E-mail :........................................

உங்கள் விபரங்களை கடிதத்திலோ/ தபாலட்டையிலோ எழுதி அனுப்பவேண்டிய முகவரி

**SIC CENTRE**
734, Hospital Road, Jaffna.
TEL: 0777-767818



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள் 1240 சிகப்பு

விருச்சிகம் 22 36 48 53 05-11-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 3,069,800/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 209,999 | 20/- | 4,199,980/- |
| 2 இலக்கங்கள் | 19,344 | 40/- | 773,760/- |
| 1 இல. + லக்கினம் | 19,105 | 60/- | 1,146,300/- |
| 2 இல. + லக்கினம் | 1,778 | 200/- | 355,600/- |
| 3 இலக்கங்கள் | 522 | 1000/- | 522,000/- |
| 3 இல. + லக்கினம் | 45 | 10,000/- | 450,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 3,069,800/- | 3,069,800/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 10,917,440/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 563 | | 980,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 251,359 | | 11,897,440/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகைரூபா 2,000,000/-

## இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்
மேடம் 16 27 39 43
ஜக்பொட் பரிசு ரூபா. 500,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 560 | 500/- | 280,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 500,000/- | 500,000/- |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 563 | | 980,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 200,000/-


# முக்கிய அறிவித்தல்

## பூநகரி க.தொ.கூ.ச.சமாசம் (வ-து)
## 30.04.2009 இல் நிதிக்கூற்றுத் தயாரித்தல்

மேற்படி எமது சமாசம் மீளக்குடியமர்ந்த பின் 30.04.2009 இல் சமாச மூலதனக் கணக்குகளை ஒழுங்கமைக்கும் முகமாக, சமாச நடவடிக்கையுடன் தொடர்புடையவர்களிடமிருந்து 30.04.2009 இல் உள்ளவாறான கீழ்வரும் மீதிகளை உறுதிப்படுத்தி 25.11.2010 இற்கு முன்னர் தலைவர்/பொதுமுகாமையாளர், பூநகரி க.தொ.கூ.ச.சமாசம், ஜெயபுரம், பூநகரி எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம்.

1) சமாசத்திற்கு வருமதியானது
   1. வியாபாரக் கடன் பெற்றோர்/வியாபார வருமதிகள்/ ஏனைய வருமதிகள்
   2. சமாசத்திடமிருந்து கடன் பெற்றோர்
   3. முற்பணம் பெற்றோர்

2) சமாசத்திடமிருந்து செலுத்த வேண்டியவை
   1. வியாபாரக் கடன் வழங்கியவர்/வியாபாரச் சென்மதிகள் ஏனைய சென்மதிகள்
   2. சமாசம் பெற்ற கடன்கள்
   3. முற்பணங்கள்

3) சமாச கிராமிய வங்கியில் வைப்புச் செய்தோர்
   1. நிலையான வைப்பு
   2. சேமிப்பு வைப்பு
   3. ஏனையவை

4) சமாச கிராமிய வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட
   1. கடன்கள்
   2. முற்பணங்கள்

**குறிப்பு:-**
சமாசம் தொடர்பான தகவல்கள்/விவரங்கள் இருப்பின் எழுத்துமூலம் தெரியப்படுத்தவும்.

பொது முகாமையாளர்,
பூநகரி க.தொ.கூ.ச.சமாசம்.

(சி/572706)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுரையைப் பின்பற்றாததால் சிலரின் பெரும்போக நெற்செய்கை பாதிப்பு

## விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவிப்பு

அம்பாறை, நவ.8

விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களின் அறிவுரைகளைப் பின்பற்றாமையே இம்முறை பெரும்போக நெற்செய்கையின் போது, விவசாயிகள் பலரின் பயிர்கள் நீரின்றி அழிவடைந்தமைக்குப் பிரதான காரணமாகும் என பாலமுனை விவசாய விசாலிப்புத் திணைக்கள விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

இம்முறை பெரும்போக நெற்செய்கையின் பொருட்டு ஒக்ரோபர் 15ஆம் திகதிக்கும் நவம்பர் 15ஆம் திகதிக்கும் இடைப் பட்ட காலப்பகுதிக்குள் விதைப்பு நடவடிக்கையில் ஈடுபடுமாறு அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு நான் அறிவுறுத்தல் விடுத்திருந்தேன். எனினும் அதை அதிகமான விவசாயிகள் பின்பற்றவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனாலேயே பலர் விதைத்த நெல் நீரின்றி அழிந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது. விவசாய உத்தியோகத்தர்களின் அறிவுரையைப் பின்பற்றியிருந்தால் இவ்வாறான கைச்சேதம் ஏற்பட்டிருக்காது என்றும் அவர் காரணம் கூறியுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் நெற்செய்கையில் ஈடுபடும் அதிகமான விவசாயிகள், விதைப்புக்கான காலம் தொடர்பாக விவசாய உத்தியோகத்தர்கள் வழங்கியிருந்த அறிவுரையைப் பின்பற்றாமல், குறித்த காலத்துக்கு முன்பே விதைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு விட்டார்கள்.




இதனால், விதைக்கப்பட்ட நெல் விதைகள் நீரின்றி பழுதடைந்தன. அத்தோடு, எறும்பு, கறையான் ஆகியவற்றாலும் சேதமடைந்துள்ளன.

இதனால் இரண்டாவது முறையாகவும் விதைக்க வேண்டிய நிலை பல விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. சில விவசாயிகள் விவசாய உத்தியோகத்தர்களின் அறிவுரையைப் பின் பற்றி அம்பாறை மாவட்டத்தில் தற்போது விதைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (ளி)

# மட்டக்களப்பில் 87 இந்து ஆலயங்களுக்கு பிரதமர் நிதியுதவி வழங்கினார்

மட்டக்களப்பு, நவ.8

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்த பிரதமரும் மத விவகார புத்தசாசன அமைச்சருமான டி.எம்.ஜயரட்ன கல்லடியில் அமைந்துள்ள கிழக்கு பல்கலைக்கழக அழகியற் கற்கைகள் நிலையத்தில் இந்துமத ஆலய அறங்காவலர்கள், இந்து மத குருமார்கள், மதத்தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்துப்பேசினார். அத்துடன், இந்துமத மேம்பாட்டுக்கான நிதியுதவியையும் வழங்கினார்.

சுமார் 87 ஆலயங்களுக்கு இதன்போது காசோலைகள் வழங்கப்பட்டன. இங்கு வருகை தந்த பிரதமருக்கு தமிழ் கலாசார முறைப்படி மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. அத்துடன்நினைவுச்சின்னங்களும் வழங்கப்பட்டன. இங்கு பிரதமர் பொன்னாடை போத்துக் கௌரவிக்கப்பட்டார்.

இந்துமத வளர்ச்சிக்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியநடவடிக்கைகள் தொடர்பான மகஜரும் இதன்போது பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர், முதலமைச்சர், தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், அரச அதிபர் ஆகியோர் உட்பட அரசியல் பிரமுகர்களும் இதில் கலந்துகொண்டனர். (ளி)

# கன்னியா வெந்நீரூற்றுப் பிரதேசத்தின் பாதுகாப்புக் கடமையில் இராணுவம்..?

திருகோணமலை, நவ.8

திருமலை நகர சபை நிர்வாகத்தின் கீழிருந்து தொல்பொருள் திணைக்களத்தால் பொறுப்பேற்கப்பட்ட கன்னியா வெந் நீருற்று பிரதேசத்தின் பாதுகாப்புக்கு இராணுவத்தினரை ஈடுபடுத்தும் திட்டமொன்று தற்போதைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

திருமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் கட்டுப்பாட்டில் கன்னியா வெந்நீரூற்றுகள் பராமரிக்கப்பட்டன. அப்போது பாதுகாப்புப் பணியில் கடற்படையினர் அமர்த்தப்பட்டிருந்தனர். வெந்நீரூற்றுக்கு வரும் பார்வையாளர் களிடமிருந்து பிரவேசப் பத்திரம், வாகனத் தரிப்பிடம் ஆகியவற்றுக்கென கட்டணம் அறவிடப்பட்டது.

ஆயினும் வெந்நீரூற்றுக்களை அண்டிய பிரதேசம் ஓரளவுக் கேனும் சுத்தமாகப் பராமரிக்கப்பட்டது. அத்துடன், அங்கு வரும் பார்வையாளர்களுக்கான கழிப்பிட வசதிகளும் சீராக இருந்தன.

எனினும் தொல்பொருள் திணைக்களம் அதனைப் பொறுப்பேற்றதன் பின் தற்போது அப்பிரதேசம் முழுக்க அசுத்தம் நிரம்பியுள் ளது. நாய்கள் நடமாட்டம் பெருகியுள்ளது. துர்நாற்றம் வீசுகிறது எனப் பரவலாக முறைப்பாடுகள் எழுந்துள்ளன.

அத்துடன் பார்வையாளர்களைக் கட்டுப் படுத்த ஒருவரும் நியமிக்கப்படவில்லை. அதனால் வெந்நீரூற்றுப் பிரதேசம் சிதைவுக் குட்படுகிறது என்றும் முறையீடுகள் எழுந் துள்ளன.

இவ்வாறான விடயங்களைக் கருத்திற் கொண்டே வெந்நீரூற்றுப் பிரதேசப் பாதுகாப்புப் பணியில் இராணுவத்தினரை அமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு தொல்பொருளியல் திணைக்களம், திருமலை மாவட்ட அரச அதிபர் மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதேவேளை, வெந்நீரூற்றை அண்டி அமைந்திருக்கும் இந்துக் கோயில், முஸ்லிம் துறவியொருவரின் அடக்கத்தலம் (ஸியாரம்) ஆகியவை தொடர்ந்தும் பொது மக்களின் பயன்பாட்டுக்குத் தடைசெய்யப்பட்டவையாகவே இருக்கும் என்றும் அறிய முடிகின்றது. (ளி)

# ஆற்று மீன்கள் திடீரென உயிரிழப்பு

மட்டக்களப்பு, நவ.8

அட்டாளைச்சேனை கோணாவத்தை ஆற்றிலுள்ள மீன்கள் திடீரென உயிரிழந்து நீரில் மிதக்கத் தொடங்கியுள்ளன. இதற்கான காரணம் உடனடியாகக் கண்டறியப்படவில்லை. எனினும், இயற்கை மாற்றம் காரணமாக மீன்கள் திடீரென இறந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

மீன்கள் இவ்வாறு உயிரிழந்துள்ளமையால் இந்த ஆற்றில் மீன்பிடித் தொழிலை நம்பி வாழும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

மீன்கள் மடிந்து மிதப்பதால் அப்பிரதேச சுற்றாடல் முழுவதும் துர்நாற்றம் வீசுகிறது என்றும், தாங்கள் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என்றும் மக்கள் தெரிவிக்கிறார்கள். மேற்படி கோணாவத்தை ஆறு, சுமார் 4 கிலோமீற்றர் நீளமும், 350 மீற்றர் அகலத்தையும் கொண்டது. (ளி)

# கண்டியில் ஆர்ப்பாட்டம்

கண்டி, நவ.8

மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அரசுக்கு ஆதரவு தெரிவித்தும் கடந்த வியாழக்கிழமை மாலை கண்டி நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

ஜே.வி.பியினர் பல்கலைக் கழகங்களில் ஊடுருவி தம்பிள்ளைகளின் கல்வியைப் பாழ்படுத்துவதாகக் குற்றம் சுமத்தி சுலோகங்களை ஏந்தி நின்றனர்.

அரசின் அபிவிருத்திப் பணிகளுக்கு தவறான விளக்கம் கொடுத்து மக்கள் விடுதலை முன்னணியினர் பொது மக்களை திசை திருப்புகின்றனர் என்றும் அவர்கள் தெரிவித் தனர்.

சுமார் 500 பேர் இதில் கலந்து கொண்டனர். கண்டி டொரிங்டன் பகுதியில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. (ளி)

## காக்கும் கரங்கள்...



மகிழ்வின் தருணம்: ஹல்து முல்லை நிக்கபெத்த ஆயர் சிறுவர் காப்பகத்துக்கு ஊவா மாகாணசபை உறுப்பினரும் மலையக-மக்கள் முன்னணியின் உப தலைவருமான அ.அரவிந்தகுமார் விஜயம் செய்து அங்குள்ள சிறுவர்கள், மேற்பார்வையாளர்கள், காப்பகத்தின் பொறுப்பாளர் வண.பிதா பொஸ்கோ மரியம்பிள்ளை ஆகியோரோடு கலந்துரையாடினார்.

# கஞ்சா விற்பனை செய்த மூன்று சகோதரிகள் கைது

கண்டி,நவ. 8

கண்டிப் பிரதேசத்தில் பெருமளவில் போதை பொருளை விநியோகம் செய்த பிரதான பெண்ணொருவரை கடந்த வியாழக்கிழமை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் கைது செய்தனர்.

இரண்டு நாள்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்ட பெண்கள் இருவரிடம் நடத்திய விசாரணையின் பேரிலேயே பிரதான சந்தேகநபர் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட இம்மூன்று சகோதரிகளிடமிருந்து சுமார் 15 கிலோகிராம் கஞ்சாவும் 33,150 ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கண்டி, பேராதனை ஹிந்தகல பிரதேசத்தில் நீண்ட காலமாக கஞ்சா விநியோகிப்பதில் ஈடுபட்டடு வந்துள்ளனர் என கூறப்படும் இம்மூன்று சகோதரிகளையும் பெரும் சிரமத்துக்கு மத்தியிலேயே தாங்கள் கைது செய்தனர் என பொலிஸார் கூறுகின்றனர்.

# பாரிய திட்டங்கள் அமுலாகும்போது மக்களின் நலனில் அரசு தீவிர கவனம்

## மேல்கொத்மலையில் ஜனாதிபதி உரை

கொழும்பு, நவ. 8

மக்களுக்காகவே சகல அபிவிருத்திகளும் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும் செயற்திட்டங்களைநடைமுறைப்படுத்துகையில் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாது மக்கள் நலனைக் கொண்டதாக அவை அமைவதில் அரசு முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. அதற்கு மேல் கொத்மலை நீர்மின் திட்டம் சிறந்த உதாரணமாகும் என ஜனாதிபதி தெரிவித்தார்

மேல் கொத்மலை நீர் மின் திட்டத்திற்கான சுரங்கப் பாதையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வியாழக்கிழமை மக்கள் பார்வைக்காக உத்தியோகபூர்வமாகத் திறந்துவைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர்கள் பாட்டலி சம்பிக்க ரணவக்க, ஆறுமுகன் தொண்டமான், சி. பி. ரத்நாயக்க, பிரதியமைச்சர் முத்துசிவலிங்கம், நாடாளுமன்ற உறுப்பிணர்கள் பி. திகாம்பரம், ஸ்ரீரங்கா, ராதா கிருஷ்ணன் உட்பட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ராஜதந்திரிகள், மத்திய மாகாண அமைச்சர் திருமதி அனுஷியாசிவராஜா ஆகியோரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

மேல் கொத்மலை நீர்மின் திட்டமானது 300 மெகாவாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு திட்டமாகும். எனினும் தற்போது அதன் மூலம் 150 மெகாவாட்ஸ் மின்சாரமே உற்பத்தி செய்யப்படவுள்ளது. இதனால் ஒரு புறம் அபிவிருத்திக்கு நட்டும் [illegible], இப்பிரதேச மக்கள் நலனைக் கருத்திற் கொண்டே இதற்கான தீர்மானத்தை நாம் எடுத்தோம்.

சில நாடுகளில் பல மணித்தியாலங்கள் மின்சாரத் தடைகள் நடைமுறையில் உள்ளன. எனினும் எமது நாட்டில் அவ்வாறில்லை. ஆசியாவிலேயே ஒவ்வொரு வீடும் மின்சாரம் உபயோகிக்கும் நாடாக இலங்கையை விரைவில் நாம் உருவாக்குவோம். அதற்கான திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதனைக் கருத்திற்கொண்டே அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறார்கள். நவீன இலங்கையைக் கட்டியெழுப்ப இத்தகைய அபிவிருத்தித் திட்டங்கள் மிக முக்கியமாகும்.




மேல் கொத்மலை திட்டத்துக்கு நிதியுதவி வழங்கிய ஜப்பானிய அரசிற்கும் இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் பொறியியலாளர்கள் உள்ளிட்ட சகலருக்கும் எமது மனமார்ந்த நன்றி எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ளி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்

## O/L மாவட்ட வலம் - 2010

### க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்கள்

கல்வி உலகின் ஊடக முன்னோடி உதயன்

நன்றிக்கும் பாராட்டுக்குமுரிய ஆசிரியர்
L.A பர்ஹான், புத்தளம்.

G.C.E.(O/L) வலம்-5 வெளியீடு-1

புத்தளம்

## தமிழ் - I

**நேரம்: 1 மணித்தியாலம்**

கவனிக்குக:
* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

* பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01. கண்ணகன் ஞாலம் களிகூர - மண்ணரசர் களி என்பதன் ஒத்த கருத்துச் சொல்
 1) துக்கம் 2) பயம் 3) மகிழ்ச்சி 4) துன்பம்

02. பேற்றிலே மிகு மொருவன் புல்லரிடமகப்பட்டால் பிழைகள் செய்வர். புல்லர் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
 1) நல்லவர் 2) தீயவர் 3) கயவர் 4) பொய்யர்

03. நெல்லியின் வித்து மணி போல கற்றாளையின் உள்ளீடு
 1) பருப்பு 2) அரிசி 3) சோறு 4) கொட்டை

04. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன
 1) ஐம்பொறி 2) ஐம்பூதம் 3)ஐங்கனை 4) ஐம்புலன்

05. நான்காவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா
 1) பருத்தி விழா 2) தோல் விழா 3) மரவிழா 4) பூ, பழ விழா

06. புகையிலை சிற்பம் போல புல்
 1) கற்றை 2) குவியல் 3) அடுக்கு 4) கொத்து

07. அவனுடைய உள்ளம் அவனுக்கு பகையாகி விடுகின்றது. இதில் வந்துள்ள சொல்லுருபு
 1) இருந்து 2) உடன் 3) உடைய 4) கொண்டு

08. போர்க்கலத்தில் பலவகைப்பட்ட படை வகுப்புக்களின் இறுதியில் நிற்கும் படை
 1) கற்றை 2) தூசிப்படை 3) அதிரடிப்படை 4) கூழைப்படை

09. யான் இதனை இயற்றாது விடின் இதனைச் செய்வேன் என்று ஆணையிட்டுரைத்தல்
 1) சூளுரைத்தல் 2) செங்கோன்மை
 3) எய்ப்பில் வைப்பு 4) உகையனுமானம்

10. வினையெச்ச விகுதி எது?
 1) மல் 2) ஆர் 3) கார் 4) இயர்

11. உயிர்மெய், நெடில் எழுத்துக்களின் எண்ணிக்கை
 1) 216 2) 126 3) 90 4) 18

12. கண்விழித்து விழித்து நோக்குதல் என்றால்
 1) மலருதல் 2) கண்ணால் பார்த்தல்
 3) நித்திரைவிட்டெழுதல் 4) உற்று நோக்குதல்

13. விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி முதலிடம் பெறுபவர்களுக்கு வழங்கப்படுவது
 1) வெள்ளிப்பதக்கம் 2) வெண்கலப்பதக்கம்
 3) தங்கப்பதக்கம் 4) வெற்றிக்கேடயம்

14. ''உண்டே மரணம்'' என்பதற்குப் பொருத்தமான தமிழ் வடிவம்
 1) தேற்றம் 2) எதிர்மறை 3) பிரிநிலை 4) வினா

15. ''Census'' என்பதற்குப் பொருத்தமான தமிழ் வடிவம்
 1) வானிலை 2) காலநிலை
 3) தொகைமதிப்பு 4) கனிப்பொருள்கள்

16. இறந்தகால வினா இடைநிலை அல்லாதது
 1) த் 2) ச் 3) ட் 4) ற்

17. உரிப்பகாப்பதம் எது?
 1) இனி 2) மற்று 3) தவ 4) அம்ம

18. வேய்ங்குழல் என்பதைப் பிரித்தெழுதினால்
 1) வேயங்+குழல் 2) வேய்+குழல்
 3) வே+குழல் 4) வேய்த்த+குழல்

19. ''பிஸ்கோத்து, துட்டு'' என்பன எந்தெந்த நாடுகளுக்குறிய மொழிச்சொற்கள்?
 1) போர்த்துக்கல், ஒல்லாந்து 2) பிரான்ஸ், பாரசீகம்
 3) போர்த்துக்கல், பிரான்ஸ் 4) பிரித்தானியா, ஒல்லாந்து

20. வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்க்கையில் பல இன்னல்களை அனுபவித்தனர் என்பதை விளக்க பொருத்தமான உவமைத்தொடர்
 1) வெயிலிற்பட்ட புழுபோல 2) சிறகிழந்த பறவை போல
 3) மீகாமனில்லா மரக்கலம் போல 4) சுழல் காற்றில் அகப்பட்ட துரும்பு போல

21. புலி உறுமும் போல பன்றி
 1) முக்காரம்போடும் 2) கத்தும்
 3) உறுமும் 4) கதறும்

22. விமலன் பாடசாலை செல்லாமல் இருப்பதற்காக வேண்டி அம்மாவிடம் சாக்குப்போக்கு பலவற்றை கூறினான். சாக்குப்போக்கு என்பது,
 1) இரட்டைக்கிழவி 2) இணைமொழி
 3) அடுக்குத்தொடர் 4) அடுக்கிடுக்குத்தொடர்

23. சேர, சோழ, பாண்டியன், வட்டப்பலகை, எரிகதிர் என்பன முறையே எத்தொகைக்குள் அடங்குகின்றன?
 1) உம்மைத்தொகை, பண்புத்தொகை, வினைத்தொகை
 2) வேற்றுமைத் தொகை, பண்புத் தொகை, வினைத்தொகை
 3) வினைத்தொகை, உம்மைத்தொகை, பண்புத்தொகை
 4) பண்புத்தொகை, வினைத்தொகை, உம்மைத்தொகை

24. இக்கட்டான சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி நன்மை பெற முயல்பவன் என்ற கருத்தைத் தரும் பழமொழி.
 1) புத்திமான் பலவான்.
 2) வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு.
 3) ஊர் குழம்பினால் உடையாருக்கு வேட்டை.
 4) எதார்த்தவாதி வெகுசன விரோதி.

25. இமையவர் போற்றிசெய்ய மன்னவனாக யானே சூட்டுவன் மகுடம். இதிலுள்ள செயற்படு பொருள்,
 1) இமையவர் 2) மன்னவனாக 3) யானே 4) மகுடம்

26. நீ இவ்வுதவியைச் செய்ய வேண்டும் .............................. நான் செய்ய வேண்டும்
 1) ஆயினும் 2) ஆனாலும் 3) இல்லாவிடில் 4) என்றாலும்

27. பின்வருவனவற்றுள் இடைநிலை உறுப்பு இடம்பெறாத சொல்
 1) கண்டான் 2) அறிஞன் 3) ஓடினான் 4) உண்ணும்

28. படர்க்கைக்கே உரித்தான பெயர்களுள் ஒன்று முன்னிலைக்கும் வருவது உண்டு
 1) நீங்கள் 2) நீவிர் 3) தாங்கள் 4) நீர்

29. திருக்குறளில் இல்லாத பொருள் வேறெங்கும் இல்லை. இங்கு கையாளப்பட்டுள்ள அணி
 1) உவமை 2) உருவகம்
 3) தற்குறிப்பேற்றம் 4) உயர்வுநவிற்சி

30. பனையாலே விழுந்தவனை மாடேறிமிதித்தது. இதில் பனை[illegible] யாது?
 1) இரண்டாம் வேற்றுமை உருபு 2) மூன்றாம் வேற்றுமை உருபு
 3) ஐந்தாம் வேற்றுமை உருபு 4) ஏழாம் வேற்றமை உருபு

31. தரப்பட்ட சொல் வகைக்கு பொருந்தாத ஒரு சொல் இடம்பெறும் வரிசை
 1) பெயர்ச் சொல் - கொழும்பு, பாடசாலை, மாணவன்
 2) வினைச் சொல் - ஓடினான், ஓடும், ஓட்டம்
 3) உரிச்சொல் - சால, உறு, நனி
 4) இடைச் சொல - ஓ, ஆ, தோறும்

32. நடந்து முடிந்த பரீட்சையில்,
 1) ஏதாவது ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கும்படி கேட்கப்பட்டோம்.
 2) எவையேனும் ஐந்து வினாவுக்கு விடையளிக்கும்படி கேட்கப்பட்டோம்.
 3) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கும்படி கேட்கப்பட்டோம்.
 4) ஏதாவது ஐந்து வினாவுக்கு விடையளிக்கும்படி கேட்கப்பட்டோம்.

33. உவரி, சாகரம், பரவை என்னும் சொற்களைக் குறிக்கப்படுவது
 1) ஒலி 2) ஆகாயம் 3) வண்டு 4) கடல்

34. இசை, நாடகம், ஓவியம், சிற்பம், இலக்கியம் முதலிய அழகியற் கலைகளுள்
 1) இசை, ஓவியம், இலக்கியம் என்பவை ஆற்றல் மிக்கது.
 2) இசை, ஓவியம், இலக்கியம் என்பது ஆற்றல் மிக்கது.
 3) இசை, ஓவியம், இலக்கியம் என்பவை ஆற்றல் மிக்கவை.
 4) இசை, ஓவியம், இலக்கியம் என்பன ஆற்றல் மிக்கது.

35. பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழையற்ற வாக்கியத்தினை தெரிவுசெய்க.
 1) அறிஞ்ஞர் பலர் சோந்து இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுப்பட்டுள்ளனர்.
 2) அறிஞ்ஞர் பலர் சேர்ந்து இலக்கிய ஆராட்ச்சியில் ஈடுப்பட்டுள்ளனர்.
 3) அறிஞர் பலர் சேர்ந்து இலக்கிய ஆராச்சியில் ஈடுப்பட்டுள்ளனர்.
 4) அறிஞர் பலர் சேர்ந்து இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுப்பட்டுள்ளனர்.

* பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

 சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்
 தாங்கி நடைபெற்றுவரும் சண்டை யுலகினை
 ஊதையினில் துரும்புபோல் அலக்கழிப்போம் பின்னர்
 ஒழித்திடுவோம் புதியதோர் உலகம் செய்வொம்
 பேதமிலா அறிவுடைய அவ்வுலகத்தக்குப்
 பேசு சுயமரியாதை உலக எனப்பேர் வைப்போம்
 ஈதேகாண்! சமூகமே யான் சொன்ன வழியில்
 ஏறுநீ ஏறுநீ ஏறுநீ ஏறெ.

36. கவிஞா சிருஷ்டிக்க விரும்பும் உலகிற்கு அவர் வைக்க விரும்பும் பெயர் எது?
 1) பேதமிலா உலகு 2) புதிய உலகு
 3) அறிவு உலகு 4) சுயமரியாதை உலகு

37. இப்பாடலை கவிஞர் எத்தகைய உணர்வோடு பாடியுள்ளார்?
 1) இரக்கம் 2) ஆவேசம் 3) துன்பம 4) பரிகாசம்

38. தாம் வாழ்ந்த காலத்து உலகிலிருந்து ஒழிக்கப்பட வேண்டியவை எனக் கவிஞராற் கருதப்படாதவை
 1) சாதிமத பேதங்கள் 2) மூடப்பழக்க வழக்கங்கள்
 3) துரும்புகள் 4) சண்டைகள்

39. சண்டை உலகதனை ஊதையினில் துரும்பு போல அலக்கழிப்போம். இதில் உவமையாக வந்துள்ளது,
 1) ஊதையினில் துரும்பு 2) சண்டை உலகு
 3) போல 4) அலக்கழித்தல்

40. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களை ஒழுங்குப்படுத்தினால் வரும் விடையைத் தெரிவுசெய்க.
 அ. ஆனால், கபிலரோ பாரி ஒருவன் தானா உலகை பாதுகாக்கின்றான். மாரியும் உண்டே'' என முடிக்கிறான்.
 ஆ. ஒருவர் பாரியை மேகத்துக்கு ஒப்பிடுகின்றார்.
 இ. எல்லோரும் பாரியினுடைய கொடையினையும் சிறப்பினையும் பாட அவனை மகிழ்விக்கின்றனர்.
 ஈ. மற்றொருவர் பாரியை விட சிறந்த வள்ளல் இல்லை என்கின்றார்.
 உ. பாரியினுடைய அவையில் புலவர் பலர் கூடியிருக்கின்றார்கள்.
 1) உ, ஆ, ஈ, இ, அ 2) உ, இ, ஆ, அ, ஈ
 3) உ, இ, ஆ, ஈ, அ 4) உ, ஆ, இ, ஈ, அ

## தமிழ் - II

**நேரம்: 2 மணித்தியாலங்கள்**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

01. சுருக்கமான விடை எழுதுக.
 1) மாயுமிவர்களுக்கறிவுரை கூறுங்கள்
 2) ஏறு போல பீடு நடை நடந்தான். இவ்வடியிற் காணப்படும் எழுவாய், பயனிலையைக் குறிப்பிடுக.
 3) ''போனதெல்லாம் போகட்டும் புள்ளையை விடுங்க''. என நாச்சியார் பாய்ந்து ஞாயம் பல பேச. இங்கு ஞாயம் என்பதன் பொருள் யாது? இச்சொல் இலங்கையில் எப்பிரதேசத்தில் வழங்கப்படுகின்றது?
 4) நான் படம் நடிக்கத் தயாராகினேன். இவ்வாக்கியத்தை பறவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.
 5) தம்பி விதியை வெல்ல யாராலை முடியும் நாடி விழுந்துகொண்டு வருகுது என்றார் மணியத்தார் - பொருத்தமான நிறுத்தக் குறிகளையிடுக.
 6) அமர் என்ற சொல் பெயராகவும், வினையாகவும் வருமாறு தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.
 7) வானொலி உரைச்சித்திரம் எழுதும்போது கவனிக்க வேண்டிய அம்சங்கள் யாவை?
 8) சுருக்கம் எழுதுவதற்கான பொறிமுறைகளைத் தருக.
 9) சஞ்சிகைகள் எழுதப்படும் நோக்கங்கள்.
 10) இலக்கியச் சொற்பொழிவைக் கிரகித்துக் குறிப்பெடுக்கும்போது கவனிக்க வேண்டியவை.

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.
 அ. உலகின் தொடர்பாடற்றுறை காலத்துக்குக் காலம் வளர்ந்து வருகின்றது. அந்த வகையில் தொடர்புச்சாதனங்கள் பெருகிக்கொண்டே வருவதால் நாம் மிக இலகுவாக தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்கின்றோம். இந்த வகையில் தொடர்புச் சாதனங்கள் முக்கியத்துவம் பெறுகின்றது என்ற அடிப்படையில் ஒரு விளக்கக் கட்டுரை எழுதுக.

 ஆ. இன்று உலகத்திற்கும் எமது நாட்டிற்கும் பல்வேறு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் நோய்கள் பரவுதலும் அதன் தாக்கமும் மனித சமூகத்தை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும் முக்கிய காரணியாகும். அதனால் உலகமே அதன் பாதிப்பை அனுபவித்து வருகின்றது. அந்த வகையில் டெங்குக் காய்ச்சலும் ஒன்றாகும். இதன் தாக்கம், விளைவுகள் என்பவற்றை வலியுறுத்தி ஒரு மன்றத்தில் நிகழ்த்தும் சொற்பொழிவு ஒன்று எழுதுக.

 இ. மாணவர்கள் மத்தியில் திரைப்படம் பார்த்தல் மிகவும் விருப்பமான ஒன்றாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் நீர் பார்த்த திரைப்படம் ஒன்றைத் திறனாய்வுசெய்க.

 ஈ. இன்றைய இளம் தளிர்களாகிய சிறுவர்கள் நாளைய சமுதாய தூண்கள். ஆனால், அவர்களின் கனவுகள் சிதைக்கப்பட்டு, அவர்களின் இருளடைந்த பக்கம் ஏற்படுத்தப்படுகின்றது. எனவே, சிறுவர் உரிமையைப் பேணவேண்டியதன் அவசியம், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தடுத்தல், சிறுவர்களுக்கு கட்டாயக் கல்வி, சிறுவர் துஷ்பிரயோகம் செய்வதைத் தண்டித்தல் போன்ற பல்வேறு அம்சங்களை அடிப்படையாக வைத்துச் சர்வதேச சிறுவர் தினத்தில் நீர் நிகழ்த்தும் சொற்பொழிவு.

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40-45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக).
இரு துறைகளினதும் வாய்ப்புகள் குறித்து ஆராய்ந்தவர்கள் சினிமாவிற்கும் இலக்கியத்திற்கும் இடையில் உறவு வலுப்பது நல்லது என்பர். அவ்வாறாயின் சினிமா தயாரிப்பாளர் சமூக நடப்பியல்போடு நெருங்கி வருவதும், தமக்குப் பிடித்த இலக்கியங்களை ஜீவ துடிப்புடன் காண விளையும் கற்றறிந்த பார்வையாளரின் மதிப்பினையும், ஆதரவையும் பெறுவது சாத்தியமாகு[illegible]படுகிறது. ஆனால், சிறந்த ஓர் இலக்கியத்தைச் சினிமாவாகத் தயாரிக்க முனை[illegible] சவால் ஒன்றினை ஏற்கத் தயாராகவேண்டும். சினிமாவுக்கு ஏற்ற கதையினை தெரிந்தெடுப்பதும் இலேசானதல்ல. சினிமா படிவங்களைக் கையாண்டு கட்புலனாகச் சித்திரிப்பது,

(17 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமபலக் கோட்பாடு: ஜீ.ஜீயின் தீர்க்கதரிசனம்

அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களின் 109ஆவது பிறந்த தினம் இன்று நவம்பர் எட்டாம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. அதனை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

அமரர் ஜீ.ஜீ. அவர்களைப் பற்றி - அரசியல் வரலாறு, சட்ட வரலாறு பற்றி ஏற்கனவே பல நினைவுரைகள் வெளிவந்திருக்கின்றன. எது எவ்வாறாயினும், அவருடைய பிறந்த தினத்தை நன்றிக் கடனாக மறக்கமுடியாமல் இருப்பதே நமது நன்றியுடைமையை வெளிப்படுத்துவதாகும்.

அந்தவகையில் அவர் செய்த சேவையில் வெளிவராமல் இருக்கும் ஒரு சிலவற்றை வெளிப்படுத்துவது எமது கடமையாகும்.

தமிழினத்தின் விடுதலைக்காக தீர்க்க தரிசனத்துடன் அவர் எடுத்துக் கையாண்ட வழிகள் சில முக்கியமானவை. அவற்றுள் முதலாவது சமபலக்கோட்பாடு.

சமபலக்கோட்பாடு என்றால் சிங்களவருக்கும், இலங்கையிலுள்ள ஏனைய சிறுபான்மையினருக்கும், தமிழர்களுக்கு மாத்திரமல்ல, நாடாளுமன்றத்தில் சமபலம் இருக்கவேண்டும் என்பதே இக்கோட்பாடாகும்.

தமிழர்களுக்கு வரப்போகும் இடர்களை முன்கூட்டியே அறிந்ததினால் அவை வராமல் தடுப்பதற்காக இக்கோட்பாட்டை முன்வைத்தார்.

இந்நாட்டில் டொனமூர் கமிஷன் சிபார்சுகள் வெளியிடப்பட்டிருந்தன. இச்சிபார்சுகளை அப்போதைய பெருந் தலைவர் சேர். பொன். இராமநாதன் ஆட்சேபிப்பதற்காக லண்டன் பயணமானார். அந்த நேரத்தில் இங்குள்ள தமிழ் அரசியல் பிரமுகர்கள் அச்சிபார்சுகளை ஏற்க முடிவு செய்தார்கள்.

1929ஆம் ஆண்டு கொழும்பில் சில தமிழ்ப் பிரமுகர்கள் இச்சிபார்சுகளை ஏற்கும் பொருட்டு தீர்மானம் எடுப்பதற்காகக் கொழும்பில் கூட்டம் கூடினார்கள்.

இக்கூட்டத்திற்கு வந்திருந்த இளைஞரான ஜீ.ஜீ.பொன்னம்பலம் அக்கமிஷனரின் சிபார்சுகளால் ஏற்படவிருக்கும் தீமைகளைச் சுட்டிக்காட்டி சிபார்சுகளை ஏற்கக் கூடாதென்ற தீர்மானத்தை முன் மொழிந்தார். தீர்மானம் அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறிற்று.

அன்று தமிழ்மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜீ.ஜீ. பொன்னம்பலம், சேர்.பொன்னம்பலம் இராமநாதன் மறைவிற்குப் பின்னர் தமிழ்மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தார். இந்நாடு சிங்கள நாடு என்றும் இந்நாடு சிங்கள வருக்கே சொந்தம் என்றும் சிங்களத் தலைவர்களிடையே ஒரு எண்ணம் வலுப்பெற்ற நிலையில் சிங்கள மகா சபையை பண்டாரநாயக்கா தோற்றுவித்தார்.

1945ஆம் ஆண்டு சோல்பரிக் கமிஷன் முன்தோன்றி சிறுபான்மை மக்கள் நிலையை விளக்கியதோடு சம பிரதிநிதித்துவக் கோட்பாட்டை முன் வைத்தார். அதற்கு 50இக்கு 50 என்று அவருடைய சமபிரதிநிதித்துவத்தை பலர் பல வழிகளில் பிழையாகவும் சிந்தித்துள்ளார்கள்.

சோல்பரிக் குழுவினர் சமபிரதி நிதித்துவக் கோட்பாட்டை ஏற்காவிடினும் ஜீ.ஜீ.யின் வாதத்தின் காரணத்தினால் 29ஆம்



பிரிவு போன்ற சில பாதுகாப்புகளை சிறு பான்மையினரின் நன்மை கருதி அரசியல் சாசனத்தில் உட்புகுத்த வேண்டுமென சிபார்சு செய்தனர்.

சோல்பரி விசாரணைக் குழுவின் முன்னர் சாட்சியமளிக்கையில் பொன்னம்பலம் மிகத் திறமையுடன் வாதாடிய தன் பயனாகவே தங்கள் சிபார்சின்படி 100 அங்கத்தவர் கொண்ட நாடாளுமன்றத்தில் மலை நாட்டுத் தமிழருக்கு 14 பிரதிநிதிகளாவது இருக்க முடியுமெனத் தமது அறிக்கையில் தெரிவித்தார்.

அடுத்ததாக அமரர் ஜீ.ஜீ. 1970ஆம் ஆண்டு யாழ்ப்பாண நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டபின், சட்டத் தொழிலில் ஆற்றிய இரு முக்கியமான வழக்குகளை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

1. அமிர்தலிங்கம் ரயல் - அல்-பார் வழக்கு - அவ்வழக்கைப் பற்றி பத்திரிகைகளில் மூன்று நாள்கள் தொடர்ந்து அவருடைய படத்துடன் ஏற்கனவே வெளி வந்துள்ளன.

2. கருணாநிதிக்கு எதிராக இந்திய அரசால் நியமிக்கப்பட்ட சர்க்காரிய ஆணைக்குழு முன் ஜீ.ஜீ.பொன்னம்பலம் கியூ.சி. தனது மைந்தன் குமார் பொன்னபலத்துடன் ஆஜரானார்.

1976 ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் திகதியன்று கலைஞர் கருணாநிதியின் தமிழ்நாடு அரசு ஊழல் குற்றச்சாட்டுக்களின் பேரில் இந்திரா காந்தியின் மத்திய அரசினால் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்திய உயர் நீதி மன்றத்தின் ஒரு நீதி பதியான நீதியரசர் சர்க்காரிய தலைமையில் தனிமனித விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

சட்டத் திறமைக்கு மரபு வழிக் கதைகளால் புகழ்பெற்ற ஜீ.ஜீ.பொன்னம்பலம், கருணாநிதியின் கோரிக்கையின் பேரில் ஆணைக் குழு முன் தோன்றினார்.

டில்லி அதன் மத்திய - மாநில அரசு உறவில் (பஞ்சாப் தொடர்பிலும் தமிழ்நாடு தொடர்பிலும்) பின்பற்றுகின்ற இரட்டைத் தரங்களை ஆழமாக ஆராய்ந்து விளக்கினார்.

சாட்சியமளிக்க இருப்பவர்கள் எல்லோரும் பொய்யர் என்று காண்பிப்பதற்கு அவர்கள் ஒவ்வொருவரையும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும்படி நீதிபதிக்குச் சவால்விட்டார்.

அவரின் கோரிக்கையை நீதிபதி உடனடியாக நிராகரித்தார். கருணாநிதி மீது அரசியல் பழிவாங்குவதென்று இந்திரா காந்தி முடிவுசெய்த பின்னர் எவ்வாறு அதனைச் சரிக்கட்டும் நோக்குடையதாக 'கங்காரு' நீதிமன்றத்தின் இயல்பும் தொழிற்பாட்டு நடைமுறைகளும் இருக்கின்றனவென்று தகர்த்தெறிகின்ற சட்டவாதங்களுடன் ஜீ.ஜீ. வெளிப்படுத்தினார்.

அதன் பின்னர் அவர் தமிழ்நாட்டில் சட்டத்தரணிகளைக் கொண்டதான தமது உயர் சட்டத்தரணி குழுவினருடன் வெளிநடப்புச் செய்து அந்நீதி மன்ற விசாரணைகளை தொடர்ந்தும் பகிஷ்கரித்தார். அதுவே சட்டப்படி ஆணைக்குழுவின் தற்கொலைக்குக் காரணமாகியதை தொடர்ந்து கருணாநிதி வெற்றியீட்டினார்.

தொகுப்பு: க.மு.தர்மராசா
(பிரசித்த நொத்தாரிசு)

(18 ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்....

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலக்கிய வார்த்தைகள் வாயிலாக அறிவனுபவத்திற்கு விருந்தளிப்பது இரண்டும் இணைவது அபூர்வமெனச் சிலர் கருதுவாராயினும் அவை ஒன்றையொன்று சிறப்பிப்பதாகலாம். சினிமாவை செவ்வனே நயப்பதற்கு இலக்கியப்பயிற்சி உதவலாம். இலக்கியங்களின் புறத்தோற்றக் காட்சி உருவகங்கள் மெருகுபெற சினிமாப் பயிற்சி உதவலாம். அத்தகைய ஒரு சிறப்பினை புதுமைப் பித்தனின் ''துன்பக்கேணி'' போன்ற கதைகளில் அவதானிக்கலாம்.

04. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.

பழமை பழமையென்று
பாவனை பேசலன்றிப்
பழமை இருந்த நிலை - கிளியே
பாமர ரேதறிவார்
நாட்டி லவமதிப்பும்
நாணின்றி இழிசெல்வத்
தேட்டில் விருப்புங் கொண்டே - கிளியே
சிறுமையடை வாரடீ
சொந்தச் சகோதரர்கள்
துன்பத்திற் சாதல் கண்டும்
சிந்தை யிரங்காரடீ - கிளியே
செம்மை மறந்தாரடீ.

1) மக்களின் துன்பத்திற்கு காரணங்கள் எவை எனக் குறிப்பிடப்படுகின்றது?
2) யாரைக் கண்டு மனமிரங்கவில்லை எனக் குறிப்பிடுகின்றார்?
3) பழமையை யாரறிவாரெனக் குறிப்பிட்டுள்ளார்?
4) இப்பாடலில் உவமை ஒன்றைச் சுட்டிக்காட்டி விளக்குக.
5) தாயைக் கொல்லும் பஞ்சத்தைத் தடுக்க முயற்சியுறார். இத்தொடரில் தாய் எனக் குறிப்பிடப்படுவது எது? இத்தொடரை விளக்குக.
6) பின்வரும் சொற்களின் பொருளைத் தருக. சிந்தை, பஞ்சம், நாண்.

05. அண்மையில் மலையகப் பகுதியில் பழைய லயக்காம்பராக்களில் (குடிசை) அடிக்கடி ஏற்படும் மின்சார ஒழுக்கு மற்றும் சில காரணங்களால் தீ விபத்து ஏற்பட்டு மக்களின் வாழிடங்கள் நாசமடைகின்றன. அங்கு சென்ற நீர் தீ விபத்துக்கான காரணம், சேத விவரம், குடிசை வாழ் மக்களின் நிலை என்பவற்றைக் கருத்திற்கொண்டு 100 சொற்களில் அமையுமாறு ஓர் அறிக்கை எழுதுக.

### தமிழ் - III

**நேரம்: 2 மணித்தியாலங்கள்**

* அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.

01. சுருக்கமான விடை எழுதுக.
 01. ''பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள் தீர்த்த மாசு அறு காட்சியவர்''
  1) பொச்சாந்து என்பதன் கருத்து யாது?
  2) இக்குறட்பாவின் கருத்தைத் தருக.
 02. ''இராமன் போர் புரிவதற்கு இலங்கைக்கு வானர சேனையோடு சென்றானே அந்தப்பகுதியில் ஒரு பாட்டைச் சொல்லும்'' இக்கூற்று
  1) யாரால்
  2) யாருக்கு
 03. ''உறுபுலி ஊனிரையின்றி ஒரு நாள்....'' என்ற நாலடியார் பாடலில் எதைப் பற்றி வலியுறுத்துகின்றது?
 04. 1) ஏர் எழுபது எத்தனை பாடல்களைக் கொண்டது?
  2) ஏர் எழுபது நூலினை எழுதியவர் யார்?
 05. ''குலமாலை வேற்கண்ணான்.....'' என்ற தொடரின் உவமானம், உவமேயம், பொதுத் தன்மை என்ன?
 06. 1) ''விடியுமா'' என்ற சிறுகதையை எழுதியவர் யார்?
  2) ''நட்சத்திர குழந்தைகள்'' என்ற சிறுகதையை எழுதியவர் யார்?
 07. 1) ''மங்கையர் கண் புனல்...'' என்ற பாடல் எத்தனை சீர்களையும் யாப்பையும் கொண்டுள்ளது?
  2) ''கூழுங் குடியும் ஒருங்கு இழக்கும் கோல்கோடிச் சூழாது செய்யும் அரசு'' தரப்பட்டதிருக்குறளைக் கொண்டு கூட்டி மீண்டும் எழுதுக?
 08. ''என் கடமை தீர்ந்து விட்டது. என் உயிரை வஞ்சித்து வாங்கி[illegible] விட்டேன்'' யாரால் யாருக்கு எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
 09. ''முப்பேரும் பெற்றாயே...'' எனக் குறிப்பிடப்படுவது எது?
 10. ''நறுந் தாமரை விரும்பும் நன்னுதலே அன்னாள் அறிந்தாள் நளன் றன்னை ஆங்கு'' என்ற அடிகளில் வரும் எழுவாய், பயனிலைகளை இனங்காண்க.

02. பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழி நடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புகளை விளக்கி எழுதுக.

அ. நிலவாய் விலங்குதலா னிள்வான் படிந்து
சிலபோ துலாவுதலாற் சென்று-தலைமேல்
உதித்து வரலா லுயர்மா மலையை
மதிக்கு நிகராக வழுத்து

ஆ. அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல்
உற்றுழித் தீர்வார் உறவல்லார்-அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலு நெய்தலும் போலவே
ஓட்டி உறுவார் உறுவு

இ. இருள் காரிருள், கறுத்த கனத்த மேகங்கள் வானத்தில் இடைவிடாது சென்று கொண்டிருக்கின்றன. சந்திரன் சற்று நேரத்திற்குத் தோன்றுகின்றான், உடனே முன்னிலும் கனமாக மேகங்களுக்கு இடை யில் மறைந்து விடுகின்றான். காற்று சீறிக்கொண்டு செல்லுகின்றது. தூரத்தில் புலியும், கரடியும் உருமிக்கொண்டிருக்கின்றன. பக்கத்து கொல்லைகளில் நரிகள் ஊழையிட்ட வண்ணமாக இருக்கின்றன. அதோ அந்த ஆலமரத்தின் மீதிருந்து ஒரு கோட்டான் பயங்கரமாகக் கத்துகின்றது. உடனே நிறுத்துகின்றது.

ஈ. வாணரத் தலைவன் ஒரு பெரிய மலையைப் பெயர்த்துக்கொண்டு வந்து அணை கட்டுவதற்காகக் கடலில் விழுந்த மலை நடனமாடுகிறவர்களைப் போல் சப்தத்தை முடிக்கிக் கொண்டு கடலில் அங்குமிங்கும் திரிகின்றது. இப்போது அலைகள் மேலெழும்பி வீசியடிக்கின்றன. அதனால் நீர்த்துளிகள் வானுலகம் வரையிலும் போய்த்தெறித்து விழவே யாரோ மீண்டும் பாற்கடலைக் கடைகிறார்கள். அதனால்தான் இங்கு துளிகள் வந்து விழுகின்றன என்று தேவர்கள் எண்ணுகிறார்கள்.

03. இராமசந்திர கவிராயரின் ''கல்லைத்தான் மண்ணைத்தான்'' என்ற பாடலினதும் நமச்சிவாயப் புலவரின் ''மஞ்சும் அஞ்சும் கை'' என்ற பாடலினதும் மையக்கருத்து அணிச்சிறப்புகளை எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்குக?

**அல்லது**

''திண்டோள் வயவேந்தே...'' என்ற பாடலில் நளமன்னனின் பெருமை, ஏமாற்றத்தால் கூடியிருந்தவர்களின் முகங்கள் வாடியிருந்தமை, அணி நலம், உதாரணம் போன்றன சித்திரிக்கப்படும் விதத்தை விளக்குக.

04. இருபதாம் நூற்றாண்டின் நவயுக வசனக் கவிதையின் தந்தை பாரதி எனக் கூறும்கூற்று பொருந்துமே என்பதை பாரதியார் கவிநயம் என்ற கட்டுரையின் சுவாமி விபுலானந்தர் கூறும் கூற்றை தெளிவுபடுத்துக?

**அல்லது**

''விடியுமா'' சிறுகதையை பின்வரும் தலைப்புகளில் சுருக்கமாக விளக்குக?
கதைக்கரு, கதைக்கலம், பாத்திரப்படைப்பு, மொழிநடை உத்திகள், கதையும் தலைப்பும்.

* 5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.

05. ''கல்வியே அழியாச் செல்வம்'' என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
 அ. கல்வியின் சிறப்பைப் பற்றி திருக்குறளில் திருவள்ளுவர் வழியுறுத்தி உள்ளதை தெளிவுபடுத்துக?
 ஆ மறைமலை அடிகள் ''கல்வியே அழியாச் செல்வம்'' தனது கருப்பொருளை தெளிவாகக் கையாண்ட உத்தி முறைகளை ஆராய்க?

06. அ. தனிப்பாடல் திரட்டு என்றால் என்ன?
 ஆ. ''ஆழிவாய்ச் சத்தம் அடங்காதே'' என்ற பாடலின் பிரதான கருப்பொருள் யாது?
  1) இப்பாடலுக்கு பொருத்தமான தலைப்பிடுக?
  2) ஒப்பிலாமணி புலவர் இரவு நீடித்தமை குறித்து தலைவியின் ஆதங்கத்தை எவ்வாறு தெளிவுபடுத்துகிறார், ஆராய்க.

07. ''குழந்தைகளின் இயல்பும், அறிவும் சிறப்பாக எடுத்துக்காட்டப்பட் டுள்ளது.'' இக்கூற்று ''பார்வைகள்'', ''நட்சத்திரக் குழந்தைகள்'' என்ற சிறுகதைகளில் தெளிவாக்கப்பட்டுள்ளது. விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தான்குடியில் மாணவி கடத்தல்; கைதான மூவர் விளக்கமறியலில்

மட்டக்களப்பு, நவ.8

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பூநொச்சி முனை பிரதேசத்தில் ஜி.சீ.ஈ.(உயர்தர) வகுப்பு மாணவி கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆறுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கடத்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திய முச்சக்கர வண்டி மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் கைப்பற்றியுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி காமினி ஜெயவர்த்தன தெரிவித்தார்.

இக்கடத்தல் சம்பவத்தில் நீதிவான் நீதிமன்றத்தில் அஜர் செய்யப்பட்டபோது 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி வீ.இராமகமலன் உத்தரவிட்டுள்ளார்.

ஏனைய மூவரையும் பொலிஸார் தேடி வருகின்றனர்.

வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த மேற்படி மாணவி ஏறாவூர்ப் பகுதியில் கருத்தரங்கொன்றிற்காக சென்றுவிட்டு காத்தான்குடி பகுதிக்கு வந்து கொண்டிருந்தபோது கல்லடி சிவானந்தா பாடசாலைக்கு முன்னால் வைத்து கடத்தப்பட்டுள்ளார்.

கடத்தல் காரர்களிடமிருந்து மீட்கப்பட்ட மாணவி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காத்தான்குடி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ்ப்பாண மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தின் திட்டப்பணிப்பாளராக கடமையாற்றும்
உயர்திரு. மருதலிங்கம் பிரதீபன், திட்டப்பணிப்பாளர் அவர்கள்
இன்று (08.11.2010) திங்கட்கிழமை
வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலராக
கடமையேற்பதையிட்டு அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச மக்களுக்கும், அப்பிரதேசத்திற்கும் அவரது அரும்பெரும் சேவை சிறப்பான முறையில் அமைவதற்கு அவருக்கு எல்லாம் வல்ல இறைவன் நல்லாசி புரியவேண்டும் எனவும் பிரார்த்தித்து அவரது சேவை வலிகாமம் கிழக்கு மக்களுக்கு சிறப்பாக அமைய வேண்டுமெனவும் வாழ்த்துகின்றோம்.

உதவித்திட்டப் பணிப்பாளர், கணக்காளர்
மற்றும்ஏனைய உத்தியோகத்தர்கள்
மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகம்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.


## புகையிலைச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

வடமராட்சி, நவ.8

வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலைச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அண்மையில் பெய்த மழையைத் தொடர்ந்து புகையிலைத் தோட்ட நிலங்களை மாட்டெரு இட்டு பண்படுத்தும் வேலைகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

பல வருடங்களுக்குப் பின்னர் வன்னிப் பிரதேசத்திலிருந்து எடுத்து வரப்பட்ட மாட்டெருவை புகையிலைச் செய்கைக்காக விவசாயிகள் போட்டி போட்டுக்கொண்டு வாங்கி புகையிலைத் தோட்டங்களுக்கு பசளையாகப் பயன்படுத்துகின்றனர்.

இருவாரங்களில் பண்படுத்தப்பட்ட தோட்டங்களில் புகையிலை நாற்றுக்கள் நடப்படவுள்ளன. (201-230)

## சாமலக் ...

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜீ.ஜீ.கட்டணமாகவோ, பயணச் செலவுகளாகவோ கருணாநிதியிடமிருந்து ஒரு சதமேனும் பெற்றுக் கொள்ள மறுத்ததுடன், தாம் தங்கியிருந்ததற்கான செலவைக்கூடத் தாமே கொடுக்க வேண்டுமெனவற்புறுத்தினார்.

பின்னர் மெரினா கடற்கரையி லுள்ள சீரணி அரங்கத் தில் கலைஞர் கருணாநிதி நடத்திய நன்றி பாராட்டும் மாபெரும் கூட்டத்தில் உண்மையான நட்புக்கு சங்கத் தமிழ் இலக்கியம் வகுத்துரைந்துள்ள உயர் ஒழுக்க விழுமியங்களை ஜீ.ஜீ. முழுமையாகப் புதுப்பித்தெழுதியுள்ளாரென்று கருணாநிதி அவரைப் பாராட்டினார்.

இச்சந்தர்ப்பத்தில் சட்டத்துறையிலேயே வெளிநாடுகளிலும் தமிழ்த் தேசிய இனத்திற்குத் துன்பம் வரும்போது குரல்கொடுக்கக்கூடிய முறையில் அமரர் ஜீ.ஜீ. தன்னையும் தனது ஞானத்தையும் தனது வழியில் செயற்படுத்தினார் என்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது.

இது தமிழ்த் தேசிய இனம் மறக்கக்கூடிய விடயமல்ல. ஆகையால் அவருடைய நினைவு என்றும் நிலைத்து நிற்பதற்குப் போதிய ஆதாரங்களும், ஆவணங்களும் இருக்கின்றன என்பதை இன்று வெளிப்படுத்துகிறேன்.

# முகாமைத்துவப் போட்டி முடிவுகள் வெளியாகின

வடமராட்சி, நவ.8

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கிராம வேலையாள்களுக்கிடையே நடத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டியில் புலோலி தென்மேற்கு கிராம சேவையாளர் த.வதனரூபன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இதில் இரண்டாம் இடத்தைப் பருத்தித்துறை கிழக்கு கிராம சேவையாளர் எஸ்.யோகேந்திரநாதனும் மூன்றாம் இடத்தை புலோலி கிழக்கு கிராம சேவையாளர் மு.கந்தசாமியும் பெற்றுக் கொண்டுள்ளார்கள். (எ-236)

## பெயர்ப்பலகை வழங்கப்பட்டது

வடமராட்சி, நவ.8

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கிராம சேவையாளர்களின் அலுவலகங்களுக்குப் புதிதாகப் பெயர்ப் பலகைகள் வழங்கப்பட்டுள்ளன.

நீல நிறத்திலான இந்தப் பெயர்ப்பலகைகளில் கிராம சேவையாளர் பிரிவு, இலக்கம் என்பன மூன்று மொழிகளிலும் இடம்பெற்றுள்ளன.பல வருடகால இடைவெளிக்குப் பின்னர் கிராம சேவையாளர் அலுவலகத்துக்கான பெயர்ப் பலகைகள் புதிதாக வழங்கப்பட்டுள்ளன. (எ-236)


## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 574
திகதி 2010/11/06

சுப்பர் இலக்கம்: 21
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 26 29 55 68

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 32,620,864.80 வீதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 வீதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 வீதம் | 11 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 வீதம் | 313 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 வீதம் | 612 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 வீதம் | 15,084 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 வீதம் | 8,736 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீதம் | 218,347 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீதம் | 35,070 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 9,714,180.00
சுப்பர் பரிசு சோதுா ஜிப் வண்டியுடன் மிகுதி தொகை பணமாக

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ 33,060,584.00

தேசிய லொத்தர் சபை
www.nlb.lk


# மரண அறிவித்தல்

## பொன்னையா இராசரத்தினம்



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் உடையார் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் தற்போது 17A, சுவிசுத்தாராம வீதி, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராசரத்தினம் அவர்கள் நேற்று (07.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-சின்னம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான மருதப்பா-அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும் ஜெயமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பிரிதிவிராஜ், பிரிதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரவீந்திரனின் அன்பு மாமனாரும் திலீப், இந்து ஆகியோரின் அன்புப் பேரனும் அரியரத்தினம், காலஞ்சென்ற திருஞானம், மகாலட்சுமி, குணரத்தினம்மா, கணேசரத்தினம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரஸ்வதி காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, செல்வரத்தினம், கணநாதன் மற்றும் வாலையாநந்தன், காலஞ்சென்ற தங்கமலர், கனகசபேசன் (சத்தி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.11.2010) திங்கட்கிழமை காலை 8 மணிக்கு மஹிந்த மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு இறுதிக் கிரியைகள் ஆரம்பித்து 5 மணிக்கு கல்கிசைப் பொது மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே:- 011 250 6383


## யூனியன் அஷ்யூரன்ஸ்

உங்கள் நாளைய நம்பிக்கை, இன்றே.

# வேலைவாய்ப்பு

இணையுங்கள் உங்கள் வாழ்கையை வெற்றியாக்க (யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கான வேலை வாய்ப்பு) இலங்கையில் முன்னணிக் காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ். பிராந்தியக் கிளைக்கு பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கப்படவுள்ளது.

### பதவி வெற்றிடங்கள்...

பதவி (5) சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
பதவி (4) தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
பதவி (3) சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
பதவி (2) தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
பதவி (1) காப்புறுதி ஆலோசகர்

### அடிப்படைத் தகைமைகள்:-

* க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6பாடங்கள் சித்தி
* காப்புறுதித்துறையில் முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
* விளையாட்டுத்துறையில் திறமையுள்ளவர்கள்
* தற்போது A/L பரீட்சையில் தோற்றியவர்களும் நேர்முகத் தேர்விற்குத் தோற்றலாம்
* வன்னிப்பிரதேசத்தில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர்கள் யுவதிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்
* உங்களது இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை
* உங்கள் வெற்றியை நோக்கிப் பணிபுரிவதற்கான ஆர்வம் * திடசித்தம்

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.

ஏன் தயக்கம் தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு
சுய விவரக் கோவையுடன்

★ காலம்: புதன்கிழமை 10.11.2010 ★ நேரம்:- மு.ப.9.00 மணி
★ இடம்:- யூனியன் அஷ்யூரன்ஸ், 139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு: A.Rajeevan K.R.Jegan
காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
T.P: 0779116282, 0773670322


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 ஆண்டுகளின் பின் மியான்மரில் நேற்று முதலாவது தேர்தல்

மியான்மரில் 20 வருடங்களின் பின்னர் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதலாவது தேர்தல் ஆரம்பமாகியது. காலை முதல் மக்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டனர். இந்தத் தேர்தல் ஜனநாயக மக்கள் ஆட்சிக்கு வழிவகுக்குமென ஆளும் இராணுவ ஜெனரல்கள் கூறிய போதிலும், விமர்சகர்கள் இதுவொரு ஏமாற்று வேலை யெனக் கூறுகின்றனர்.

ஆங் சான் சூகி தலைமையிலான பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயகத்துக்கான தேசிய அமைப்பு கட்சி வாக்களிப்பதை பகிஷ்கரித்துள்ளது. இந்தத் தேர்தல் அமைதியான முறையில் நடைபெற்று வருகிறது என அவதானிகள் தெரிவித்துள்ளபோதிலும், இந்தத் தேர்தலில் தலையீடுகள் காணப்படுகின்றன என எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில், தேர்தல் தொடர்பான செய்திகள், தகவல்கள் ஆகியவற்றை திரட்டுவதற்கு என வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் நாட்டிற்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. முன்கூட்டிய வாக்குப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அதிகாரிகள்வற்புறுத்தினர் என சான்தேசிய ஜனநாயகக் கட்சித் தலைவர் சாய் ஐ பயோ தெரிவித்துள்ளார்.

# மியான்மர் எதிரணித் தலைவி சூகி வார இறுதியில் விடுதலையாவார்

யாங்கூன், நவ. 08

மியான்மர் எதிர்க்கட்சித் தலைவி ஆங் சான் சூகி, எதிர்வரும் 13ஆம் திகதி விடுதலை செய்யப்படுகிறார். மியான்மரில் 1962முதல் இராணுவ ஆட்சி நடக்கிறது.

இதை எதிர்த்து 'ஜனநாயக தேசிய லீக்' கட்சியின் தலைவி ஆங் சான் சூகி போராடி வருகிறார். அவரை 1989 முதல் 21 ஆண்டுகளாக வீட்டுச் சிறையில் வைத்துள்ளது இராணுவ அரசு.

கடந்த 1990இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில், ஆங் சான் சூகியின் கட்சி, மொத்தமுள்ள 485 இடங்களில், 392 இடங்களில் வெற்றி பெற்றது. இருந்தாலும், இந்த வெற்றியை இராணுவம் நிராகரித்துவிட்டது.

20 ஆண்டுகளுக்குப் பின்னர் மியான்மரில் பொதுத்தேர்தல் நேற்று ஞாயிறு நடைபெற்றது. இந்தத் தேர்தல் வெறும் கண்துடைப் பாகத்தான் இருக்கும் என்று எதிர்க்கட்சி கள் கூறி வருகின்றன.

இதற்கு ஆதாரமாக, தேர்தலில், ஆங் சாங் சூகி வாக்களிக்க முடியாதபடி, அவசர சட்டத்தை இராணுவம் பிறப்பித்துள்ளது. இந்த தேர்தலில், ஆங் சான் சூகியின் ஜனநாயக தேசிய ஜனநாயக லீக் கட்சி உட்பட 37 கட்சிகள் போட்டியிடுகின்றன.

**21 ஆண்டுகளின் பின்னர்**



தேர்தல் நேர்மையாக நடக்கும் பட்சத்தில், இவருக்கு தான் வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ளதாகக் கூறப்படுகிறது.

அந்நாட்டிலுள்ள மொத்த வாக்காளர்களில், மூன்றில் இரண்டு பங்கு பேர், சூகிக்கு ஆதரவாக உள்ளனர் எனக் கூறப்படுகிறது. இதனிடையே, தேர்தல் முடிந்தவுடன் எதிர்வரும் 13ஆம் திகதி ஆங்சான் சூகி விடுதலை செய்யப்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. யாங்கூனின் கடந்த 1945ஆம் ஆண்டு பிறந்த ஆங் சான் சூகி, பர்மாவின் விடுதலைக் காகப் போராடியவரும், இராணுவமே ஜருமான ஆங் சானின் மகளுமா வர். ஆங் சான் 1947 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

டில்லியிலும், பிரிட்டனின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலும் படித்த ஆங்சான் சூகிக்கு 1972 ஆம் ஆண்டில் திருமணம் நடந்தது. பின்னர், தனது தாயார் மரணப்படுக்கை யில்இருந்தபோது, 1988 ஆம்ஆண்டு மியான் மர் திரும்பிய சூகி, தனது தந்தையின் வழியில் அரசியலுக்குள் நுழைந்தார். மியான்மரில் இராணுவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து, ஜனநாய கம்மலர வேண்டும் என்று தீவிரமாகப் போராடி வருகிறார். கடந்த 1991 ஆம் ஆண்டு ஆங்சான் சூகிக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

## விமான விபத்தில் பாகிஸ்தானில் 21 பேர் மரணம்

கராச்சி, நவ. 08

பாகிஸ்தானின் வர்த்தக தலைநகரான கராச்சி அருகே பிட்ஷா என்ற இடத்தில் எண்ணெய்க் கிணறு உள்ளது. இங்கு எண்ணெய் துப்புரவுப் பணியில் அமெரிக்க நிறுவனம் ஒன்று ஈடுபட்டுள்ளது.

தீவிரவாத அச்சுறுத்தல் காரணமாக இந்த எண்ணெய்க் கிணற்றில் பணியாற்றும் ஊழியர்கள் விமானம் மூலம் கராச்சி விமான நிலையத்திலிருந்து நேரடியாக அழைத்துச் செல்லப்படுவது வழக்கம். இதற்காக சிறிய ரக தனியார் விமானம் ஒன்றை அமெரிக்க கம்பெனி வாடகைக்கு அமர்த்தியிருந்தது.

வெள்ளிக்கிழமை காலை 7.15 மணியளவில் இந்த விமானம் ஊழியர்களை ஏற்றிக் கொண்டு எண்ணெய்க் கிணறு இருந்த பகுதிக்குப் புறப்பட்டது.

விமானத்தில் வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர் உட்பட 17 ஊழியர்கள், விமான நிலைய பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஒரு அதிகாரி, தொழில்நுட்ப ஊழியர், விமானி, துணை விமானி ஆகியோர் இருந்தனர்.

கராச்சி விமான நிலையத்திலிருந்து விமானம் உயரே கிளம்பிய சிறிது நேரத்தில் விமானத்தின் ஒரு என்ஜின் பழுதாகி இருப்பதை விமானி கண்டுபிடித்தார். உடனே இதுகுறித்து விமான நிலையக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்தார்.

எனினும், அடுத்தசிலவினாடிகளில் அருகில் இராணுவ டிப்போ ஒன்றின் திறந்த வெளிப் பகுதியில் விமானம் தரையில் பயங்கர சத்தத்துடன் மோதியது. அடுத்த விநாடி விமானம் முழுவதும் தீப்பிடித்து வெடித்தது.

உடனடியாக விபத்து நடந்த இடத்துக்கு மீட்புக் குழுவினர் விரைந்து சென்றனர். விமானம் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டி ருந்ததால், அதில் இருந்த எவரையும் காப்பாற்ற முடியவில்லை. 21 பேரும் எரிந்து கரிக்கட்டையாகிப் போனார்கள்.

**அழிவுகளில் இருந்து ஒரு மீட்சி...**




இருப்புக்கான போராட்டம்: ஹெய்டியில் அண்மையில் ஏற்பட்ட நில நடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்களில் ஒருவர் ஹெய்ட்டி செஞ்சிலுவைச் சங்கம் வழங்கிய தண்ணீர் வாளியில் தனது கைகளைக்கழுவுகிறார். சேதமடைந்த ஹெலிக்கொப்டர் ஒன்றே அவர்களின் தற்காலிக இருப்பிடமாக இப்போது மாறி உள்ளது.

## அங்கோலா இராணுவத்தால் கொங்கோ பெண்கள் சீரழிப்பு

ஆபிரிக்க கண்டத்தில் கொங்கோ, அங்கோலா ஆகிய நாடுகள் உள்ளன. கொங்கோவின் கனிமவள சுரங்கங்கள் அங்கோலாவின் எல்லையிலுள்ளன.

இங்கு கொங்கோ பெண்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்த நிலையில் தங்கள் நாட்டுக்குள் புகுந்து விட்டனர் எனக் கூறி அவர்களை அங்கோலா இராணுவத்தினர் கைது செய்து சிறையில் அடைத்து வருகின்றனர். அவ்வாறு சிறையில் அடைக்கப்படும் பெண்கள் அங்கோலா இராணுவச் சிப்பாய்களால் கற்பழிக்கப்படுகின்றனர் என ஐ.நா. அதிகாரிகளுக்கு முறைப்பாடுகள் வந்தன. கடந்த சில நாள்களுக்கு முன்னர் அங்கோலா சிறையில் அடைக்கப்பட்டிருந்த 30 பெண்கள் கூட்டாகக் கற்பழிக்கப்பட்டு நிர்வாண நிலையில் கொங்கோ நாட்டு எல்லையில்விடப்பட்டனர் என்னும் திடுக்கிடும் குற்றச்சாட்டு எழுந்தது.

இதைத்தொடர்ந்து ஐ.நா.சபையின் மனித உரிமை முகவர் விசாரணை நடத்தியது. விசாரணையில் கொங்கோவைச்சேர்ந்த 700 பெண்கள் கற்பழிக்கப்பட்டமை தெரியவந்தது. இந்தத் தகவலை இந்நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் மவுரிஷியோ குலியானா தெரிவித்துள்ளார். இச்சம்பவங்கள் குறித்து 2 நாடுகளிடமும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# ஹிலாரி கிளின்ரனைத் துரத்தும் பூகம்பம்

## தங்கியிருந்த ஹோட்டல் குலுங்கியது

கிறிஸ்ட்சர்ச், நவ. 08

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிங்ரன், பல்வேறு நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து வருகிறார். அப்போது அவர் பூகம்பங்களில் சிக்கியுள்ள சம்பவங்கள் நடந்துள்ளன. அது பற்றிய செய்திகள் தற்போது வெளியாகியுள்ளன.

கடந்த செப்டம்பர் மாதம் ஹிலாரி கிளிங்ரன் அதிகாரிகளுடன் நியூஸிலாந்து சென்றிருந்தார். அப்போது பூகம்பம் ஏற்பட்டது. இதனால் அவர் தங்கியிருந்த ஹோட்டல் அறை குலுங்கியது. அப்போது ரிச்டர் அளவில் 7 புள்ளிகளாகப் பூகம்பம் பதிவாகியிருந்தது.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை அவர் நியூசிலாந்து சென்றிருந்தபோது மீண்டும் பூகம்பம் ஏற்பட்டது. கடந்த 3நாள்களுக்கு பப்புவா நியூகினியாவுக்குச் சென்றிருந்தார். அங்கு கிராமங்களில் பூகம்பம் ஏற்பட்டது.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் ஜப்பான் சென்றிருந்தார். அப்போது அங்கும் இலேசான பூகம்பம் உண்டானது. 4 மாதங்களுக்குப் பின்னர் ஒக்டோபர் மாதம் ஹோண்டுராவ் சென்றிருந்தபோது 5 ரிச்டர் அளவில் பூகம்பம் ஏற்பட்டது. பாகிஸ்தானில் உண்டான பயங்கர பூகம்பம் ஹோண்டுராவையும் தாக்கியது. இந்த ஆண்டு மார்ச் மாதம் சிலி நாட்டுக்கு செல்ல அவர் திட்டமிட்டிருந்தார். ஆனால் அதற்கு சில நாள்களுக்கு முன்னரேதென்னமெரிக்காவில் 8.8 ரிச்டர் அளவில் பூகம்பம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து சாண்டியாகோ செல்லும் திட்டத்தை கைவிட்டார். இதுபோன்று அவர் வெளிநாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்யும் போதெல்லாம் பூகம்பச் சம்பவங்கள் அவரைத் துரத்துகின்றன.

# இந்தோனேஷியாவில் குமுறுகிறது எரிமலை

ஜகார்த்தா, நவ. 08

இந்தோனேஷியாவில் ஜாவா தீவிலுள்ள போக்யகர்தா நகரம் அருகேயுள்ள மெராபி எரிமலை வெடித்து சிதறுகிறது. இது கரும் புகையுடன் நெருப்புக் குழம்பைக் கக்குகிறது. இதனால் அப்பகுதியிலுள்ள மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். அந்த எரிமலையைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் சுமார் 2 இலட்சம் மக்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். வெளியேற மறுத்தவர்கள் எரிமலை குழம்பில் சிக்கினர். அவ்வாறு சிக்கியவர்களில் இதுவரை 138 பேர் பலியாகியுள்ளனர். மேலும், பலர் 95 சதவீத தீக் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பலருக்கு கண் பார்வை பறிபோனது.



## தற்கொலை தாக்குதலில் ஆப்கானில் 9 பேர் பலி

ஆப்கானிஸ்தானில் கூட்ட நெரிசல் மிக்க பஜார் பகுதியில் வெள்ளிக்கிழமை தற்கொலைத் தீவிரவாதி மனித குண்டுத் தாக்குதல் நடத்தினார். மக்கள் கூட்டத்தில் புகுந்த தீவிரவாதி தான் உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்க செய்தார். இதில், 9 பேர் பலியாகினர். 30 பேர் படுகாயமடைந்தனர். இவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிமேல் வெற்றிகளைக் குவித்ததால் தரம் II இற்கு உயர்நிலைபெற்றது 17 வயதுப் பற்றிக்ஸ் அணி!

யாழ்ப்பாணம், நவ.8

சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் 17 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணி தரம் II இற்கு உயர் நிலை அடைந்துள்ளது.

இலங்கைப் பாடசாலைகள் சங்கம் நடத்தி வந்த 'லெமனற்' கிண்ணத்துக்கான தரம் III இற்கான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்தது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி முதல் சுற்றில் யாழ். மாவட்டப் பாடசாலைகளுடனான ஆறு போட்டிகளில் பங்கு கொண்டு ஐந்து போட்டிகளில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

இரண்டாவது சுற்றில் கண்டி விக்ரோறியா தேசியப் பாடசாலை, கிக் கடுவ சிறிசுமங்கல மத்திய கல்லூரி, கம்பளை தரணகம மகா வித்தியாலயம் ஆகியவற்றை வெற்றிகொண்டு சென். பற்றிக்ஸ் கல்லூரி காலிறுதிக்குத் தெரிவாகியது.

காலிறுதியாட்டத்தில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணியை வெற்றி கொண்டு அரை இறுதியாட்டத்துக்கு சென்.பற்றிக்ஸ் முன்னேறியது.

அரையிறுதியாட்டத்தில் சென்.பெனடிக்ஸ் கல்லூரி அணியை வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்கு நுழைந்து நீர்கொழும்பு ஹரிச்சந்திர மகாவித்தியாலயத்துடன் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மோதியது. எனினும் அப்போட்டியில் அது தோல்வியைத் தழுவ நேரிட்டது.

இதன்மூலம் அகில இலங்கை ரீதியில் 17 வயதுப் பிரிவினருக்கான தரம் III இற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இரண்டாம் இடத்தைப் பற்றிக்ஸ் கல்லூரி பெற்றுக் கொண்டது.


இத்தகைய சாதனைகள் படைத்ததன் மூலம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் 17 வயதுப் பிரிவு அணி அடுத்த வருடம் 2011 இல் தரம் II இற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் விளையாடக் கூடியவாறு தரமுயர்த்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் 19 வயதுப் பிரிவு அணி பிரிவு II இற்குத் தரமுயர்த்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

17 வயது பிரிவுக் கிரிக்கெட் அணி பிரிவு II இற்கு தரமுயர்த்தப்பட்டமை தொடர்பாக அணியின் பயிற்றுவிப்பாளரும் விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியருமான சி.சகாயராஜா கூறுகையில் -

17வயதுப் பிரிவு அணியின் முன்னேற்றத்துக்கு வீரர்களின் திறமை மட்டும் இன்றி ஒழுங்கான, நீண்டகாலத் திட்டமிடல், பயிற்சி, வீரர்களின் அர்ப்பணிப்பும் தியாகமும் என்பனவும் முக்கிய காரணிகளாக அமைந்தன - என்றார். (எ-23)

சாதனைப் பயணத்தில்...



திறமைக்குப் பரிசு: தமது திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றிகளைக் குவித்து தரம் II இற்கு உயர்நிலைபெற்றுள்ளது சென்.பற்றிக்ஸ் கல்லூரி கிரிக்கெட் அணி.

## இறுதிப்போட்டிக்கு வதிரி டயமன்ஸ், மணற்காடு சென்.அன்ரனிஸ் தகுதி

யாழ்ப்பாணம்,நவ.8

கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக ஸ்தாபகர் சின்னத்தம்பி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தி வரும் 9 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்களில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி, மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் ஆகியவை வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

கடந்த வாரம் இடம்பெற்ற அரையிறுதிப் போட்டிகளில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி பொம்மஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை தமது அபார ஆட்டத்தின் மூலம் பொம்பாஸ் கழக அணி வீரர்கள் 3:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தினார்கள்.

மற்றைய அரையிறுதி ஆட்டத்தில் திக்கம் ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் இரண்டு அணியினரும் ஆட்டநிறைவில் தலா இரண்டு கோல்களைப் பெற்றிருந்தனர்.

எனவே ஆட்டத்தின் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் வதிரி டயமன்ஸ் 4:2 என்ற கோல் கணக்கில் திக்கம் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை வென்றது. (எ-23)

## ஞான ஒளி வென்றது

ஊர்காவற்றுறை, நவ.8

கரம்பொன் ஞானஒளி விளையாட்டுக்கழகத்துக்கும் பருத்தியடைப்பு முத்தமிழ் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஞான ஒளி விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

அநேக ரசிகர்களின் மத்தியில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் முதல் பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் ஆட்டம் சூடு பிடிக்க ஆரம்பித்தது. இரு தரப்பினரும் பரஸ்பரம் நுட்பமான ஆட்டத்தையும் வெளிப்படுத்தினர். திடீரென ஞானஒளி விளையாட்டுக்கழகம் ஒரு கோலைப் போட்டதும் ஆட்டம் மேலும் உச்சக்கட்டத்தை அடைந்தது. பின்னர் முத்தமிழ் வி.க.போராடிய போதும் 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் இரு தரப்பினரும் கோல்கள் போட முயற்சித்த போதும் கோல்போடுவதை இரு அணிகளும் தடுத்து நிறுத்தி ஆடினர்.

இறுதியில் ஞான ஒளி விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(த-325)


## மானிப்பாய் இந்து நூற்றாண்டு விழா; உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி அடுத்தவாரம்

வலி.வடக்கு, நவ.8

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி அழைக்கப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டி அடுத்த வாரம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அழைக்கப்பட்ட கல்லூரிகளுக்கு இடையே நடைபெறவுள்ள விலகல் முறையிலான இந்தச் சுற்றுப்போட்டியில் பத்துப் பாடசாலை அணிகள் கலந்து கொள்ளவுள்ளன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி என்பவையே இந்தச் சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ளவென அழைக்கப்பட்டுள்ள அணிகளாகும். (எ-86)




## கரபந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய அணிகள்

காங்கேசன்துறைப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடைபெற்றது.

ஆண்களுக்கான போட்டியில் பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயமும் இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இப்போட்டியின் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் 25:9, 25:14 புள்ளிகள் என்ற அடிப்படையில் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தை வெற்றி கொண்டது.

மற்றுமொரு ஆட்டத்தில் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அச்சுவேலி மத்திய மகா வித்தியாலயமும் வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரி வுக்கு உட்பட்ட உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் மோதிக் கொண்டன. இதில் அமெரிக்க மிஷன் கல்லூரி முதல் இரண்டு நேர் சுற்றுக்களை 25:[illegible] புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

## புதிய வடிவமைப்பில் நாவலப்பிட்டி மைதானம்

கண்டி, நவ.8

இளைஞர் சேவை மன்றங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிக்காக நாவலப்பிட்டி ஜயதிலக மைதானம், புதிய வடிவமைப்போடு இம்மாதம் 11 ஆம் திகதி பிரதமர் டி.எம். ஜயரட்ணவால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த மைதானத்துக்காக ஏழு கோடி ஐம்பது லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

இளைஞர் விளையாட்டு விழா 11 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை நான்கு நாள்கள் நடைபெறவுள்ளது. இதற்கு முன்பாக சைக்கிள் ஓட்டப் போட்டி இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இது நாவலப்பிட்டியில் ஆரம்பித்து கம்பளை, பேராதனை, கலஹா சந்தி, மாக்கந்த வழியாக கம்பளை சென்று மீண்டும் நாவலப்பிட்டியில் முடிவுபெறும்.

11 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆரம்ப விழாவுக்கும், 14 ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதி விழாவுக்கும் இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும, பிரதியமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, மத்திய மாகாண அளுநர் டிக்கிரி கொப்பே கடுவ, முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த)

## புதிய சாதனை

வலி.வடக்கு, நவ.8

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான மெய்வன்மைப் போட்டியில் குண்டெறிதலில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ரி.அனுசாவின் 2010 ஆம் ஆண்டு பெறுபேறான 11.50 மீற்றர் புதிய சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது.

வட மாகாண விளையாட்டுத் திணைக்களம் கடந்த மூன்று ஆண்டுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் சாதனைப் பட்டியலைப் பதிவுசெய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

2007, 2009, 2010 ஆம் ஆண்டுகளில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ரி.அனுசாவின் பெறுபேறுகளாக முறையே 11.28 மீற்றர், 10.64 மீற்றர், 11.50 மீற்றர் என்பன பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையிலேயே 2010 ஆம் ஆண்டின் ரி.அனுசாவின் பெறுபேறான 11.50 மீற்றர் புதிய சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது. (எ-86)

## யாழ்ப்பாணக் கல்லூரி - ஸ்கந்தா மோதல்; இரு அணிகளுக்கு தலா இரண்டு வெற்றி

யாழ்ப்பாணம், நவ.8

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் 18, 13 வயதுப் பிரிவுகளில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும் 21,16 வயதுப் பிரிவுகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் வெற்றியீட்டின.

சுன்னாகம் ஸ்கந்வரோதயக் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த வாரம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் முதலில் இடம்பெற்ற 13 வயதுப் பிரிவுக்கான ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை வீழ்த்தியது.

எனினும் 16 வயதுப்பிரிவினருக்கான போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியை வென்றது.

அடுத்து நடைபெற்ற 18 வயதுப்பிரிவினருக்கான போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 5:0 என்ற கோல் கணக்கில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை வென்றது.

இறுதியாக நடைபெற்ற 21 வயதுப்பிரிவினருக்கான போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 1:0 என்ற கோல் அடிப்படையில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை வென்றது. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணம் இலங்கைக்கு; ஆறுதல் வெற்றி ஆஸிக்கு!

இலங்கைக்கு எதிரான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி இலகு வெற்றிபெற்றது. எனினும், 2-1 என்ற கணக்கில் தொடரை இலங்கை கைப்பற்றியது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில், முன்னர் நடந்த இரண்டு போட்டிகளிலும் இலங்கை அணி வெற்றிபெற்றது.

இந்நிலையில் நேற்று மூன்றாவது போட்டி நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 32 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து வெறும் 115 ஓட்டங்களையே பெற்றது. தரங்க (28), சில்வா (33) ஆகியோர் தவிர ஏனைய வீரர்கள் எவரும் இரட்டை இலக்க ஓட்ட எண்ணிக்கையைத் தொடவில்லை.



ஆஸ்திரேலிய அணி சார்பாக பந்து வீச்சில், மைக்கேய் 5 விக்கெட்டுகளையும், ஸ்ரார்க் 4 விக்கெட்டுகளையும், வோட்சன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 116 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய ஆஸி., 21.4 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது.

இதன் மூலம் 8 விக்கெட்டுகளால் இலகு வெற்றிபெற்றது.

ஆகக் கூடுதலாக கிளார் 50 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

ஆட்டநாயகனாக மைக்கேய் தெரிவுசெய்யப்பட்டார். தொடரின் நாயகனாக மலிங்க தெரிவுசெய்யப்பட்டார்.

நேற்றுடன் முடிவுற்ற இந்தத் தொடரை, இலங்கை அணி 2-1 என்ற கணக்கில் - முதல் முதலாக ஆஸி. மண்ணில் கைப்பற்றி சரித்திரம் படைத்துள்ளது.

# ஈரான் பயிற்சியாளராகிறார் மரடோனா



மரடோனாவை ஈரான் அணியின் பயிற்சியாளராக்குவதற்கான பேச்சுகள் நடந்துவருகின்றன எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஆர்ஜென்ரீனா அணியின் பயிற்சியாளராக இருந்த மரடோனா, உலகக் கிண்ணத் தோல்விக்குப் பின்னர் பதவிநீக்கம் செய்யப்பட்டார்.

தற்போது மரடோனா எந்த அணிக்கும் பயிற்சியாளராகப் பொறுப்பேற்காத நிலையில், அவரை ஈரான் அணியின் பயிற்சியாளராக நியமிக்க பேச்சுகள் நடந்து வருகின்றன.

இந்த பேச்சுகளில் மரடோனா நேரடியாகப் பங்கேற்கவில்லை. மரடோனா சார்பாக அவரது தொடர்பாளரே பேச்சுகளை நடத்திவருகின்றனர். இதற்காக அவர்கள் கடந்த வெள்ளியன்று டெக்ரான் சென்றனர்.

அவர் ஈரான் உதைபந்தாட்டச் சங்கத் தலைவரான அலி காபாஷியனுடன் பேச்சுகளில் ஈடுபட்டு வருகிறார்.

இதற்கிடையே மரடோனா, ஈரான் ஜனாதிபதி மக்மூத் அக்மதி நிஜாதிக்கு தமது 10ஆம் இலக்க ஆர்ஜென்ரீன ஜெர்சி ஒன்றைப் பரிசாக அனுப்பியுள்ளார்.

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான கிரிக்கெட்: 4ஆவது போட்டியில் பாகிஸ்தான் வெற்றி!

அபுதாபி, நவ. 8

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 4ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி ஒரு விக்கெட்டால் வெற்றிபெற்றது.



யூனிஸ் கான்

தென்னாபிரிக்கா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 4ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி அபுதாபியில் பகல்-இரவு ஆட்டமாக நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 274 ஓட்டங்களைச் சேர்த்தது.

அதிகபட்சமாக அணித் தலைவர் ஸ்மித் 92 ஓட்டங்களையும், டிவில்லியர்ஸ் 49 ஓட்டங்களையும், டுமினி 36 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

பாகிஸ்தான் அணி சார்பாக பந்துவீச்சில், அக்தர், ரியாஸ், ஹபீஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்கள்.

பின்னர் 275 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 49.5 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 275 ஓட்டங்களைச் சேர்த்தது.

இதனால் ஒரு பந்து மீதமிருக்க ஒரு விக்கெட்டால் வெற்றிபெற்றது.

ஆகக் கூடுதலாக யூனுஸ் கான் 73 ஓட்டங்கயையும், ஹபீஸ் 42 ஓட்டங்களையும், பெற்றுக்கொடுத்தனர்.

தென்னாபிரிக்க அணி சார்பாக பந்துவீச்சில், மோர்னே மோர்கல் 3 விக்கெட்டுகளையும், ஸ்ரெயின், போத்தா, கலிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக பாகிஸ்தான் வீரரான யூனுஸ்கான் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி, 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் போட்டித்தொடரை 2-2 என்ற கணக்கில் சமன் செய்துள்ளது. கடைசிப் போட்டி இன்று நடக்கிறது.




# குடித்துவிட்டு பெண்களைக் கேலி செய்த கிப்ஸ்!

ஜோகனஸ்பேர்க், நவ. 08

தென்னாபிரிக்க வீரரான ஹெர்ஷல் கிப்ஸ் ஹொட்டல் ஒன்றில் குடித்துவிட்டு, பெண்களைக் கேலி செய்துள்ளார். இது தொடர்பான விடயங்களை வெளியிட்டு, பரபரப்பு ஏற்படுத்தியுள்ளார் முன்னாள் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர்.

தென்னாபிரிக்க அணியின் சர்ச்சைக்குரிய வீரர் கிப்ஸ். இவர், 'டு த பொய்ன்ட்' என்ற தமது சுயசரிதையில் சக வீரர்கள் பற்றி மோசமான தகவலை வெளியிட்டார். இதையடுத்து, இவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்நிலையில், தென்னாபிரிக்க அணியின் முன்னாள் பயிற்சியாளரான மிக்கி ஆர்தர், கிப்ஸ் வழியிலேயே பதிலடி கொடுத்துள்ளார். 'சுடேக்கிங் த மிக்கே' என்ற தமது சுயசரிதையில் கிப்ஸ் பற்றிய உண்மைகளைப் போட்டு உடைத்துள்ளார். இப்புத்தகத்தில் மிக்கி ஆர்தர் எழுதியிருப்பவை வருமாறு:-

2008இல் நடந்த பங்களாதேஷ் அணிக்கு எதிரான தொடரின் போது, ஹொட்டல் ஒன்றினுள் புகுந்த கிப்ஸ், அளவுக்கு அதிகமாகக் குடித்தார். தாம் ஒரு சர்வதேச வீரர் என்பதையும் மறந்து ஏதேதோ உளறினார். மற்றவர்களிடம் மரியாதை குறைவாகப் பேசி, வீண் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அங்கு நடந்த விழாவில் பங்கேற்ற தொழிலதிபர்களின் மனைவிகளைப் பார்த்து தவறான முறையில் பேசினார். பெண்களைப் பார்த்துக் கேலி செய்தார். அவர்களது உடைகள் குறித்து வாய்க்கு வந்தபடி விமர்சித்தார்.

இவரைச் சமாதானப்படுத்த முடியாத ஹோட்டல் நிர்வாகிகள், அணித்தலைவர் ஸ்மித் மற்றும் துணைப் பயிற்சியாளர் வின்னி பார்ன்சிடம் முறைப்பாடு செய்தனர்.



இப்பிரச்சினை தொடர்பாக வோண்டரர்சில் உள்ள 'ஜிம்' அகடமியில் வைத்து கிப்ஸைச் சந்தித்துப் பேசினோம். அப்போது, நானும் அணியின் முகாமையாளரான டோக் மூசாஜியும் கடுமையாக எச்சரித்தோம்.

பல முறை அபராதம் விதித்தும், தொடர்ந்து சர்ச்சையில் ஈடுபடுவதால், அணியில் இடம் பெறுவது கடினம் என்று கூறினோம். குடிப்பழக்கத்திலிருந்து மீள்வதற்கான மறுவாழ்வு மையத்துக்குச் சென்று சிகிச்சை பெறும்படி மூசாஜி அறிவுறுத்தினார். இதனால், 6 வாரங்கள் வரை கிரிக்கெட் விளையாட முடியாத நிலைக்கு கிப்ஸ் தள்ளப்பட்டார்.

அணியிலிருந்து நீக்கப்பட்டமையால், கடும் ஆத்திரமடைந்தார். தம் பக்கம் நியாயம் இல்லாதமையால், எங்களை எதிர்த்து அவரால் பேச முடியவில்லை. மறுவாழ்வு முகாமிற்குச் செல்லவில்லை என்றால், அணியில் இடம் பெற முடியாது என்பதால் சில நாள்கள் யாரிடமும் பேசாமல் அமைதியாக இருந்தார்.

பின்னர் அவரது தொடர்பாளர் கமின்ஸ் உள்ளிட்ட மிகவும் நெருக்கமானவர்களிடம் விசாரித்தபோது, சிகிச்சை மேற்கொள்வதற்காக கிப்ஸ் முன்பதிவு செய்த விவரம் தெரிய வந்தது.

- இவ்வாறு மிக்கி ஆர்தர் குறிப்பிட்டுள்ளார்.

# நிற்னி மீது சாடல்

தென்னாபிரிக்க அணியின் கறுப்பு இன வீரரான நிற்னி, விரைவில் ஓய்வு பெறவுள்ளார். இவரைப் பற்றிய சில விடயங்களையும் தமது சுயசரிதையில் மிக்கி ஆர்தர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் கூறியிருப்பவை வருமாறு:-

வீரர்களின் நிறம் முக்கியமல்ல. அவர்களது திறமை அடிப்படையில்தான் அணிக்குத் தேர்வு செய்ய வேண்டுமென நிற்னி வலியுறுத்துவார். ஆனால், மோசமான ஆட்டத்திறன் காரணமாக அவரை நீக்கியபோது, தமது கருத்தை மாற்றினார். கறுப்பு இன வீரர்கள்இடம்பெறுவதை நானும் அணித் தலைவர் ஸ்மித்தும் விரும்பவில்லை என்று கிரிக்கெட் சபை நிர்வாகிகளிடம் முறைப்பாடளித்தார்.

இதன் மூலம் நிற்னியின் இன்னொரு முகம் தெரிய வந்தது. இவர் மீதான மதிப்பும் குறைந்தது. இவரது செயலை நினைத்து மிகவும் வருத்தப்பட்டேன்.

- இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தடுமாறுகிறது இந்தியா!

நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் ஆடிவரும் இந்திய அணி, நேற்று ஆட்ட நேரம் முடியும் போது 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 82 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாற்றம் கண்டுள்ளது. முதல் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதல் இன்னிங்ஸிற்காக 487 ஓட்டங்களைப் பெற்றது. பின்னர் தனது இன்னிங்ஸை ஆடிய நியூஸிலாந்து அணி, 459 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆடிவரும் இந்திய அணி, நேற்று ஆட்ட நேரம் முடியும்போது 6 விக்கெட்டுகள் இழப்புக்கு வெறும் 82 ஓட்டங்களையே பெற்றுள்ளது.

ஆகக் கூடுதலாக லக்ஷ்மன் 34 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காது களத்தில் உள்ளார். அவருடன் ஹர்பஜன் சிங் 12 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார்.

நியூஸிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில், மார்டின் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

நேற்றுவரையான முடிவுகளின்படி, இந்திய அணி 110 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

இன்று ஆட்டத்தின் கடைசிநாள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோட்டார் குண்டுகள் வாழைச்சேனையில் மீட்பு

வாழைச்சேனை, வட்டவான் பிரதேசத்தில் நேற்று காலை 7 மணியளவில் 7 மோட்டார் வெடிகுண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் மூலம் வட்டவான் பிரதேசத்தில் வெற்றுக் காணி ஒன்றில் புதைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. இவற்றை அழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த குண்டுகள் விடுதலைப் புலிகளால் முன்னர் புதைக்கப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கும் பொலிஸார் அது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அப்பகுதியில் மேலும் இவ்வாறான குண்டுகள் இருக்கின்றனவா? என்று விசாரணையை முடுக்கி விட்டுள்ளனர். (ஒ-21)

**ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டம்:**

## வவுனியாவில் நாளை விளக்கக் கூட்டம் நாளை மறுதினம் யாழ்ப்பாணத்தில்

மஹிந்த சிந்தனையின் கீழ் ஆயிரம் பாடசாலைகளின் கட்டுமான வசதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டம் தொடர்பான விளக்கக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை வவுனியாவிலும் நாளைமறுதினம் புதன்கிழமை யாழ்ப்பாணத்திலும் நடைபெறவுள்ளதாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கான அபிவிருத்தி தொடர்பாக விளக்கக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வவுனியா இறம்பைக்குளம் திருக்குடும்பக் கன்னியர்மட மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளின் அபிவிருத்தித் தொடர்பான விளக்கக் கூட்டம் நாளைமறுதினம் 10ஆம் திகதி புதன்கிழமை முற் பகல் 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டங்களுக்கு அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நாளை யாழ்ப்பாணத்திலும் நாளை மறுதினம் வவுனியாவிலும் இந்த விளக்கக் கூட்டங்கள் நடைபெறும் என்று முன்னர் செய்திகள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-16)

## விடுமுறை கழிக்க வந்தவர் நீரில் மூழ்கி மரணம்

பதுளையில் இருந்து விடுமுறையைக் கழிப்பதற்காக பாசிக்குடாவுக்கு சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார். இவரின் சடலத்தைத் தேடும் பணி தொடர்கிறது. (ஐ)

## கிராமங்களின்...

*(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

முதலில் தலைவர் பதவிக்கும் பின்னர் பிரதித்தலைவர் பதவிக்கும் விருப்பம் தெரிவித்திருந்த பிரேமதாச கட்சியின் திட்டங்கள் செயல்படும் அதேவழியில் இவ்வாறு முரண்பட்டு நிற்பது கட்சியின் தலைவர்களுக்குப் பெரும் சவாலாக எழுந்துள்ளது.

இதேவேளை பிரேமதாச தமது முக்கிய எதிரியான ரவி கருணாநாயக்கவுடனும் மோதலில் ஈடுபட்ட சம்பவம் வெளியாகியுள்ளது.

புலிகளுக்கு ரணசிங்க பிரேமதாச ஆயுதம் வழங்காமல் இருந்திருந்தால் பிரிவினைவாதப் போர் மிக நேரத்துடனேயே முடிவுக்கு வந்திருக்கும் என்று கருணாநாயக்க கூறியிருந்தார். இதற்கு சஜித் வெளியிட்டுள்ள ஒரு எதிர்த்தாக்குதலில் ஆயுதப் படையினரின் வெற்றியை ரவி கருணாநாயக்க ஏளனம் செய்திருந்தார் என்றும் அலிமங்கட (ஆனையிறவு) வெற்றியை பாமன்கட (கொழும்பு தெற்கில் உள்ள சிறு நகரம்) என்று ஒப்பிட்டு கிண்டல் செய்திருந்தார் எனவும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறாக கட்சித் தலைவர் விக்கிரமசிங்காவின் நெருக்கடிகள் ஓரளவுக்கு முற்றுப் பெற்றுள்ளன அல்லது தீர்ந்து போய் விட்டதாகவும் கருதலாம்.

சில மாதங்களுக்குமுன் அவரே அதிக விமரிசனங்களுக்குள்ளாகியிருந்தவர். அதன் காரணமாகவே ஐ.தே.கட்சியின் சீர்திருத்தக் குழு உருவானது. அது பல மாற்றங்களுக்கு சிபாரிசு செய்தி ருந்தது. இதன் விளைவாக இன்னுமொரு குழு உருவாக்கப்பட்டு அது நகல் வரைவு ஒன்றை உருவாக்கியுள்ளது. அதுவும் இம்மாதம் செயல் குழுவின் ஆலோசனைக்கு வரவிருக்கின்றது. அதன் பின்னர் டிசெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் கட்சியின் வருடாந்த மாநாட்டின் அங்கீகாரத்துக்கு அது சமர்ப்பிக்கப்படும். இடையில் விக்கிரம சிங்கவிலிருந்து கவனம் வேறு பக்கம் திரும்பியுள்ளது. அதனைத் தீர்த்துக் கொள்வதற்கு ஏனையவர்கள் மோதிக் கொள்கிறார்கள்.

# மரண அறிவித்தல்கள்

## வேலாயுதம் நடராஜா (DMO)

[முன்னாள் தலைவர்- எழுவைதீவு முத்தன்காடு அருள்மிகு முருகவேள் தேவஸ்தான பரிபாலனசபை, முன்னாள் தலைவர்- எழுவைதீவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், முன்னாள் செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் யா/எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்]



எழுவைதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் நடராஜா 06.11.2010 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்- தையலம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சித்திரவடிவேல் - இராசம்மா தம்பதியரின் நேசமிகு மருமகனும், புஸ்பராணியின் பாசமிகு கணவரும், கனகேஸ்வரி (அனலைதீவு), பரமசிவம் (சாமி- உரிமையாளர் நியு ஸ்ரீ திருப்பதி றேடர்ஸ், யாழ்ப்பாணம்), ரவிச்சந்திரன் (கனடா), காலஞ்சென்ற கேதீஸ்வரி மற்றும் தனேஸ்வரி, குகச்சந்திரன் (குகன்), விக்னேஸ்வரி (வவுனியா) ஆகியோரின் அன்புத்தந்தையும், கேதீஸ்கரன் (அனலைதீவு), பரமேஸ்வரி (ஆசிரியை யா/திருக்குடும்ப கன்னியர்மடம்), அருள்கௌரி (கனடா), விஜகுமாரன் (வவுனியா) ஆகியோரின் மாமனாரும் பிரசாந், நந்துஷா, சானுஜா, சஜீவன், சதுஜா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2010) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எழுவைதீவு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2ஆம் வட்டாரம், எழுவைதீவு.
0773024195 (105705)

தகவல்:
குடும்பத்தினர்.

## சவிரிமுத்து பிலிப் இராசநாயகம்

(கப்டன்- இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர்)



இளவாலையைப் பிறப்பிடமாகவும் கோயில் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சவிரிமுத்து பிலிப் இராசநாயகம் நேற்று (07.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து - மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும், ஜெயராணியின் பாசமிகு கணவரும், ஜெனிற்றா (கொலண்ட்), அனுஷா (பிரான்ஸ்), வினித்தா (காப்புறுதி ஒருங்கிணைப்பாளர், செலிங்கோ காப்புறுதி நிறுவனம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்ரன் இராஜநாயகம் (கொலண்ட்), ஜேம்ஸ் ஜெயரஞ்சன் (பிரான்ஸ்), ஜெயகாந்த் றொஷான் (காப்புறுதி ஒருங்கிணைப்பாளர், செலிங்கோ காப்புறுதி நிறுவனம்) ஆகியோரின் மாமனும், திருமதி. றீசா மரியாம்பிள்ளை (சிங்கப்பூர்), ஜெயசிங்கம் (ஜேர்மனி), திருமதி. பத்மா றொபேட் (அவுஸ்திரேலியா), செல்வி யூலியானா (லீலா -கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், டினேஸ் (கணக்காய்வாளர், கொலண்ட்), எரிக் நிரோஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

72A, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (105708)

தகவல்:
ஜெயராணி - மனைவி.

## நாகலிங்கம் வைத்தீஸ்வரன் *(ஈசன்)*

(முன்னாள் பருத்தித்துறை ப.நோ. கூட்டுறவுச் சங்க முகாமையாளர்)

பருத்தித்துறை, தும்பளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் வைத்தீஸ்வரன் நேற்று (07.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னார் நாகலிங்கம் - அன்னலட்சுமி தம்பதியரின் புதல்வனும், வைத்தியானந்தன், குணேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் சொ. இரவீந்திரனின் மைத்துனரும், கௌதமன், கஜந்தன், சிந்துஜா ஆகியோரின் பாசமிகு மாமனும்,ஜெயசுதா, ஜெயப்பிரியா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (08.11.2010) திங்கட்கிழமை மு.பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குணக்குன்றம், தும்பளை,
பருத்தித்துறை.
தொ.பே.021 320 7684

தகவல்.
சொ. இரவீந்திரன் - குடும்பம் (578798)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1966, சதய நட்சத்திரம், கிரகபாவம்- 19, செவ்வாய் (குற்றமற்ற), கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு அழகிய, மெல்லிய மணமகள் தேவை.

தொடர்பு- 0779905368.

## தேவை

01. தாதியர் - (தியேட்டர் அனுபவமுள்ளவர்களுக்கு அதிகூடிய வேதனம் வழங்கப்படும்)
02. தாதிய பயிலுநர்
03. மருந்தாளர்
04. காசாளர்

இவர்களுக்கான நேர்முகத் தேர்வு புதன்கிழமை 10.11.2010 முற்பகல் 10 மணிக்கு கீழ் குறிப்பிட்ட முகவரியில் நடைபெறும்.

குறிப்பு : இரவு பகல் கடமை புரியக்கூடியோர் சுயவிபரக் கோவையுடன் சமுகம் தரவும்.

**புதிய யாழ். வைத்தியசாலை**
*315, பலாலி வீதி,*
*பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.*
*தொ.பே. இல.: 021 222 3533*

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி**
**அ. மேரிநலியாற்**



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18.11.1951 | 08.11.2009 |

''ஆண்டவரே என் ஆயன்: எனக்கேதும் குறையில்லை''(திருப்பாடல் 23:1)

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (08.11.2010) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியிலும் அதைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொண்டு அவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக செபிக்கும் படியும் அனைவரையும் அழைத்து நிற்கின்றோம்.

ஐயனார் வீதி,
சுன்னாகம்,0779522431.

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 27.05.1936 — மறைவு 11.10.2010

## அமரர் நாகலிங்கம் விஜயரத்தினம்

**(இளைப்பாறிய தபால் அதிபர்)**

**17.11.2010 புதன்கிழமை**
**முற்பகல் 10 மணிதொடக்கம்**

கடந்த 11.10.2010 திங்கட்கிழமை சதுர்த்தி திதியில் சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் **அமரர் நாகலிங்கம் விஜயரத்தினம்** அவர்களது அந்தியேட்டிக்கிரியைகள் நாளை மறுதினம் (10.11.2010) புதன் கிழமை காலை 6 மணிக்கு நெல்லண்டை முத்துமாரி அம்மன் அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும்.

அந்தச்சமய நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நினைவுமலர் வெளியீடும்** 17.11.2010 புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அவரது இல்லத்தில் (நெல்லண்டை, பருத்தித்துறை) நடைபெற இருக்கிறது அவ்வைபவத்திலும் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து பங்குபற்றி அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நெல்லண்டை,
பருத்தித்துறை. (சி-572723)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## ஆசையர் கோவிந்து



வளலாய், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் புலோலி தெற்கு, சிங்கநகரை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசையர் கோவிந்து 06.11.2010 சனிக்கிழமை காலமானார். அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், வசந்தரூபன்,நாகேந்திரன், ஸ்ரீபாஸ்கரன், கருணாகரன், ஜீவரேகா, தரணிகா, தயாளினி, தர்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.11.2010) திங்கட்கிழமை ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பிறதேசங்களுக்கு மிஷன் தொண்டர்களை அனுப்பும் அமெரிக்க சங்கத்தின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த 6ஆம் திகதி சனிக்கிழமை மானிப்பாய் அமெரிக்கன் - சிலோன் மிஷன் திருச்சபை (CACM)வெகு கோலாகலமாக நிகழ்வுகளை நடத்தியிருந்தது, அங்கு எடுக்கப்பட்ட சில காட்சிகளே இங்கு காண்கிறீர்கள்.

# ஒரே நாட்டுக்குள் இறைமையுள்ள இரு தேசங்களா? பேச்சுக்கள் மூலமே இறுதித் தீர்மானத்துக்கு வரலாம்

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.8

தமிழ்த் தேசமும் சிங்கள தேசமும் சம அந்தஸ்து உடையன என்ற நிலையிலிருந்து பேச்சுக்களில் ஈடுபடவேண்டும். இறைமையுள்ள இரண்டு தேசங்கள் எவ்வாறு ஒன்றிணைந்து ஒரு நாட்டுக்குள் இருக்கமுடியும் என்பது குறித்து அந்தப் பேச்சில் இறுதித் தீர்மானத்துக்கு வரவேண்டும்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழர் தாயகப் பிரதேசத்தில் இன விகிதாசாரத்தை மாற்றியமைத்து தமிழ்த்தேசத்தை திட்டமிட்டு அழிக்கும் வகையில் ஸ்ரீலங்கா அரசினால் மேற்கொள்ளப்படும் அரச ஆதரவுடனான திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நியாயப்படுத்தும் வகையில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல வெளியிட்டுள்ள கருத்தைக் கண்டிக்கிறோம்.

தமிழ்த் தேசிய இனம் வரலாற்றுக் காலத்திலிருந்து இலங்கைத் தீவில் தனக்கென தனியானதோர் தாயகத்தையும் அதில் இறைமையையும் ஆட்சி உரிமையையும் தன்வசம் கொண்டிருந்தது. இந்நிலையில் 1505இல் போர்த்துக்கேயராலும் 1658இல் ஒல்லாந்தராலும், 1796இல் ஆங்கிலேயராலும் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ்த் தேசம் தனது இறைமையையும் ஆட்சி அதிகாரத்தையும் பிரயோகிக்க முடியாதவாறு நசுக்கப்பட்டது. எனினும் இலங்கைத் தீவில் வட கிழக்குப் பிராந்தியங்களில் காணப்பட்ட தமிழ் இராச்சியங்களையும் தெற்கில் காணப்பட்ட சிங்கள இராட்சியங்களையும் ஆக்கிரமித்த போர்த்துகேயர், 1505-1658 வரையான 153 ஆண்டுகளும் தொடர்ந்து ஒல்லாந்தர் 1658-1796 வரையான 138 வருடங்களும், பின்னர் ஆங்கிலேயர் 1796-1833 வரையான 37 ஆண்டுகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு படுத்தாமல் தனித்தனியாகவே ஆட்சி செய்தனர்.

எனினும் 1833 இல் ஆங்கிலேயர்களால் முழு இலங்கைத் தீவும் ஒரே அரசியல் நிர்வாகக் கட்டமைப்புக்குள் கொண்டுவரப்பட்டு தமிழ்த் தேசத்தின் அங்கீகாரம் இன்றி ஆங்கிலேய மேலாதிக்கத்தால் தமிழர் தாயகம் சிங்கள தேசத்துடன் ஒன்றிணைக்கப்பட்டது.

**1948 இல் தமிழருக்கு நேர்ந்த இக்கட்டு**

இவ்வாறு நிர்வாக வசதி கருதி தமிழ் இராச்சியத்தையும் சிங்கள இராட்ச்சியத்தையும் ஒன்றுபடுத்திய ஆங்கிலேயர்கள் இலங்கைத் தீவை விட்டு வெளியேறும் போது தமிழ்த் தேசத்தின் இறைமையை தமிழர்கள் பிரயோகிக்க முடியாதவாறு சிங்களவர்களிடம் ஆட்சி அதிகாரத்தை கையளித்துச் சென்றுவிட்டனர். இதனால் 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதியிலிருந்து சிங்கள தேசத்தின் தயவில் தமிழ்த் தேசிய இனத்தின் தலைவிதி தங்கியிருக்கவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டது.

ஆங்கிலேயர்களது தயவினால் கைப்பற்றிக்கொண்ட ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழ்த்தேசத்தின் இருப்பை இல்லாது அழிக்கும் திட்டங்களைத் திட்டமிட்டு அரங்கேற்றத் தொடங்கியது.

1972 இல் நிறைவேற்றப்பட்ட ஒற்றையாட்சி முறையிலான குடியரசு அரசியல் சாசனம் மூலம் தமிழ் இனத்தின் உரிமைகள் அனைத்தும் ஒட்டுமொத்தமாக மறுக்கப்பட்டது. இதன் காரணமாக தமிழ் இனம் தனது இருப்பைப் பாதுகாப்பதற்காக 1976 மே 14ஆம் நாள் தமிழரின் அரசியல் கட்சிகள், அமைப்புக்கள் ஒன்றிணைந்து தமிழ்த் தேசிய இனத்துக்கு உரித்தான சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் முழுமையான இறைமை கொண்ட சுதந்திர தமிழீழ அரசை நிறுவுவதெனத் தீர்மானித்தன.

**ஆயுதப் போராட்டம் விரிவடைந்தது**

அந்தத் தீர்மானத்தின் பிரகாரம் 1977 ஆம் ஆண்டு ஆடி மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் சுதந்திர தமிழீழத்துக்கான மக்கள் ஆணை வழங்கப்பட்டது. தமிழினத்தின் வாழ்வையும் தனித்துவத்தையும் பாதுகாக்கவும், அதன் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டவும் ஆயுதப் போராட்டமே ஒரே வழி என்ற தவிர்க்க முடியாத நிலைக்கு தமிழ்த் தேசிய இனம் தள்ளப்பட்டு ஆயுதப்போராட்டம் விரிவடைந்தது. ஆயுதப் போராட்ட பலத்தின் விளைவாக தமிழ்த் தேசத்தின் இருப்பை இல்லாமல் அழிப்பதற்கான திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற நடவடிக்கைகள் கடந்த 35 ஆண்டுகளாக மிகவும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன் அளப்பெரிய உயிர் தியாகங்களுடாக 2002 ஆண்டு சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சூழல் உருவாக்கப்பட்டது.

ஆனாலும் 2005 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுத் தலைமையானது சமாதானக் கதவுகளை முற்றாக மூடி யுத்தத்தை தீவிரப்படுத்தியது. அந்த யுத்தம் மூலம் தமிழ்த் தேசம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட தமிழ் தேசத்தின் இருப்பை அழிக்கும்வகையில் பல வேலைத்திட்டங்கள் அசுர வேகத்தில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அதன் ஓர் அங்கமான அரச ஆதரவுடனான சிங்களக் குடியேற்றங்கள் தமிழர் தாயகப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசு மேற்கொள்ளும் இந்த இன அழிப்பு நடவடிக்கையை முற்றுமுழுதாக நியாயப்படுத்தும்வகையில் அமைச்சரின் கருத்து அமைந்துள்ளது.

**சிங்களக் குடியேற்றம்**

தமிழ்த் தேசத்தில் மேற்கொள்ளப்படும் அரச ஆதரவுடனான திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக தமிழ்த் தேசத்துக்குள்ளேயே தமிழ் மக்கள் சிறுபான்மையினராக மாற்றப்படும் பேராபத்தும் உண்டு.

இவ்வாறான சூழலில் ஜனநாயக நடைமுறைகளின் படி பெரும்பான்மை விரும்பும் விடயமே தீர்மானமாக நிறைவேற முடியும். அவ்வாறன சூழ்நிலையில் தமிழ் மக்கள் தமக்கே உரித்தான தனித்துவமான இறைமைகொண்ட தேசம் என்ற நிலைப்பாட்டை இழந்தால் அவர்கள் சிறுபான்மையாக மட்டுமே இருக்க முடியும். அத்துடன் அவர்கள் விரும்பும் எந்தவொரு தீர்மானத்தையும் ஜனநாயக முறைப்படி நிறைவேற்றவே முடியாது.

அதேவேளை ''இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களும் அனைவருக்கும் சொந்தம்'' என்ற கோசத்துடன் சிங்கள மக்கள் தமிழர் தாயகத்தில் திட்டமிட்டுக் குடியேற்றப்படுவார்களாயின் அப்பகுதியில் பூர்வீகமாக வாழும் தமிழ்பேசும் மக்களைவிட எண்ணிக்கையில் பெரும்பான்மையினராகிக் கொள்ள முடியும். அத்துடன் ஜனநாயக முறைப்படி தாம் எந்தத் தீர்மானத்தையும் நிறைவேற்றிக்கொள்ளவும் முடியும்.

இந்த யதார்த்தம் சிங்கள தேசத்துக்கு நன்கு புரிந்திருக்கின்ற மையினாலேயே 1940 களில் இருந்து '' காணி எங்கு இருக்கின்றதோ அங்கு தான் காணிகளை வழங்க முடியும்'' என்று கோசமிட்டவாறு தீவிர மான சிங்கள மயப்படுத்தலை வரண்ட பிரதேச குடியேற்றங்கள் என்ற பெயரில் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளத் தொடங்கியது.

**அரசின் நிலைப்பாடு இது**

குடியேற்றங்கள் என்பது ஒரு வழிப்பாதையல்ல. சிங்களத் தேசத்து மக்கள் அரச ஆதரவுடன் தமிழ்த் தேசத்தில் குடியேற்றப்படுவார்கள். ஆனால் தமிழ்த் தேசத்து மக்கள் சிங்கள தேசத்தில் குடியேற்றப்பட [illegible] என்பதே அர சின் நிலைப்பாடாகும்.

உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் தமிழ்த் தேசத்தின் மக்களை அவர் களின் சொந்த மண்ணில் இருந்து வெளியேற்றி மீண்டும் குடியேற விடாமல் அவர்கள் அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும்முடக்கி வைத்துக் கொண்டு சிங்கள தேசத்து மக்கள் தமிழ்த் தேசத்தில் எங்கும் சென்று குடியேறலாம். என்று அவர்களுக்கு அரசு அழைப்பு விடுவதன் நோக்கம் இன விகிதாசாரத்தை மாற்றியமைப்பதேயாகும்.

வரலாற்று ரீதியாக தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்துவந்துள்ள இலங்கைத் தீவின் வட கிழக்கு பிராந்தியம் தமிழ் பேசும் மக்களுக்கு உரித்துடைய தாயகப் பிரதேசமாகும். அது அவர்களின் பிறப்புரிமை. இதனை மறுக்க சிங்கள அரசுக்கு எந்த உரிமையோ, அதிகாரமோ இல்லை. தமிழ்த் தேசத்தில் ஏனைய இனத்தவர்கள் குடியேற்றப்படலாமா? இல்லையா? என்பதனைத் தீர்மானிக்கும் உரிமை தமிழ்த் தேசத்துக்கு மட்டுமே உண்டு. இது தமிழ்த் தேசத்துக்குள்ள தனித்துவமான இறைமையின் வழிவந்த அதிகாரமாகும்.

தமிழ்த் தேசத்தின் இருப்பை அழிக்க சிங்கள தேசம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எதிராக ஜனநாயக ரீதியிலான எதிர்ப்பு நடவடிக்கைகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தொடர்ந்து உறுதியுடன் மேற்கொள்ளும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்னும் போது, தமிழ்த்தேசத்துக்கு தனித்துவமான இறைமை உண்டு என்ற யதார்த்தம் அங்கீகரிக்கப்படவேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட நிலையில் தமிழ்த் தேசமும் சிங்கள தேசமும் சம அந்தஸ்து உடையன என்ற நிலையில் இருந்து பேச்சுக்களில் ஈடுபட்டு இறைமையுள்ள இரண்டு தேசங்கள் எவ்வாறு ஒன்றிணைந்து ஒரு நாட்டுக்குள் இருக்க முடியும் என்பது பற்றிய இறு தித் தீர்மானத்துக்கு வரவேண்டும் - என்று ள்ளது.

(ஒ-ஐ)

# உல்லாசப் பயணிகள் வருகை அதிகரிப்பு ஆறு இலட்சத்து 50 ஆயிரம் பேர் இலக்கு

கொழும்பு,நவ.8

இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளின் தொகை துரிதமாக அதிகரித்து வருகிறது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் உல்லாசப் பயணிகளின் வருகை 36 சதவீதத்தால் அதிரிகரித்துள்ளது என அரசு தெரிவித்துள்ளது.

இவ்வருட இறுதிக்குள் 5 லட்சம் உல்லாசப் பயணிகள் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும், பிந்திய புள்ளி விவரங்களின் பிரகாரம் ஆறு இலட்சத்து ஐம்பது ஆயிரம் உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது என அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை அரசு யுத்தத்தில் வெற்றி பெற்றுள்ளதையடுத்து சுதந்திரமாக விஜயம் மேற்கொள்ளக்கூடிய 32 நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இடம்பிடித்துள்ளது.

அத்துடன், இலங்கையில் அமைதிச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் இலங்கை மீது விதிக்கப்பட்டிருந்த பயணத்தடையை சில ஐரோப்பிய நாடுகள் நீக்கியுள்ளன. இவை அனைத்தும் இலங்கை உல்லாசப் பயணத் துறையின் வளர்ச்சிக்கு வழிகோலியுள்ளன எனவும் அரசு தெரிவித்துள்ளது. (ஓ)

## மரண அறிவித்தல்

### திருமதி சரத்பஞ்சாட்சரம் கனகலட்சுமி

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரத்பஞ்சாட்சரம் கனகலட்சுமி(வசந்தி) நேற்று (07.11,2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகையா மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மதியாபரணம் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், சரத்பஞ்சாட்சரத்தின் (நாதன்) அன்பு மனைவியும், மதுஷாவின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற சபேசன் மற்றும் தியாகேசன், தனபாலன், காலஞ்சென்ற ஜெகன் மற்றும் மோகன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரத்விஜயானந்தன் (மோகன்), கோமளவதனி(வதனி), சரத்தர்மரட்ணம் (கண்ணன்), சிவமலர், பத்மா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2010) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம், சுழிபுரம்
0777973524

(105709)

தகவல்:
கணவர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய வம்சாவளித் தமிழர்களின் நலனில் இந்திய அரசு கரிசனை

## தூதர் அசோக் கே காந்தா தெரிவிப்பு

கொழும்பு, நவ. 08

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழ்ச் சமூகத்தின் நலன் தொடர்பான வேலைத்திட்டங்களை இந்திய அரசு முன்னெடுத்து வருகின்றது - என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா தெரிவித்துள்ளார்.

இந்தியத் தூதரகத்தால் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய மாணவர்களின் நலன் கருதி மினி பஸ் ஒன்று வழங்கப்பட்டது. இந்தப் பஸ்ஸை உத்தியோக பூர்வமாக பாடசாலைக்குக் கையளிக்கும் நிகழ்வு நேற்று தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

தலவாக்கலைத் தமிழ் மகா வித்தியாலயத்திற்கு இந்தப் பஸ்ஸை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இந்திய அரசினதும் இந்திய மக்களினதும் ஒரு சிறிய உதவியாகவே இதனை நாம் கருதுகின்றோம். இந்த பஸ்ஸானது இந்தப் பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும் என்று நம்புகிறேன். இந்தப் பஸ்ஸை பெற்றுக்கொள்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வு என்னை மெய் சிலிர்க்க வைத்துள்ளது.

என்னை உற்சாகமாக வரவேற்ற அனைவருக்கும் இந்தத் தருணத்தில் எனது தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்திய அரசு இலங்கையிலுள்ள பல்வேறு அமைப்புகளுக்கு இதுவரை 55 பஸ்களை 55 வழங்கியுள்ளது. இந்தியாவும் இலங்கையும் மிகவும் நட்புறவான நாடுகளாகும்.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களான பெருந்தோட்ட மக்களிடத்தில் இந்திய அரசு கூடிய கவனம் செலுத்தி வருகின்றது.

இந்த மக்களின் வீடமைப்பு, சுகாதாரம், கல்வி ஆகியன தொடர்பில் வேலைத்திட்டங்களை முன்வைத்து அவற்றை மேற்கொண்டு வருகின்றோம்.

இதனடிப்படையில் இந்திய - இலங்கை அரசுகளால் மேற்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையின் அடிப்படையில் 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்துக்கொடுப்பதற்கு இந்திய அரசு முன்வந்துள்ளது. இந்த வீடுகளில் 5 ஆயிரம் வீடுகள் மத்திய மாகாணத்திலுள்ள பெருந்தோட்டப்பகுதிகளில் நிர்மாணிக்கப்படவுள்ளன.

அத்துடன் ஹட்டன் டிக்கோயா கிளங்கன் மாவட்ட வைத்தியசாலையை 150 படுக்கைகள் கொண்ட வைத்தியசாலையாகத் தரமுயர்த்தும் பணிகளை எதிர்வரும் ஒரு மாதத்திற்குள் இந்திய அரசு ஆரம்பிக்கவுள்ளது. மேலும் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த பெருந்தோட்டப்பகுதி மாணவர்களின் உயர் கல்விக்காக இந்திய அரசு புலமைப்பரிசில் திட்டமொன்றையும் இன்னும் ஓரிரு வாரங்களில் ஆரம்பிக்கவுள்ளது.

பெருந்தோட்டப்பகுதி மக்களின் வீடமைப்பு, கல்வி, சுகாதாரம் தொடர்பிலான இந்திய அரசின் இத்தகைய வேலைத்திட்டங்களைப் படிப்படியாக முன்னெடுப்பதில் அக்கறையுடன் செயற்படுவோம்.

- இப்படி அவர் கூறினார். (சி)

### மனிக் பாம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று தினங்கள் இடம் பெறும்.

வசதிகள் குறைந்த முகாமுக்கு கொண்டு செல்லும் முயற்சியை ஆரம்பத்தில் நாங்கள் எதிர்த்தோம். ஆனால் கையாலாகாத நிலையில் தற்போது வசதிகுறைந்த இடத்துக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்று முகாம் வாசிகள் கவலையுடன் தெரிவித்தனர். (ஒ-ஐ)

### கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் 50 மீற்றர் தூரம் அளவுக்கு கடல் நீர் உட்புகுந்துள்ளது. இதனால் 20க்கும் மேற்பட்ட மீன்பிடிப் படகுகள் சேதமடைந்துள்ளன என்றும் மக்கள் மிகவும் அச்சமடைந்துள்ளனர் என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ-சி)

### நீதிமன்றக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்மாணிக்கப்பட்டுள்ள இக்கட்டடத் தொகுதியில் மஜிஸ்திரேட் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், உயர் நீதிமன்றம், சட்ட உதவிக் காரியாலயம், தொழில் நியாய சபை, என்பவையும் உள்ளடங்கியுள்ளன. அத்துடன் இவை நவீன வசதிகளைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, பிரதி நீதி அமைச்சர் ரெஜினோல்ட் குரே உட்பட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

ACA கோவில் வாசல், கே.கே.எஸ். வீதி, இணுவில்.
பௌதிகவியல்
A/L 2011 சடப்பொருளியல்
(மேற்பரப்பு விசை)
திரு. குமரன்
ஆரம்பம்: 10.11.2010 (புதன்) 4.30p.m.

PRINTER REPAIRS
hp EPSON LEXMARK SAMSUNG Canon
12 years experience in the field of computer hardware industry
CALL US
0217913020, 0777425974
DO SMS
Flexible working time Mon-Sat 9am to 6 pm
MICRO PC SYSTEMS
இல. 13, 2ம் ஒழுங்கை, ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணம்.
நெல்லியடி கொடிகாமம் வீதி நெல்லியடி. 0773039536

### கணினி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திருப்போர் அனைவரதும் தகவல்கள் விரைவில் கணினிமயப்படுத்தப்பட உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்

2010 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் சகல மாணவர்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### நல்லூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆறு நாள்களும் ஆலய சுற்று வீதிகளில் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடிகளைத் தவிர்க்கும் முகமாக வீதித் தடைகள் போடப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் அரசடிச்சந்தி,கோயில் வீதி, சங்கிலியன் வீதிச் சந்தி,பருத்தித்துறை வீதியில் மாநகரசபை அலுவலகத்திற்கு முன்பாக, செட்டித்தெரு ஒழுங்கைச் சந்தி, பிராமணக் கட்டுக்குளம் (ஜி.ரி.இசற் அலுவலகம் முன்பாக) ஆகிய ஐந்து இடங்களிலும் தினமும் பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணிவரை வீதித் தடைகள் போடப்பட்டிருக்கும்.

முருக பக்தர்களின் மன அமைதிக்காக இத் தற்காலிக வீதித் தடைகளை அனுசரித்து வட பிராந்திய போக்குவரத்துச் சபையினர் ,மினிபஸ் சங்கத்தினர்,பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் பொலிஸார் ஆலய சூழலூடான போக்குவரத்தை நிறுத்தி மாற்று வழியைப் பயன்படுத்துமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். (ஒ-16)

### நல்லிணக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு, கொழும்பு எனப் பல பாகங்களிலும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் மூலம் சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் வாரங்களில் ஆணைக்குழுவின் அமர்வுகள் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் பரவலாக மேற்படி ஆணைக்குழுவின் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், மன்னார் மாவட்டத்தில் அதன் விசாரணைகள் முன்னெடுக் கப்படவில்லை.

இந்நிலையிலேயே ஆயர் வண. இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை நல்லிணக்க ஆணைக்குழுவின் செயலாளரிற்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கின்றார்.

ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டிருக்கும் அக்கடிதத்தில் மன்னார் மாவட்டத்தில் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ)

### மரணச் சான்றிதழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மரணச் சான்றிதழ்களைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

பொது நிர்வாக உள்துறை அமைச்சர் ஜோன் செனிவிரத்ன இந்தச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் நாளை சமர்ப்பிப்பார்.

இச்சட்ட மூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர் யுத்தம் மற்றும் பயங்கரவாத வன்முறைச் சம்பவங்களில் காணாமற்போன, கொல்லப்பட்ட அரச ஊழியர்களின் குடும்பத்தினர் மற்றும் உற வினர்கள் நஷ்ட ஈடு மற்றும் ஏனைய அரசின் கொடுப் பனவுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருக்கும். (உ)

### குவைத்திலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இவர்கள் குவைத் நாட்டில் பல்வகையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து, அந்நாட்டில் அமைந்திருக்கும் இலங்கைத் தூதரகத்தில் தஞ்சம் புகுந்திருந்தனர் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு அழைத்து வரப்படுபவர்களிடம் அந்நாட்டில் அனுபவித்த இன்னல்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாகவும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் மேலும் அறிவித்துள்ளது. (சி)

### கைதிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீது சிறைக்கைதிகள் தாக்குதல் நடத்தியதாலேயே பொலிஸார் படுகாயமுற்றனர் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சிறைக் கைதிகளினால் பொலிஸாரது சீருடைகள் மற்றும் அவர்களிடமிருந்த அனைத்துப் பொருள்களும் கொள்ளையிடப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின் றது. இதேவேளை, காயமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ள அனைவரும் பொலிஸார் எனவும் காயமுற்ற சிறைக்கைதிகள் சிலர் சிறைச்சாலை வைத்தியசாலையில் இருப்பதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இதேவேளை, இந்த மோதல் காரணமாக சில பொலிஸார் காணாமற்போயுள்ளனர் என்றும் இவர்களைத் தேடும் நடவடிக்கைகள் சிறைச்சாலைக்குள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் வட்டாரங்கள் நேற்றுப் பகலில் தெரிவித்தன.

''சிறைக் காவலர்கள் சிறைக் கைதிகளுடன் நெருங்கிப் பழகுவதால் கடமைகளை முறையாக மேற்கொள்வதில்லை. எனவே சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்க பொலிஸாரை ஈடுபடுத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டது'' - என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு பிரதியமைச்சர் விஜிதமுனி சொய்ஸா தெரிவித்தார்.

சிறைச்சாலையில் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதே வேளை-

வெலிகடைச்சிறைச்சாலையில் பொலிஸாருக்கும் சிறைச்சாலைக் கைதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கைகலப்புக் குறித்து விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை சீரமைப்பு அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவித்தார்.

நாடுமுழுவதும் போதைவஸ்து தொடர்பாகப் பொலிஸார் நடத்திவரும் தேடுதல்களில் ஓர் அங்கமாகவே நேற்று சோதனை நடத்தச் சிறைச்சாலைக்கு பொலிஸார் சென்றனர் என்றும் அவர் மேலும் கூறினார். (உ-ஐ-சி)

ஆரோக்கியமாக வாழ்வதற்கு



எம்மத்தியில் காணப்படும் பெரும்பாலான நோய்களுக்கு திட்டமிடப்படாத உணவுப் பழக்கமும் உடற்பயிற்சி இன்மையுமே காரணம் என்பது அறிஞர்கள் கருத்து. உடற்பயிற்சி யார் யாருக்கு அவசியம்?
* உடல் பருத்தோர் * ஆண்கள் * பெண்கள்
* வயதுவந்தோர் என அனைவருக்கும் அவசியமானது

நீங்கள் தினமும் ஒரு மணி நேரத்தை உடற் பயிற்சிக்காக ஒதுக்கி எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.
அதன் ஊடாக:
*நோய் நொடியற்ற சந்தோசமான வாழ்க்கை யைத் தொடங்குங்கள்
* உடல் எடையைக் குறைத்து மன அழுத்தத்தில் இருந்து விடுதலை பெறுங்கள்.
இயந்திரமயமான உங்கள் வாழ்க்கையில் இந்த ஒரு மணிநேரம் சந்தோசமாகவும் புத்துணர்ச்சி ஏற்படுத்துவதாகவும் அமையும் என நம்புகின்றோம்.



Electric treadmill, Cross trainer மற்றும் ab circle ஊடாக பயிற்சி மேற்கொள்வதன் மூலம் உங்கள் உடற்பருமனை குறைத்துக் கொள்ளலாம்.
காலை 5.30-மதியம் 12.00, மாலை 3.30-இரவு 9.00



Power Gym
Body Care & Fitness Centre
218,கோயில் வீதி (நல்லூர் ஆலயம் அருகில்) யாழ்ப்பாணம். 0772209478
230/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (Only for Ladies)
38, உடுவில் வீதி, மானிப்பாய். 0779846085

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org